ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

31] விரோதிகிருது ஆண்டு கார்த்திகைத்திங்கள் 10—12—7 [இத



தருமையாதீனக்குருமுதல்வர்

ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள்

உ

குருபாதம்

ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருள்வாக்கு

தேசம் சிவாலயங்கள்
 சேர வலையொரு
மோசம் வந்ததையோ
 முதல்வனே — தேசத்து
மன்னைவெறுப் பேறே
 வருவினையை ஊட்டுவிக்கும்
உன்னைவெறுப் பேறே
 உரை. (106)

ஆசிரியர் :

வித்துவான்
இராமலிங்கத் தம்பிரான்
சுவாமிகள்

துணையாசிரியர் :

மகாவித்துவான்
A. அருணைவடிவேல் முதலியார்

உ

குருபாதம்

"ஞானசம்பந்தம்"

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 31 ‖ 10-12-71 ‖ இதழ் 1

உட்பொருள்

எண்		பக்கம்
1	வாழ்த்தும் வணக்கமும்	1
2	ஞானசம்பத்தம் ஆற்றிய நற்பணிகள் ...	6
3	ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் ஆசியுரை ...	8
4	குருவருள் மொழி ...	11
5	குரு பரம்பரை ...	16
6	பாரதியார் பாட்டு நலம் ...	33
7	திருவையாற்றுப் பதிற்றுப்பத்தந்தாதி	37
8	ஏழாந் திருமுறையில் சாத்திர நோக்கு ...	41
9	இருவகைப் புணர்ச்சியில் எழுத்துப்பேறும் சாரியையும் ...	44
10	பக்தர்கள் பணிவுரைக் கூட்டமும், நினைவு மலர் வெளியீடும் ...	49
11	ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் அருளிய வாழ்த்துரை ...	63
12	வாழ்த்தும் அஞ்சலியும் ...	68
13	செய்திகள் ...	84
14	எதிர்காலம் ...	93
15	திருவருள் அழைக்கிறது	97

தருமையாதீனக் குருமுதல்வர்

ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள்

உ

சிவமயம்

"ஞானசம்பந்தம்"

புத்தாண்டு வாழ்த்து

தித்திக்கும் தெள்ளமுதாய், தெள்ளமுதின் மேலான
முத்திக் கனியாய், முகிழ்த்துவந்த பேரேடு !

மூன்றுபத்து ஆண்டாய் முழங்குகடல் சூழுலகில்
ஆன்றவகை ஞான ஒளி அளித்தெழுந்த பொன்னேடு !

புத்தமுதத் திறனாய்வு: பொங்கிவரும் கவிச்செல்வம்;
எத்திக்கும் சைவமணம் எழுப்பிவிட்ட நல்லேடு !

திங்கள் ஒருமுறைதான், பொங்கிவரும் பெருநிலவாய்
எங்கெங்கும் ஞானநெறி எடுத்தியம்பும் எழில்ஏடு !

ஞானசம் பந்தம் நாடெல்லாம் மணம்பரப்பி
ஊனசம் பந்தமற உழைத்தெழுந்து நிற்கிறது !

கண்மணியாய் எழுந்துவந்த கயிலாய பரம்பரையில்
சண்முகதேசிகஞான சம்பந்தர் இந்நாளில்

ஆட்சிப் பொறுப்பேற்று அருள்ஞான சம்பந்தம்
மாட்சியுற வேண்டி மனங்கொண்டு வாழ்த்துவதால்

ஓங்கி வளர்ந்து ஒளிபூக்கும் இதழுக்கு
ஆங்காங்கே அன்பரெலாம் ஆதரவு மிகக்காட்டி

வாங்கிக் கற்று வாங்குவித்துப் போற்றி
ஓங்கிச் சிறந்து ஒளிபெறவே வாழ்த்துகிறோம் !



தருமையாதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

பரிபூரணம் 10—11—1971

உ

குருபாதம்

ஞானசம்பந்தம்

மலர் 31 | விரோதிகிருது - கார்த்திகை – 10–12–71 | இதழ் 1

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. – சம்பந்தர்.

திருச்சிற்றம்பலம்

வாழ்த்தும் வணக்கமும்

பிறவிப் பெருங்கடலை நீந்திக் கரையேற விரும்புவோர்க்குப் பற்றுக்கோடு, 'குரு, லிங்கம், சங்கமம்' என்னும் மூன்றுமேயாகும்.

" குருலிங்க வேடமெனக் கூறில்இவை கொண்டோர்
கருவொன்றி நில்லார்கள் காண் "

என்பது உண்மை விளக்கம்.

இவற்றுள்ளும் முன்னிற்பது குருவடிவம். அஃது உபதேச முறையால் உயிர்களை உய்விப்பது. இத்தகைய்

உபதேசத்தை இறைவன் தன்னிடத்தினின்றும் இடையறாது வருகின்ற குருபரம்பரை வழியாக உலகிற்கு அளித்து வருகின்றான். அங்ஙனம் வருகின்ற **திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீன** ஞான பீடத் தாபகர் **ஸ்ரீ குருஞானசம்பந்தர்.**

சீகாழியில் அவதரித்து மூவாண்டிலே ஞானத்தைப் பெற்ற ஆளுடைய பிள்ளையாரே **முதல் ஞானசம்பந்தர்.** அவர் அம்மையின் திருமுலைப் பாலை உண்டு ஞானசம்பந்தம் பெற்றமையால், '**திருஞானசம்பந்தர்**' என்னும் திருப்பெயர் பெற்று விளங்கினார். அவருக்குப் பின்னர் மெய்கண்ட சந்தானத்தில் மூன்றாமவராகிய ஆசாரியர், மறைவழி நின்று **ஞானசம்பந்தம்** பெற்று, **மறைஞானசம்பந்தராய்** விளங்கினார். இவருக்குப்பின் '**ஞானசம்பந்தர்**' என்னும் திருப்பெயருடன் விளங்கிச் சமய பரிபாலனம் புரிந்த அருளாசிரியர் தருமையாதீன முதற்குரவரே. இவ் ஆசாரிய மூர்த்திகள் ஞான பீடத்தில் குருமூர்த்திகளாய் வீற்றிருந்து பக்குவிகள் பலருக்கு ஞானோபதேசம்செய்து உய்வித்தமையால், '**குருஞான சம்பந்தர்**' எனப் போற்றப்பெற்றார்கள். இவர்களது திருவுளக் குறிப்பின்படி தருமையாதீன ஞானபீடத்தில் வழிவழியாக எழுந்தருளி அருளாட்சி நடத்தியருளிய மகா சந்நிதானங்களில் **25 ஆவது மகாசந்நிதானமாக** எழுந்தருளி அனைவரது வாழ்த்துதலுக்கும், வணங்குதலுக்கும் உரியவர்களாய் வீற்றிருந்து அருளாட்சி செலுத்திய **ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்** இது பொழுது **காசியில்** பரிபூரணம் எய்திய திருவருள் நிகழ்ச்சி, அனைவரையும் வியப்பிலும், திகைப்பிலும் ஆழ்த்தியது.

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியவர்கள் தங்கள் உள்ளத்து உறுதியால் கயிலாய யாத்திரையை மேற்கொண்டு, கயிலாயத்தைத் தரிசித்து மீண்டு, தங்கள் பரம்பரை திருக்கயிலாய பரம்பரை என்பதைக் கண்கூடாகக்காட்டி, **கயிலைக் குருமணியாய்** விளங்கினார்கள். இவர்கள் திருவருள் உறைப்பினால் இடையறாது மேற்கொண்டிருந்த **ஆன்மார்த்த பூசை, திருமுறைப் பாராயணம்** முதலிய அருஞ்செயல்களின் பயனாக இறைவனது திருவருட் குறிப்பின்வழியே, கந்த சஷ்டியை

முன்னிட்டுத் திருச்செந்தூரில் எழுந்தருளிக் கந்த விரதத்தை மேற்கொண்டிருக்கும்பொழுதே காசி யாத்திரை செய்யத் திருவுளங் கொண்டவர்களாய், அவ் விரதத்தை முடித்து ஆதீனத்திற்கு எழுந்தருளிய உடனே காசியாத்திரையை மேற்கொண்டு, மூன்று நாள் யாத்திரை செய்து, நான்காம் நாள் காசியை அடைந்து, அடைந்ததுமுதல் 12 மணி காலத்தில் தொடர்பாகத் திருமுறைப் பாராயணம், ஆதீனத்துப் பத்தாவது குருமகாசந்நிதானம் அவர்கள் அருளிச்செய்த **காசிஅருட்பாக்கள்** - சிறப்பாகத் **தாரகப் பத்து** என்பவைகளைப் பாராயணம் செய்வித்துத் திருவருளில் ஈடுபட்டிருந்து, நல்லுணர்வோடு, வீற்றிருந்த நிலையிலே பரிபூரணமானமை உடன் இருந்த அடியார்களை வியப்பிலும், கண் கலக்கத்திலும் ஆழ்ந்தியது. இத்தகைய அரிய திருவருட்பேறு ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமாமணி அவர்கட்குக் கிடைத்தமை அனைவர்க்கும் மகிழ்ச்சியைத் தருவதாயினும், அவர்களது திருமேனி மறைவு, சைவத்திற்கும், தமிழிற்கும், நாட்டிற்கும் பெரியதோர் இழப்பாய்விட்டதை நினைவுகூராமல் இருக்க முடியவில்லை.

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியவர்களது அருளாட்சிக் காலத்தில் **சீகாழி, திருபுவனம், வைத்தீசுவரன்கோயில், திருப்பனந்தாள், திருவையாறு** முதலிய பெரிய திருக்கோயில்கள் உட்படப் பல திருக்கோயில்கள் திருப்பணிகள் பல செய்யப் பெற்று மகாகும்பாபிடேகங்கள் பலரும் வியந்து போற்றும் வகையில் நடைபெற்றதோடு, அனைத்துத் திருக்கோயில்களும் தூய்மைபெற்று விளங்கப் பல நித்திய நைமித்திகங்களுடன் சிறந்த வகையில் பரிபாலிக்கப்பெற்றன. இமயம் முதல் குமரி வரையில் உள்ள பல தலங்கட்கும் இவர்கள் யாத்திரை செய்தார்கள்.

திருமுறைகள் பன்னிரண்டையும் ஒவ்வொரு திருமுறை ஒவ்வொரு தனிப்புத்தகமாகக் குறிப்புரை, பொழிப்புரை, ஆராய்ச்சிகள் முதலிய பலவற்றுடன் சிறப்பாக வெளிவரத் திருவுளம்பற்றி, ஒன்பது திருமுறைகள் வெளிவரச் செய்து,

தேவாரத் திருமுறைகளை எளிய விலையில் பலர் பெற்றுப் பயனடையச் செய்த சிறப்பு ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி யவர்கட்கே உரியது. பொதுமறையாகிய திருக்குறள் முப் பால்களையும் முன்னை உரைகள் அனைத்துடன் உரைவளமாக வெளிவர அவர்கள் திருவுளம் பாலித்தமை குறிப்பிடத்தக்க ஒன்றாகும். தமிழ்நாட்டின் தலைநகரமாகிய சென்னையில் சமயப் பிரசார நிலையம் தோன்றிச் சமயத்தை வளர்த்து வருவதும் இவர்களது அருளாட்சிக் காலத்தில் தொடங்கி நிகழ்ந்துவருவதேயாகும். உயர்நிலைப்பள்ளியிலும், கல்லூரி யிலும் கல்வியறிவு மிக்க மாணவர்கட்குப் பரிசும், பதக்கமும் வழங்கி ஊக்குவிக்கவும் அவர்கள் திருவுளம் உவந்து உதவி யருளினார்கள். திருமுறைப் பண்ணிசை வாணர்கட்கும், புலவர் பெருமக்கட்கும், மற்றும் பல பெருமக்கட்கும் அவ்வப்பொழுது பட்டங்களும் பொற்பதக்கங்களும், பொன் முடிப்புக்களும் வழங்கி ஊக்குவித்தருளினார்கள். மாநாடு கள், சமயச் சொற்பொழிவுகள் பல தேவஸ்தானங்களின் சார்பிலும், ஆதீனத்தின் சார்பிலும் பற்பலவாக நிகழ்த்து வித்துச் சிவநெறியைப் புரந்தருளினார்கள். வேலூரில் அனாதைக் குழந்தைகள் இல்லம் நிறுவிப் பரிபாலித் தருளினார்கள். அங்கு இலவச மருத்துவ சித்தவைத்தியசாலை தோன்றிப் பலவகையில் வளர்ச்சி பெற்றது. மற்றும்இன்னோ ரன்ன பல அரும்பெருஞ் செயல்களை அறிந்து மகிழ்ந்த பலதுறைப் பெருமக்களும், ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி யவர்களது பரிபூரண நிலையை அறிந்து திகைப்பும், கண் கலக் கமும் கொண்டவர்களாய், அவர்களதுதிருவடிகளில் வீழ்ந்து வணங்கும் பேறின்றி, 'ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியவர்களது ஆன்மா சிவசாயுச்ச பரமுத்திப் பேரின்பத்தில் சிறப்புற்றுத் திளைக்க' என வாழ்த்தி அமைகின்றார்கள். அவர்களது வாழ்த்துதலில் நாமும் பங்குகொண்டு வாழ்த்தி அமைதி பெறுவோமாக.

ஸ்ரீ குருஞானசம்பந்த பரமாசாரிய மூர்த்திகள் சிவ சமாதியில் எழுந்தருளியிருப்பதால், தருமையாதீனத்தில் குருவருள் விளக்கமும், திருவருள் விளக்கமும் என்றும்

குறைவின்றி விளங்கி நிற்பதை அனைவரும் அறிவர். அதனால் 26 ஆவது குருமூர்த்திகளாக இதுபொழுது அருளாட்சி ஏற்று விளங்கும் **ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்** அருளாட்சியில் ஆதீனத்தில் அனைத்து நலங்களும் சிறப்புற்றுத் திகழ்வனவேயாம். இவர்கள் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியவர்களது அருள்நோக்கின் வழியே வித்துவான் பட்டம் பெற்றுத் தமிழ்ப் புலமையும், சமயநூல் ஆராய்ச்சியும், பேச்சுத்திறனும் மிகுந்து, சென்னைச் சமயப் பிரசார நிலையத்தின் பொறுப்பினை ஏற்றுப் பலவகையில் சமயப்பணி தமிழ்ப்பணிகளை அன்பர் பலருடன் செய்துவந்ததுடன், திருவாமூரில் அப்பர் அவதாரத் திருமனையில் எழுந்த நூதன ஆலயத் திருப்பணியை முற்றுவித்து மகாகும்பாபிடேகத்தைச் சிறப்புற நிகழ்த்தி, நித்திய நைமித்திகங்களும் நிகழ்ந்துவரச் செய்த பெருமையுடையவர்கள்.

25 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணியவர்களை இதுபொழுது வாழ்த்தியே அமைகின்ற அன்பர்கள் அனைவரும், **ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்** அருளாட்சி ஏற்றமையை அறிந்து மகிழ்ந்து இவர்களை வாழ்த்துதலோடு, இவர்களது திருவடிகளை வணங்கியும் மகிழ்கின்றார்கள். அத்தகைய அன்பர்களது வாழ்த்துதல் வணங்குதல்களில் நாமும் பங்குபெற்று வாழ்த்தியும், வணங்கியும் இவர்கள் அருள்வழி நின்று பணி பல செய்து உய்வோமாக.

அட்டைப் பட விளக்கம்

குருவழிபாடு: தருமையாதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் 1964 இல் நிகழ்ந்த ஆதீனக் குருமுதல்வர் குருபூசை விழாவில் கொலுவீற்றிருத்தலும், இதுபொழுது 26 ஆவது குருமகாசந்நிதானமாக எழுந்தருளிவிளங்கும் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் கொலு வழிபாடு செய்தலும்.

ஞானசம்பந்தம் ஆற்றிய நற்பணிகள்

தமிழகத்தில் சமயப் பற்றும் தமிழ் வளர்ச்சியும் குன்றியிருந்த காலம். இரண்டாம் உலகப் பெரும் போருக்குப்பின் நாட்டில் வறுமையும் பஞ்சமும் தலைதூக்கி நின்றன. மக்கள் தங்கள் வாழ்க்கைப் போராட்டங்களில் ஈடுபட்டுச் சமயத்தை மொழியை மறந்திருந்தனர். மன அமைதிக்கும் வாழ்வின் மறுமலர்ச்சிக்கும் தெய்வத்துணை இன்றியமையாதது என்பதை உணர்ந்த ஞான சம்பந்தம் தருமையாதீன அருள்ஞானப்பண்ணையில் முகிழ்த் தெழுந்தது. சமய மணமும் தமிழ் மணமும் ஒருங்கே கமழும் மணமலராக விளங்கி நாட்டு மக்களிடையே மறுமலர்ச்சி யுகத்தைத் தோற்றுவித்தது.

தருமையாதீனம் 24 ஆவது குருமகாசந்நிதானமாக விளங் கிய ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் 1941-ல் இவ்விதழைத் தொடங்கியருளினர்கள். தருமை யாதீனக் குருமுதல்வர் ஸ்ரீ குருஞானசம்பந்தரின் திருப்பெயர் தாங்கிய இவ்விதழை ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் ஸ்ரீமத் சிவகுருநாதத் தம்பிரான் என்ற திருப்பெயரில் இதழ் ஆசிரிய ராக இருந்து விளக்கம்பெறச் செய்தார்கள், காகிதநெருக்கடி ஏற்பட்ட காலங்களிலும் தவறாது அரிய பல கட்டுரைகளைக் கொண்டு வெளிவந்தது ஞானசம்பந்தம். இலக்கியம், இலக்க ணம், தோத்திரம், சாத்திரம், வரலாறு, மருத்துவம், சோதிடம் முதலிய பல துறைகளின் தொடர்பாக அரிய பல ஆராய்ச்சிக் கட்டுரைகள், கல்வெட்டாராய்ச்சிகள், கவிதைகள், நாடகங்கள் முதலியவைகளைத் தாங்கி நாட்டில் சமய வளர்ச்சியையும் தமிழ் வளர்ச்சியையும் செய்துள்ளது.

இந்திய நாட்டின் பல பகுதிகளிலும் வாழும் தமிழ் மக்களும், கடல் கடந்த நாடுகளில் வாழும் தமிழர்களும் இவ்விதழினைப் பெற்றுக் கற்றுப் பயனுறுகின்றனர்.

தருமையாதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் அருளாட்சிக்காலத்தில் 26 ஆவது

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் என்ற திருப்பெயரோடு இதழாசிரியராக விளங்கி ஞானசம்பந்தத்தைப் பேணி வளர்த்தார்கள்.

ஞானசம்பந்தம் செப்பறைச் சுவாமிகள் போன்ற சிறந்த அறிஞர்களின் உரைகளை வெளியிட்டுத் திருமுறைத் தொண்டு கள் செய்துள்ளது. சைவ சமயத் தொடர்பான விழாக்கள் விரதங்கள் இவற்றின் தத்துவ விளக்கங்களை அவ்வப்போது அளித்துவந்துள்ளது, பல தலையங்கங்களில் சிவபெருமானது மாகேசுர மூர்த்தங்களின் விளக்கங்களை அளித்துள்ளது. ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் திருமுறைத் தொடர்பாகவும் சாத்திரத் தொடர்பாகவும் அருளிய அருளுரைகளை வழங்கி யுள்ளது. இவ்வருளுரைகள் செந்தமிழ்ப்பூம்பொழில் என்னும் பெயரில் தனி வெளியீடுகளாகவும் வெளிவந்துள்ளன. சைவ சித்தாந்த நுண்பொருள்களை எளிதில் உணரும் வகையில் சித்தாந்த வினாவிடை என்ற தொடர் கட்டுரையை வழங்கியது. ஏட்டுச்சுவடிகளில் உள்ள இலக்கிய இலக்கண நூல்களை மாதந் தோறும் வழங்கி நூல்வடிவாக உலகம் பெற்றுப் பயனடையுமாறு செய்துள்ளது. தேவி மகாத்மியம், தொல்காப்பியச் சொல்லதி காரத்திற்கு கல்லாடர் இயற்றிய உரை, தையல்நாயகி அந்தாதி உரை முதலியன இவ்வாறு வெளிவந்தன. தருமையாதீனத்தில் நடைபெறும் விழாக்கள் மாநாடுகள் முதலியவற்றினை முன்னரே அறிவித்தும் பின்னர் நிகழ்ச்சிகளை அளித்தும் ஆதீனத்திற்கும் அன்பர்கட்கும் தொடர்பு விளைத்துவருகிறது.

இவ்வாறு சமயத்தொண்டும் தமிழ்த்தொண்டும் ஆற்றிய இவ்விதழ் இதுபோது முப்பது ஆண்டுகள் நிறைவுபெற்று முப்பத்தொன்றும் ஆண்டில் விறுநடையிட்டு வெளிவருகிறது,

தருமையாதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் அருளாசியால் ஞானசம்பந்தம் மேலும் வளர்ச்சிகள் பலவற்றைப் பெற்றுச் சிறந்து விளங்கும் என்பது உறுதி,

வாழ்க குருமணி!

வளர்க ஞானசம்பந்தத்தின் நற்பணி.

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்
26 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

"ஞானசம்பந்தம்" புத்தாண்டு இதழுக்கு வழங்கியருளிய

ஆசியுரை

முப்பொரு ளுண்மை நாளும் மொழிந்தருள் மெய்கண் டான்தன்
திப்பிய சந்தா னத்துத் திருநகர்த் தருமை மேவி
இப்புவித் தொடர்பின் நீக்கி என்னையும் அடிமை கொண்ட
சுப்பிர மணிய ஞான சம்பந்தன் துணைத்தாள் போற்றி.

அருளுடைச் சுடராய், அளிந்ததோர் கனியாய், பெருந்திறல் அருந்தவர்க்கரசாய், பொருளுடைக் கலையாய், புகழ்ச்சியைக் கடந்தபோகமாய், யோகத்தின் பொலிவாய், தெருளிடத்தடியார் சிந்தையுட் புகுந்த சிவமாய், இருளிடத்திருந்த எம்மையாட் கொண்ட எழில்வளர்சோதியாய்த் தருமை ஆதீன ஞானபீடத்தை அழகுசெய்த எம் குருநாதர் முத்தித்தலமாகிய காசியம்பதியில் இறைபேரொளியில் இரண்டறக் கலந்தார்கள்.

செம்மைநலம் அறியாத சிதடரொடும் திரிவேனை, முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனை, பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும் புன்மையனை, புன்னெறி அதனிற் செல்லும் போக்கினை விலக்கி, மேலாம் நன்னெறி ஒழுகச்செய்து ஆட் கொண்டருளிய எம் கயிலைக் குருமணியின் அருள்திறத்தை - ஆட்சி நலத்தை, 'மோனம் என்பது ஞானவரம்பு' என்பதற் கேற்ப, சொல்லாமல் சொல்லி எம்மைச் செயற்படுத்தும் சீர்மையை நினைதொறும், அகக்கண்ணால் காண்தொறும், பேசுந்தொறும், எப்போதும் அனைத்தெலும்பும் நெக்குருக அன்புக் கண்ணீர் பெருகுகிறது.

பக்தர்களும் - அன்பர்களும் - சீடர்களும் அஞ்சலிக் கடிதமும், ஆறுதற் கடிதமுமாக அளவில்லாமல் எழுதியுள்ளமை நெஞ் சத்தைத் தேற்றுகிறது.



தருமையாதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

கயிலைக் குருமணியின் அருள் நலத்தை, ஆட்சித் திறத்தை அளந்து தெளியும் அளவு கோலாகவும் அமைந்துவிட்டது அவர்கள் வீடு பேறெய்திய நிலைமை. எம் ஞானத்தந்தையாக இருந்து 26½ ஆண்டுகள் எம்மையும், திருக்கூட்டத்து அடியவர் களையும், திருமடத்துப் பணியாளர்களையும், திருக்கோயில் தொண்டர்களையும், பக்தர்களையும் பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப்பரிந்து வளர்த்தவர்கள் எம் கயிலைக் குருமணி. 'ஞான சம்பந்தம்' என்னும் திங்கள் இதழ் மூலம் நானில மக்களுக்கு ஞானசம்பந்தம் நல்கினுர்கள். தருமையில் தமிழ்க் கல்லூரி நிறுவிக் கண்ணெனை வளர்த்தவர்கள். திருக்குறளுக்கு உரை வளங் கண்டவர்கள். திருமுறைகட்கு உரை நலங்காணும் துணிவுகொண்டு ஒன்பது திருமுறைகளை வெளியிட்டவர்கள். சமயப் பெருமையைத் தமிழரும், பிறரும் உணரத் தமிழகத் தலை நகரில் சமயப் பிரசார நிலையம் கண்டவர்கள். சமயத் தலைவர்கள் ஒன்றுகூடித் தற்கால நிலைக்கு ஏற்பச் சமயப் பணிபுரியத் 'தெய் விகப் பேரவை'யையும் உருவாக்கியவர்கள்.

ஆதீனக் கோயில்களுக்குத் திருப்பணி செய்து திறம்படக் குடமுழுக்குச் செய்ததன் மூலம் தமிழகத்தில் ஒரு புத்துணர்ச்சியை யும், எழுச்சியையும் உண்டாக்கியவர்கள். மூர்த்தி, தலம் தீர்த்தம் முறையாய்த் தரிசிப்பதன் மூலம் பக்தர்களைத் திருக் கோயில் வழிபாட்டில் ஈடுபடுத்தியவர்கள். சமயகுரவர்களால் பாடல் பெற்ற 274 தலங்களுள் ஐந்து தவிர அனைத்தும் தரிசித்தவர்கள். திங்கள் தோறும் தம் ஜென்ம நக்ஷத்திரத் தன்று ஒவ்வோர் பாடல் பெற்ற தலத்திற்குரிய பதிகங்களை அச்சிட்டு வழங்கியதோடு அபிடேக ஆராதனைகள் செய்வித்த வர்கள். கிடைத்தற்கரிய கயிலையைக் கண்டதால் 'கயிலைக் குருமணி' எனப் போற்றப் பெற்றுக் கனகாபிஷேகம் கொண்டவர்கள்.

காலத்தைப் பொன்னெனப் போற்றியவர்கள். கடமையைக் கண்ணெனக் காத்தவர்கள். ஆத்மார்த்த மூர்த்தியாகிய சொக்கநாதப் பெருமானிடத்தும், ஆதீனக் குருமுதல்வராகிய ஸ்ரீ குருஞானசம்பந்தரிடத்தும் அளவிலாப் பக்தி பூண்டவர்கள். தருமையில் பதினெண் திருக்கரத்தோடு கூடிய மகாலட்சுமி துர்க்கையை எழுந்தருளச் செய்து நாளும் வழிபட்ட நலமுடைய வர்கள். ஆநந்தபரவசர் பூங்காவில் வனதுர்க்கைக்கு ஆலய மெடுத்து வழிபட்ட வளமுடையவர்கள். சமய ஒற்றுமைக்கு அடிப்படையான பாவை மாநாட்டிற்கும், பக்தி வளர்ச்சிக்கு அடிப்படையான கோடி அருச்சனைக்கும் வித்திட்டவர்கள். பல துறை அறிஞர்களுக்கும் பட்டம் வழங்கிப் பாராட்டிப் பண் பாட்டை வளர்த்தவர்கள். அப்பர் அவதரித்த திருவாமூரில்

அப்பருக்கோராலயம் எடுத்துக் குடமுழுக்கும், குருபூசை விழாவும், மாநாடும் நிகழ்த்தப் பெருந்துணை புரிந்தவர்கள். இன்னும் எழுத்திலடங்காத் திருப்பணிகள்பலப்பல செய்தவர்கள்.

இவ்வாறு அருள்நலங்கனிய ஞானச்செங்கோலோச்சிய அருளரசாம் கயிலைக் குருமணிக்குக் காசித் தலத்தில் கடவுள் நிலை கிட்டியது, குருமணியின் அருளாற்றலை நமக்கெல்லாம் தெளிவுபடுத்துகிறது. கங்கையிலும், கயிலாயத்திலுள்ள மானச சரோவரம் போன்ற புனித நீர் நிலைகளிலும் நீராடும் போதெல் லாம் தம் ஆதீனக்குருமுதல்வர்கள் ஒவ்வொருவரையும் நினைந்து திருமஞ்சனம் ஆடி மகிழ்வார்கள். தமக்கு முன்னிருந்த ஆசாரி யர்களிடத்தில் அவர்கள் கொண்டிருந்த அளவற்ற பக்தியை இந்நிகழ்ச்சி எடுத்துக் காட்டுகிறது.

தருமையாதீனக் குருபீடத்தில் எழுந்தருளியிருந்த அருளா ளர்களுள் 10ஆவது குருமூர்த்திகளாக விளங்கிய ஸ்ரீலஸ்ரீ சிவஞான தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளும், ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியும் ஆகிய இவ்விரு அருளாளர்கள் மட்டுமே காசிக்கு எழுந்தருளிக் கங்கையில் திருமஞ்சனங்கொண் டவர்கள். முத்திப்பேறு எய்துவதற்கு மூன்றுமணிக்கு முன்னர் பத்தாவது குருமூர்த்திகள் அருளிச்செய்த,

“ மின்னும் உத்தரீ கத்தை வீசும் விசாலாட்சி பங்கன்
தன்னிகராம் காசியில்வாழ் சற்குருமுன் சென்றெனக்கு
உன்னுமொரு தாரகத்தை ஓதுநாள் என்றென்று இங்கு
அன்னமே கேட்டுவந்து என் அகமகிழ விளம்புவையே ”

என்ற தாரகப்பத்தின் பாடலை உடன்வந்த பக்தர்களுக்கும் சிஷ்யர்களுக்கும், பணியாளர்களுக்கும் அருளுரையாக உப தேசித்து, காசித்தலத்தின் பெருமையையும், அங்கு முத்திப்பேறு எய்துவதன் சிறப்பையும் எடுத்துரைத்து அருள்நிலை எய்தி ஞர்கள்.

இத்தகைய ஞானத் தந்தை எமக்கு மட்டுமன்றி, இந்த ‘ஞானசம்பந்தம்’ இதழுக்கும் ஞான பிதாவாக இருந்து பேணி வளர்த்தவர்கள். அவர்கள் வழியிலே அவர்களாலே வளர்க்கப் பெற்ற நாமும் ஞானசம்பந்தம் இதழை வளர்க்கத் திருவருள் துணைசெய்திருக்கிறது.

ஞானசம்பந்தம் இதழுடன் தொடர்புகொண்டுள்ள நல் லன்பர்கள் நாளும், கலைஞானமும், மெய்ஞ்ஞானமும் கைவரப் பெற்று நலமெலாம் பெருகச் செந்தமிழ்ச்சொக்கர் திருவருளையும், கயிலைக் குருமணியின் அருளையும் பிரார்த்திக்கிறோம்.

உ

குருபாதம்

குருவருள் மொழி

சைவமும் தமிழும் வாழச் சோழநாட்டிலே கி. பி. 7 ஆம் நூற்றுண்டில் தோன்றியவர் திருஞானசம்பந்தர். இரண்டாமவர் சைவ சித்தாந்த சாத்திர ஆசிரியராகிய மறைஞானசம்பந்தர்;மூன்ருவதாக, ஞானசம்பந்தம்பெற்ற அருளாளராக அத்திருப்பெயருடன் விளங்கியவர், தருமையாதீன முதற் பெருங்குரவர் ஆகிய குரு ஞானசம்பந்தர். கமலை ஞானப்பிரகாசரிடம் அருள்பெற்றுச் சிவபோகத்தில் திளைத்த இவர்களால் கி. பி. 16ம் நூற்ருண்டில் எழுந்தது இத் தருமையாதீனம்.

மதுரைப் பொற்ருமரைக் தீர்த்தத்தில் சொக்கநாதப் பெருமான் கண்ணுக்கினிய பொருளாகக் கரத்தில் வரப்பெற்றுக் கனிந்துருகியவர். தருமையில் புலியும் பசுவும் ஒருதுறையில் நீர் உண்ணச் செய்த அருளற்புதம் உடையவர்.

வில்வாரணியமாக விளங்கும் தருமபுரத்தில் ஞானபரம்பரையைத் தொடங்கிவைத்தருளிய ஞானச்செல்வர், ஜீவ சமாதியிலிருந்து எழுந்து வந்து மூன்ருவது குருமூர்த்திகளுக்கு உபதேசம் செய்தருளியவர். தில்லையில் நிட்டையிலிருந்தபோது சிவகாமியன்னையின் பாயசத்தையும் திருவமுதத்தையும் பெற்ற சிவஞானச் செஞ்சுடர்.

இவர்கள் பாடியருளிய எட்டு அருள்நூல்களில் சொக்கநாத வெண்பா சிறந்த தோத்திர நூல். பிழை நினைந்து உருகுவோர்க்கும், திருந்திய வாழ்வு விழைந்து மனம் உருகுவோர்க்கும் துணை நிற்கும் அமைப்புடையது. அத்தகைய அரிய திருவெண்பாக்கள் சில அன்பர்கள் எடுத்தோதித் துதித்துப் பயனடையுமாறு, தருமையாதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானமாக எழுந்தருளியுள்ள **ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளவர்கள்** திருவுள்ளப் பாங்கின்படி சில விளக்கங்களுடன் வெளிவருகின்றன.

சொக்கநாத வெண்பா

எல்லாமும் வல்லசித்தர் என்றக்கால் என்னுடைய
பொல்லாக் கருத்து அகற்றப் போகாதோ ? — வல்லாடும்
பொங்கார வேணிப் புனிதா ! மதுரை நகர்ச்
சங்கரா ! சொக்கநா தா !

ஆடரவம் சூழ் மதுரை அம்மானுகிய சொக்கநாதப்பெருமானே, நீர் அன்பருடன் கூட விளையாடிய திருவிளையாடல்களில் எல்லாம் வல்ல சித்தராகி வந்து பல அரிய அற்புதங்களைச் செய்து காட்டினீர் என்கின்றூர்கள். அப்படியானல் மனத்தை நல்ல மனமாக்க உம்மால் ஏன் இயலாது ?

நித்தம் எழுந்தருளி நின்மலனே ! என்றனக்குப்
புத்தி மிகமிகவும் போதித்துச் — சித்தமயல்
போக்குவாய் ! இன்பசுக பூரணத்து இரண்டறவே
ஆக்குவாய், சொக்கநா தா !

சொக்க நாதப் பெருமானே, நீர் அன்பருடன் கூட விளையாடி வரும் கோமான் ஆகையால், உம்மிடம் வேண்டிக்கொள்ளுகின்கிறேன்; நீர் எப்பொழுதும் என் அருகில் எழுந்தருளியிருந்து என்னைத் தீநெறியினின்றும் விலக்கி, நன்னெறியிற் செல்லும் நற்புத்தியை அவ்வப்பொழுதும் அளித்தருள வேண்டும். அவ்வாறு அளித்தருளினுல் இன்ப நிறைவில் நான் இரண்டறக் கலக்கும் நிலை தானுகவே எனக்கு வாய்த்துவிடும்.

தவமோ சிறிது அறியேன் ; தாரணிமேற் செய்யும்
அவமோ அளவில்லை ; ஆனல் — சிவமே
பெறுமாறு என் ? கூடற்பிரானே ! முப்பாசம்
அறுமாறு என் ? சொக்கநா தா !

சொக்க லிங்கக் கடவுளே, தவ நெறி என்பது எனக்குச் சிறிதும் தெரியாது. ஆனுல், அவ நெறியோ எனக்கு முற்றும் தெரியும். அவ்வாறிருப்பதால், முப்பாசம் நீங்கிச் சிவமாவது என்பது எனக்கு வாய்க்க வழியுண்டோ !

என்னவினை நாயேற்கு இருக்குதோ ? இக்காயத்து
என்னவினை நின் தாள் இயற்றுமோ ? — என்னவினை
வந்திடுமோ ? என்றறியேன் ; வந்தாலும் நின் அருளே
தந்திடுவாய், சொக்கநா தா !

ஆலவாய் அண்ணலாகிய சொக்க நாதரே, அடியேன் முற் பிறப்பில் என்ன பாவம் செய்துள்ளேன் என்பதையும், அவற்றிற்கு ஈடாக இப்பிறப்பில் உமது திருவருள் என்ன ஒறுப்பினைச் செய்ய இருக்கின்றது என்பதையும் நான் அறியேன். அவை எப்படி இருப்பினும் எது வந்தாலும் உமது திருவருளே 'தஞ்சம்' என்று அமைதிகொள்ளும் நிலையை அடியேனுக்கு நீர் அருள வேண்டும்.

வாக்கிலுரை பொய்யே ; மனம் நினைப்பதும் கவடே ;
ஆக்கை தினம் செய்வது அகிர்த்தியமே — நோக்கில்
திரிவிதமும் இப்படி நீ செய்வித்தால், முத்தி
தருவிதம் என் ? சொக்கநா தா !

சொக்க நாதக் கடவுளே, என் வாய் சொல்வதெல்லாம் பொய் மொழியையே, மனம் நினைப்பதெல்லாம் வஞ்சக நினைவையே. உடல் செய்வதெல்லாம் தகாத செயல்களையே. இந் நிலையிலேயே நீர் என்னை வைத்திருந்தால், எனக்கு நீர் முத்தியை அளிப்பது எப்படி ?

எக்காலம் தாகங்கள் இற்றிடுமோ ? காயங்கள்
எக்காலம் ஆசை, சினம் இற்றிடுமோ ? — எக்காலம்
நல்லார் குணம் வருமோ? நாதா எல்லாமுமாய்
அல்லானே ! சொக்கநா தா ?

எனக்கு எப்பொழுதுதான் உலக இன்பத்தில் உள்ள வேட்கை நீங்குமோ ! எப்பொழுதுதான் சிலரிடத்தில் உறவு, சிலரிடத்தில் பகை என்னும் வேறுபாடு கெடுமோ ! எப்பொழுது தான் இவையெல்லாம் இல்லாத ஞானிகளின் நிலை வாய்க்குமோ !

நோயால் வருந்திஉனை நூறுதரம் கூப்பிட்டால்
நீயார் ? எனது இருக்கை நீதியோ ? — தாயாய்
அலைகொடுத்த கேழல் அருங்குழவிக்கு அன்று
முலை கொடுத்தாய் நீஅல்லவோ முன் ?

சொக்கேசப் பெருமானே, தாயை இழந்து அலைவுற்ற சில பன்றிக் குட்டிகட்கும் தாயாய்ச் சென்று பால் கொடுத்துக்

காப்பாற்றியவர் அல்லவோ நீர்! அடியேன் பிணியால் வருத்த முற்று குரல் கம்ம உம்மை ஓயாமல் அழைத்து முறையிட்டாலும் 'யாரப்பா நீ' என்று ஒரு மறுகுரல் கொடுக்காதிருப்பது உமக்கு அழகாகுமோ!

தன்னந் தனியே தமியேன் முறையிட்டால்
இன்னம் திருச்செவியில் ஏருதோ? — மன்னவனே!
தென்மதுரை மேவித் திருந்திய செங்கோல் செலுத்தும்
தன்ம துரை நீயலவோ தான்?

மதுரைப் பெருமானே, அடியேன் ஒருவரும் துணை இல்லாமல் தனியே நின்று கூப்பிடுகின்றேன்; ஆனால், அஃது இன்னமும் உமது திருச்செவிகளில் ஏறவில்லைபோலும்! நீர் இவ்வாறிருப்பது பொருந்தாது. ஏனென்றால், நீர் மதுரையிலே சௌந்தர பாண்டியனாய் அரசு வீற்றிருந்து மன்னுயிர் யாவும் ஒருகுரல் கூப்பிட்டபொழுதே கேட்டு அவைகளின் குறையை நீக்கியருளிய தரும துரையல்லிரோ நீர்!

பேரன்பன் அல்லன்; பிழை செய்யேன் தான் அல்லன்;
ஓரன்பும் இல்லா உலுத்தனேன்; — பேரன்பு
காட்டி, எனைக்காட்டி, உனைக்காட்டி, இன்பத்தொட்டிலிலே
ஆட்டி வளர், சொக்கநா தா!

சொக்க நாதப் பெருமானே, அடியேன் ஈவு இரக்கம் இல்லாத மனம் உடையவன்; அன்பர்களில் ஒருவனல்லன். அதோடு குற்றம் செய்யாமல் இருப்பதும் இல்லை. உமது எல்லாம் வல்ல பேரருளை என்பாற் செலுத்தி எனது சொரூபத்தையும், உமது சொரூபத்தையும் உணர்த்தியருளிப் பேரின்பமாகிய தொட்டிலில் என்னைக் குழவியாக வைத்துத் தாலாட்டிச் சீராட்டல் வேண்டும்.

உன்னைச் சிங்காரித்து உனது அழகு பாராமல்
என்னைச் சிங்காரித்து இடர்ப்பட்டேன் — பொன்னை,
அரிவையரையே நினையும் அன்பிலேற்கு, உன்தாள்
தருவையோ சொக்கநா தா!

சொக்கேசப்பெருமானே, அடியேனுக்கு உம்மிடம் அன்பிருந்தால், உமக்கு ஒப்பனை செய்து உமது அழகைப் பார்த்துக் களிப்பேன். அவ்வாறு களித்தால் எனக்கு உண்டாவது இன்பம். ஆனால், அடியேன் பொன், பெண், மண் என்பவற்றில்

ஆசை வைத்தமையால் என் உடலை ஒப்பனை செய்து களிக்கின்றேன். இதனால் எனக்கு உண்டாவது துன்பமே. இப்படிப்பட்ட எனக்கும் உமது திருவடிப் பேற்றை வழங்குவீரோ!

ஆறுதலை இல்லை; அடியேனுக்கு அன்பாகத்
தேறுதலை சொல்வார் சிலர் இல்லை — வேறுஎனக்குத்
திக்கு ஆரும் இல்லை; சிவனே! பழிக்கு அஞ்சி
சொக்கே! நின் தாளே துணை!

பழிக்கு அஞ்சும் பெருமானாகிய சொக்கநாதப் பெருமானே, அடியேனது துன்பம் நீங்குதற்கு வழி சொல்லவோ, அல்லது துன்பத்தால் நான் மனம் இளையாது உறுதிபெறும் சொற்களைச் சொல்லவோ ஒருவரும் துணை இல்லை. திக்கற்ற எனக்கு உமது திருவடியே துணை; என்னைக் காத்தருளல் வேண்டும்.

உனக்குப் பணிசெய்ய உன்றனைஎந் நாளும்
நினைக்க வரம்எனக்கு நீதா — மனக்கவலை
நீக்குகின்ற தென்மதுரை நின்மலனே எவ்வுலகும்
ஆக்குகின்ற சொக்கநாதா.

அடியார்களுடைய மனக் கவலையைப் போக்குகின்றவரே, மதுராபுரியில் எழுந்தருளியிருக்கும் தூய்மையானவரே, எல்லா உலகத்தையும் ஆக்கி நடத்துகின்ற சொக்கநாதப் பெருமானே, அடியேன் என்றும் உமக்கே தொண்டு செய்யவும், உம்மையே தியானிக்கவுமான வரத்தை அடியேனுக்கு அளித்தருளுவீர்.

குரு பரம்பரை

தருமையாதீனப்புலவர், மகாவித்துவான்,

திரு. சி. அருணைவடிவேல் முதலியார்

உயிர்கட்கு, 'பந்தம், வீடு' அல்லது 'போகம், மோட்சம்' என்னும் இருவகைப் பயனையும் தருபவன் இறைவன். அவற்றுள் பந்தம் அல்லது போகத்தை அவன் கடவுளர் பலர் வாயிலாகவும், இருமுது குரவர் முதலியோர் வாயிலாகவும் தருகின்றான். வீடு அல்லது மோட்சத்தைக் குருமூர்த்திகள் வாயிலாகத் தருகின்றான். இத்தகைய குரு பரம்பரைகள் இறைவன் திருவருளாலே நிலவுலகில் விளங்கி வருகின்றன. 'உருவம் இல்லாத இறைவன் உருவங்கொள்ளுதற்குரிய காரணங்களுள் முதலாசிரியனாய் இருந்து குரு பரம்பரையை நிலவச் செய்தலும் ஒன்று' என்பதைச் சிவஞானசித்தி,

"ஆரணம் ஆக மங்கள் அருளினால் உருவு கொண்டு
காரணன் அருளா னாகில் கதிப்பவ ரில்லை யாகும்;
நாரணன் முதலா யுள்ள சுரர்நரர் நாகர்க் கெல்லாம்
சீரணி குருசந் தானச் செய்தியும் சென்றி டாவே"

என்று விளக்குகின்றது

சயிலாதி மரபு :

திருக்கயிலையில் சீகண்ட பரம சிவனாய் எழுந்தருளியுள்ள சிவபெருமான் கல்லால் மரநிழலில் தென்முகக் கடவுளாய் வீற்றிருந்து நந்தி பெருமானுக்கு ஞானத்தை அளித்தருளி, அவர் வாயிலாகத் தோற்றுவித்த ஞான பரம்பரையே நந்தி பரம்பரை அல்லது சயிலாதி மரபு எனப்பெறுவது. சிலாத முனிவர் புத்திரரானமை பற்றி நந்தி பெருமான் 'சயிலாதி' எனப்பெறுகின்றார். இவர் பரம்பரையில் வந்த ஆசாரியர்கள் 'சந்தானாசாரியர்' எனப் பெறுவர், சந்தானாசாரியர்கள் 'அகச் சந்தானாசாரியர், புறச் சந்தானாசாரியர்' என இரு வகையாகச் சொல்லப்பெறுவர்.



தருமையாதீனம்
25 ஆவது ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானத்தில்
ஸ்ரீ காசிக்கு எழுந்தருளும் போது
குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தில்
சென்னை சென்ட்ரல் ஸ்டேஷனில் வழியனுப்பியருளியது.

தருமை ஆதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்
ஞானபிஷேகம் பெற்று வழிபாட்டிற்கு எழுந்தருளல்.

26 ஆவது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில்

26 ஆவது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்திடம்
திருப்பனந்தாள் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருணந்தித்தம்பிரான் சுவாமிகள்
அருட்பூதி பெறுதல்



26 ஆவது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில்
குன்றக்குடி ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம், திருப்பனந்தாள்
ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருணந்தித் தம்பிரான் சுவாமிகள் உள்ளிட்ட

தருமையாதீனம்
26 ஆவது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானமும்

திருப்பனந்தாள்
ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகளும் அவர்கள் தம் இளவரசும்.

தருமையாதீனம்
25 ஆவது ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானத்தின்
திருமேனி வழிபாடு.



தருமையாதீனம்
25 ஆவது ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானத்தின் திருமேனியை

25 ஆவது ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானத்தின் திருமேனி
வீதிவலமாக எழுந்தருளும்போது
26 ஆவது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில்
அடியார் புடைசூழ எழுந்தருளல்.

25 ஆவது ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியின் திருமேனி

தருமையாதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த
பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்
ஸ்ரீ சொக்கலிங்கப்பெருமான் சந்நிதியில் ஒப்பமிட்டருளல்.

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள்

அகச் சந்தானசாரியர் :

சீகண்ட பரம சிவனுரிடம் நேரே உபதேசம் பெற்றவர் நந்தி பெருமான். அவர்பால் உபதேசம் பெற்றவர் சனற்குமார முனிவர். அவர்பால் உபதேசம் பெற்றவர் சத்திய ஞான தரிசனிகள். அவர்பால் உபதேசம் பெற்றவர் பரஞ்சோதி மாமுனிகள். இந்நால்வரே அகச் சந்தானசாரியராவர். இவர்கள் திருக்கயிலை அகத்தே இருத்தலால், 'அகச் சந்தானசாரியர்' எனப்பெற்றனர். நந்தி பெருமானிடம் சனற்குமார முனிவருடன் உபதேசம் பெற்றோர் மற்றும் மூவர். அவர், 'சனகர், சனந்தனர், சனாதனர்' என்பவர்.

புறச் சந்தானசாரியர் :

பரஞ்சோதி மாமுனிகள் ஒரு சமயம் அகத்திய முனிவரைக் காண வேண்டித் திருக்கயிலையினின்றும் பொதியம் நோக்கி வான்வழியாகச் சென்றுகொண்டிருந்த பொழுது, திருவெண்ணெய்நல்லூருக்கு அருகே வரும்பொழுது திருவருளால் தம் செலவு தடைப்பட, அவ்விடத்தே இறங்கி ஈராட்டைப் பிராயத்தினராய்ச் சாமுசித்தராய் இருந்த 'சுவேதவனப் பெருமாள்' என்பவருக்குத் தமது மரபின்வழியான உபதேசத்தைச் செய்து, 'மெய்கண்டார்' எனத் தீட்சா நாமம் தந்தருளிச் சென்றார். பின்னர் மெய்கண்டதேவர் திருவெண்ணெய் நல்லூரில் உள்ள பொல்லாப் பிள்ளையார் திருமுன்பில் தாம் பெற்ற உபதேசத்தைச் சிந்தித்துத் தெளிந்து நிட்டை கூடி யிருந்தார்.

மெய்கண்ட தேவர்பால் உபதேசம் பெற்றவர் துறையூர்ச் சகலாகம பண்டிதர் என்னும் சிறப்புப் பெயரும், 'அருணந்தி தேவர்' என்னும் தீட்சா நாமமும் உடைய அருளாசிரியராவார். அவர்பால் உபதேசம் பெற்றவர் பெண்ணாகடத்தில் அவதரித்து மருதூரில் வாழ்ந்த மறைஞானசம்பந்த சிவாசாரியர். அவர்பால் உபதேசம் பெற்றவர் தில்லைவாழ் அந்தணர்களில் ஒருவரான உமாபதி சிவாசாரியர். இவர் தில்லைக்கு அருகில் உள்ள கொற்றவன்குடியில் திருமடம் அமைத்துக்கொண்டு எழுந்தருளியிருந்தமையால், இவர் 'கொற்றவன்குடி உமாபதி சிவாசாரியர்' எனப்பெறுகின்றார். மெய்கண்டார் முதலிய நால்வரும் திருக்கயிலாய பரம்பரையில் வந்து நிலவுலகத்தில்

ஞான ஒளி பரப்பி வாழ்ந்தமையால் ‘ புறச் சந்தானசாரியர் ’ எனப் பெறுகின்றனர்,

சந்தானசாரியர் சிறப்பு :

சைவ சமயம் சிவபெருமானை முதற் கடவுளாகக்கொண்ட சமயம். அதனால் அஃது அப்பெருமானைப் போலவே காலம் கடந்த பழமையுடையது. ஆயினும், கால வேறுபாட்டால் அதற்குச் சிற்சில சமயங்களில் மக்களிடையே குழப்ப நிலை உண்டாயிற்று. அப்பொழுதெல்லாம் சிவபெருமானது திருவருள், பல அருட்பெரு மக்களை உலகில் தோன்றச் செய்து, அவர்கள் வாயிலாக அக்குழப்ப நிலையை நீக்கித் தெளிவை உண்டாக்கியது. அம்முறையில் புறச்சமயங்களாகிய சமண பௌத்த மதங்களால் சைவசமயத்திற்கு இடையூறு நேர்ந்தபொழுது, பக்தி நெறியால் பற்பல அற்புதங்கள் வாயிலாகவும், அருட் பாடல்கள் வாயிலாகவும் அவ்விடையூற்றை நீக்கிச் சைவசமயத்தை முன்போலவே தழைத்தோங்கச் செய்தவர்கள் திருஞானசம்பந்தர் முதலிய நால்வர் சமயாசாரியர்கள். இவர்களது அருள் நிலைக் காலம் கி. பி. 7, 8, 9ம் நூற்றுண்டுகள் என்பது அனைவரும் அறிந்தது. மாணிக்க வாசகர் காலத்தில் கருத்து வேறுபாடு உண்டு.

சமயாசாரியர்களது அருட்சிறப்பின் விளக்கம் கி. பி. 12-ம் நூற்றுண்டு வரையில் மங்காமல் மிளிர்ந்து வந்தது. 12-ம் நூற்றுண்டில் சமயங்களின் தார தம்மியங்களைத் தருக்க முறைப்படி விவாதித்து நாட்டும் நிலைமை தமிழகத்தில் மிகத் தொடங்கியது. அதனல், நாயன்மார்கள் ஆழ்வார்களது பக்தி நெறிக்கும், அவர்களது பக்தி நெறிப் பாடல்கள், செயல்கள் முதலியவற்றிற்கும் முதன்மை கொடுக்கும் நிலை மாறி, மதாசாரியர்களது ஆய்வு நெறிக்கும், அவர்களது தத்துவ ஆராய்ச்சியானபாடியங்கட்கும், வாதங்களுக்கும் முதன்மை கொடுக்கும் நிலை உண்டாயிற்று. அந்நிலையில் தோன்றிய அருளாசிரியரே மெய்கண்ட தேவ நாயனர்.

இவர் மேற்காட்டிய முறைப்படி திருக்கயிலாய பரம்பரை நந்தி மரபில் பெற்ற உபதேசத்தால் மெய்யுணர்வு முற்றிச் சிவானுபூதிச் செல்வராய் விளங்கினமையால், தமது அருள் நூலாகிய சிவஞான போதத்தாலும், அருளுபதேசத்தாலும்

பிற மதாசாரியர்களால் விளைந்த குழப்பங்களை எளிதில் நீக்கிச் சைவ சமயத்தின் ஒப்புயர்வற்ற உண்மைப் பெருமையை இனிது விளக்கியருளினர்.

மதாசாரியர்களால் விளைந்த குறிப்பிடத்தக்க ஒரு குழப்பம், உபநிடதங்களுள் வரும் 'அத்துவிதம்' என்னும் சொல்லுக்குப் பலபட உரை கூறியதேயாகும். அச்சொல்லுக்கு உண்மைப் பொருள் கூறித் தெளிவு பெறச் செய்தமையே மெய்கண்டாருக்கு உள்ள ஒரு தனிச்சிறப்பு. 'மெய்கண்டார்' என்னும் பெயர், 'அத்துவிதத்திற்கு உண்மைப் பொருள் கண்டவர்' என்னும் காரணத்தைக் குறிப்பதாகவே தாயுமானவர் கூறுகின்றார்.

பொய்கண்டார் காணாப் புனிதமெனும் அத்துவித
மெய்கண்ட நாதனருள் மேவும்நாள் எந்நாளோ !

என்பது அவர் கூறும் பாடல்.

இங்ஙனம் தத்துவ முறைப்படி சைவ சமயத்தை நிலை நாட்டிய மெய்கண்டார், தம் மாணாக்கர் பல்லோருள்ளும் சிறந்த அருணந்தி தேவர் முதலாகத் தமது அருட் சந்தானம் வழிவழியாக நிலவிவரச் செய்தருளினர். அவ்வழியே இன்று தமிழகத்தில் சைவ ஆதீனங்களாய் விளங்கிச் சைவத்தையும், தமிழையும் காத்துவருகின்றன.

தருமையாதீன முதற்குரவர் :

திருக்கயிலாய பரம்பரை மெய்கண்ட சந்தானத் தருமையாதீன முதற்குரவர் ஸ்ரீ குருஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகள். இவர்கள் கமலை ஞானப்பிரகாச தேசிகர்பால் அருளுபதேசம் பெற்று ஞானாசாரியராகும் அருள் நிலை எய்தினமையின், தங்கள் குருமூர்த்திகளின் அருளாணையின் வண்ணம் காவிரியின் தென்கரையில் கௌரிமாயூரத்திற்குக் கிழக்கில் உள்ள வில்வாரணியமாகிய தருமபுரத்திற்கு எழுந்தருளி ஞானபீடத்தை நிறுவியருளினர்கள். இவர்களது மெய்கண்ட சந்தான பரம்பரை அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது.

ஆதி பரமாசாரியர் :

திருக்கயிலாய பரம்பரைத் திருத்தருமையாதீனத்தின் ஆதி பரமாசாரிய சுவாமிகள் ஸ்ரீ குருஞானசம்பந்தர். பாண்டிய நாட்டில் கார்காத்த வேளாள மரபில் சுப்பிரமணிய பிள்ளை, மீனாட்சியம்மை என்னும் பெற்றோர்க்கு அரும்பெறற் புதல்வராய் அவதரித்து, முன்னைத் தவத்தொடர்பால் இளமையிலே கல்வி கேள்வி அறிவொழுக்கங்களுடன் சிவபத்தியும் சிறந்து விளங்கினார்கள். இந்நிலையில் இவர்கள் பெற்றோர் தம் குலதெய்வமாகிய அங்கயற்கண்ணியோடு உடனுய ஆலவாய்ச் சொக்கனைத் தரிசித்துவர, இவர்களையும் மதுரைக்கு அழைத்துச்சென்று தரிசனம் செய்தபொழுது, இவர்கள் உயிர்க்குத் தாய்தந்தையரை விட்டுப்பிரிந்து உடற்குத் தாய்தந்தையருடன் செல்ல இசையாமல், தமது கருத்தை அவர்களிடம் இனிமையாக எடுத்துரைத்தபொழுது அவர்களும் தமது தவம் பலிக்கும் நிலைமையை அறிந்து மனம் தெளிந்து தம் இடத்திற்குத் திரும்பினர்.

பின்னர் ஞானசம்பந்தர் நாள்தோறும்பொற்றாமரைத்தீர்த்தத்தில் முழுகி ஆலவாய்ப் பெருமானை வழிபட்டிருக்கையில் தாங்கள் முற்பிறப்பில் பூசித்த ஆன்மார்த்த லிங்கம் பொற்றாமரைத் தீர்த்தத்தினின்றும் தமது திருக்கரத்தில் கிடைக்கப் பெற்றுப் பரவசம் உற்று,

கண்ணுக் கினிய பொருளாகி யேயென் கரத்தில்வந்தாய்
விண்ணும் பரவிடும் அற்புத மேயென்ன விஞ்சையிதான்
மண்ணும் புகழ்ந்திட என்னையும் பூரண வாரியுள்ளே
நண்ணும் படிசெய் மதுரா புரிச்சொக்க நாயகனே.

என்றபாடலைப் பாடியருளினார்கள்.

அதன் பின்பு ஆலவாய்ப் பெருமான் கனவில் தோன்றிக் கட்டளையிட்டருளியபடி திருவாரூர் சென்று அங்கு மெய்கண்ட சந்தானத்தில் ஞானகுருவாய் விளங்கிய கமலை ஞானப்பிரகாசர்பால் அருள் உபதேசமும், ஞானபூசா முறையும் பெற்றுக் குருமூர்த்திகளைவிட்டுப் பிரியாது உடன் இருந்தார்கள். அவ்வாறு இருக்கும் நாட்களில் இவர்களது திருவருள் மகிமையை உணர்ந்த குருமூர்த்திகள் இவர்களைத் தனிமையில்

ஞானபீடாதிபதிகளாய் இருந்து பக்குவிகளுக்கு ஞானத்தை உபதேசித்துச் சமய பரிபாலனம் செய்யுமாறு கட்டளையிட்டு 'அதற்குரிய இடம் மாயூரத்திற்குக் கிழக்கில் உள்ள தரும புரமே' என்பதையும் தெரிவித்தருளினார்கள். தம் குருமூர்த்தி களாலே குருவாக அருளிச் செய்யப்பெற்ற ஞானசம்பந்தர் குரு ஆணையைக் கடத்தல் கூடாமையால்,

கனக்கும் பொதிக்கும் எருதுக்கும் தன்னிச்சை கண்டதுண்டோ!
எனக்கும் உடற்கும் எனதிச்சை யோ! இணங் கார்புரத்தைச்
சினக்குங் கமலையுள் ஞானப்ர காச சிதம்பர இன்
றுனக்கிச்சை எப்படி அப்படி யாக உரைத்தருளே

என்ற பாடலை அருளிச்செய்து பிரியா விடைபெற்றுத் தரும புரத்திற்கு எழுந்தருளினார்கள்.

அவ்வமையம் வில்வாரணியமாய் இருந்த இவ்விடத்தில் ஸ்ரீ அபயாம்பிகை சமேத ஸ்ரீ தருமபுரீசரை வழிபட்டுக்கொண் டிருந்த அகத்தியமுனிவர் மாணுக்கர்கள் இவர்களது ஞானத் தின் மேன்மையைக் கண்டு மகிழ்ந்து, அவ்வழிபாட்டினை இவர்களிடமே ஒப்புவித்துச் சென்றார்கள்.

தருமபுரேசர் திருப்பணியை ஏற்றுக்கொண்ட பரமாசாரிய சுவாமிகள் அவ் ஆலயத்திற்குத் தென்மேற்கில் ஆச்சிரமம் அமைத்து ஆன்மார்த்தமூர்த்தியாகிய சொக்கலிங்கப் பெரு மானை வழிபட்டுக்கொண்டு, ஞானபீடத்தில் வீற்றிருந்து, தங்களை வந்து அடைந்த பக்குவர்களுக்கு ஞானோபதேசம் செய்தும், தருமபுரேசர் ஆலயத்தைப் பரிபாலித்தும், தோத்திர சாத்திர நூல்களை அருளிச்செய்தும் சமய பரிபாலனம்புரிந்து வந்தார்கள். அக்காலத்தில் இவர்களிடம் அவ்வப்பொழுது காணப்பட்ட திருவருள் நிகழ்ச்சிகள் பல.

இவ்வாறு பல்லாண்டுகள் ஞானஒளி பரப்பித் திகழ்ந்த ஆதிபரமாசாரிய சுவாமிகள் தங்களுக்குப் பரிபூரண நிலைகூட இருப்பதைத் திருவருளால் உணர்ந்து, ஸ்ரீ தருமபுரேசர் ஆலயத்திற்கு மேற்கில் ஞானபுரீசர் ஆலயம் அமைத்து, தங்கள் மாணவர்களில் ஸ்ரீ ஆனந்தபரவச தேசிகருக்கு உப தேசம் செய்து பீடாதிபத்தியத்தை அளித்து, ஞானபுரீசர் திருவடியின்கீழ்ச் சிவசமாதி கூடினார்கள்.

2 ஆவது குருமகாசந்நிதானம் :

ஸ்ரீ ஆனந்தபரவச தேசிகர் அதிதீவிர பக்குவத்தால் உலகியலை மறந்து தம் ஆசாரியரது அருள்நிலையத்தைத் தரிசித்த வண்ணமே ஞானபுரீசர் ஆலயத்திற்கு மேற்றிசையில் அமர்ந்து சமாதி கூடினார்கள்.

3 ஆவது குருமகாசந்நிதானம் :

ஏனைய மாணுக்கர், குருபரம்பரை தொடராது போவதை எண்ணி வருந்தி, முதற் குருமூர்த்திகள் சிவசமாதிகூடியிருக்கும் திருமுன்பில் சென்று விண்ணப்பிக்க, குருமூர்த்திகள் மீண்டும் சமாதியினின்றும் எழுந்தருளிவந்து, ஸ்ரீ சச்சிதானந்த தேசிகருக்கு உபதேசம் செய்தருளி, அவர்கட்கு நிட்டைநிலை கூடாமை கண்டு,

தானந்த மாதிநடு வில்லா தோங்கும்
சச்சிதா னந்தமயந் தானே யாய
ஆனந்த பரவசனைக் கண்டுங் கண்டும்
அந்தந்தோ பரகதியை யறிந்தீ ரில்லை
மானந்தான் வடிவாகி நிற்ற லாலோ
மலமாயை கன்மமிவை மடியா தாலோ
ஞானந்தா னுமதுளத்தி லுதியா தாலோ
நாமறியோம் உமதுமயல் நவிற்று வீரே.

என்னும் திருப்பாட்டினை அருளிச்செய்தபொழுது அந்நிலை அவர்கட்குக் கைவந்தது. அதன்பின் அவர்களைப் பீடத்தில் இருக்கச்செய்து, முன்போலவே சமாதி நிலையில் அமர்ந்தருளிப் பின்னர் அருளாட்சிக்குவரும் மகாசந்நிதானங்கட்கும் தமது அருள் விளக்கத்தை அவ்வப்பொழுது செய்து வருகின்றார்கள்.

4 ஆவது குருமகாசந்நிதானம் :

ஸ்ரீ சச்சிதானந்த தேசிகருக்குபின் நான்காவது குருமகாசந்நிதானமாக எழுந்தருளியவர்கள் ஸ்ரீ மாசிலாமணிதேசிகர். இவர்களே ஸ்ரீ வைகுண்டத்தில் பிறந்து, ஐந்து வயதுவரை ஊமையாயிருந்து முருகனருளால் ஊமை நீங்கப்பெற்று, அப்பொழுதே கந்தர் கலிவெண்பாவும் பின்பு மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழும் பாடியருளிய ஸ்ரீ குமரகுருபர

சுவாமிகளை ஆட்கொண்டு, ஞானோபதேசம்செய்து காசியில் தங்கிச் சைவசமயத்தைப் பரப்பிவருமாறு பணித்தருளி னார்கள். அவ்வருளாணையின் வண்ணம் ஸ்ரீ குமரகுருபரர் நிறுவிய குமாரசுவாமிமடம் காசியில் இன்றும் சிறப்புடன் விளங்குதல் யாவரும் அறிந்தது.

5 ஆவது குருமகாசந்நிதானம் :

ஸ்ரீ ஞானசம்பந்த தேசிகர்: இவர்கள் காலத்தில் இவர் களது அருளாட்சியில் ஈடுபாடுகொண்ட மாவை குமாரசுவாமி முதலியார் என்பவர் சிவசைலம் முதலிய இடங்களில் 96 மடங்கள் கட்டி ஆதீனத்திற்கு அளித்தார்.

6 ஆவது குருமாசந்நிதானம் :

ஸ்ரீ திருஞானசம்பந்த தேசிகர் : இவர்கள் அடியார் கூட்டத்துடன் செய்த தென்னாட்டு யாத்திரையில் வேள்வி மலை முருகனை வணங்கியபொழுது வள்ளியம்மை புலனாகா மையால், 'இங்கு வள்ளித் தாய் இல்லையோ' என்று கேட்ட பொழுது, அவ்வம்மை, 'இதோ இருக்கின்றேன்' என்று திருமேனியை வளைத்துக் காட்சி வழங்கினாள்.

இவர்கள் திருநெல்வேலிச் சிந்துபூந்துறை மடத்தில் எழுந்தருளியிருந்தபொழுது,அங்குள்ள அறச்சாலை மடத்தின் அதிபராயும், சிதம்பரம் குகைமடத்து ஞானப்பிரகாசரிடம் உபதேசம் பெற்று ஆன்மானந்த வாதியாயும் இருந்து, ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருளிய முத்தி நிச்சய நூலுக்கு மறுப்பும் எழுதிய புலவர் ஒருவர் எவ்வகையிலும் மன அமைதி பெறாமல் இக் குருமூர்த்திகளை வந்து வணங்க, அவருக்கு இவர்கள் ஞானோபதேசம் செய்து 'தமிழாகரர்' என்னும் தீட்சாநாமமும் தந்து ஆட்கொண்டருளினார்கள்.

7 ஆவது குருமகாசந்நிதானம் :

ஸ்ரீ திருவம்பல தேசிகர் : இவர்கள் காலத்தில் தஞ்சை யை ஆண்ட சரபோஜி மன்னன் சிலரது படிற்றுரையால் தருமையில் உள்ள ஸ்ரீ ஞானபுரீசுரர் கோயிலைச் 'சூத்திர சமாதி' என்று இகழ்ந்து அதனை இடிக்கும்படி ஆணை தந்து

ஆட்களையனுப்ப, இவர்கள் " ஈசன் பலகீனன் என்றக்கால் " " தேசஞ் சிவாலயங்கள் " என்ற சிவபோக சார வெண்பாக்களை ஓதி அமைதியுற்றிருக்க, ஆலயத்தில் இடித்த இடந்தோறும் இரத்தம்பெருகி, ஆட்களும் மூர்ச்சையாயினர். ஆணை பிறப்பித்த மன்னன் கண்ணொளியிழந்தான். இவற்றால் அவன் தன் தவற்றை உணர்ந்து, இவர்களிடம் வந்து வணங்கி மன்னிப்பு வேண்டிக் கண்ணொளி பெற்று, ஞானபுரீசரது அர்த்தயாம பூசைக்கு நிலங்களை நிவந்தமாக அளித்து மீண்டான்.

8 ஆவது குருமகாசந்நிதானம் :

ஸ்ரீ அழகிய திருச்சிற்றம்பல தேசிகர் : இவர்கள் தமது பரிகல சேடத்தால் மலடியான் ஒருத்தியை மகப்பேறு பெறச் செய்தருளினார்கள். இவர்கள் காலத்தில் அடியார் திருக்கூட்டத்துள் ஒருவராகிய ஸ்ரீ அழகிய திருச்சிற்றம்பல தேசிகர் என்பவர் சொர்க்கபுரம் ஆதீனத்தை நிறுவிச் சமய பரிபாலனம் செய்தார்.

9ஆவது குருமகாசந்நிதானம் :

ஸ்ரீ திருநாவுக்கரசு தேசிகர் : இவர்கள் திருமுன் ' திருமாலே பரம்பொருள் ' என்று வாதிட்ட திருமால் சமயி ஒருவன் ஊமையாகி, இவர்கள் அருள்நோக்கால் ஊமை நீங்கப்பெற்றுத் திருத்தம் உற்றான்.

10ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீ சிவஞான தேசிகர் : இவர்கள் இளமையிலே துறவு பூண்டு காசியில் தங்கி வடமொழி தென்மொழிகளில் வல்லவரானார்கள். இவர்களால் நிகழ்ந்த அருள் அற்புதச் செயல்கள் பல. பின்னரும் காசியாத்திரை செய்து அங்குப் பலநாள் எழுந்தருளியிருந்து அரிய அருட்பாக்கள் பல அருளிச்செய்து மீண்டருளினார்கள், மற்றும் இவர்கள் அருளிய அருட்பாக்கள் பல. இவர்கள்பால் அருளுபதேசம் பெற்றுச் சிறப்புற்றோர் பலர்.

11 ஆவது குருமகாசந்நிதானம்:

ஸ்ரீ சச்சிதானந்ததேசிகர்: இவர்களிடம் அரசன் மாறு வேடம் பூண்டு வந்து சோறு இரந்து பெற்று, இவர்களது கருணைப்பெருக்கை அறிந்தான். இவர்கள் வஞ்சகர் சிலர் ஊட்டிய நஞ்சினையும் உண்டு நலத்துடன் இருந்து, அவர்களைத் திருத்தியருளினார்கள்.

12 ஆவது குருமகாசந்நிதானம்:

ஸ்ரீ முத்துக்குமார தேசிகர்: இவர்கள் திருநெல்வேலியில் இருந்த மேடை தளவாய் முதலியார் முதலிய அன்பர் பலரது வேண்டுகோளை ஏற்றுத் திருநெல்வேலிக்கு எழுந்தருளும்பொழுது வழியில் காளையார்கோயிலில் தங்கினார்கள். அவ்வமையம் அங்கு வாழ்ந்திருந்த 'அருணகிரி முதலியார்' என்பவர், தம் மனைவியார் சிவாகாமியம்மையாருடன் வந்து குருமூர்த்திகளது திருவடிகளில் விழுந்து பணிந்து, நெடுங்காலமாகத் தமக்கு மகப்பேறின்மையை விண்ணப்பித்துப் பரிகலசேடம் அளித்தருளும்படி வேண்டினர். அப்பொழுது மாலைக் காலமாக இருந்தபடியால் குருமூர்த்திகள் மடைப்பள்ளியிற் சிதறிக்கிடந்த அன்னத்தைப் பொறுக்கிவரச்செய்து, அதனையே அருட்பிரசாதமாக அளித்தருளினார்கள். அதனை ஏற்று உண்ட சிவகாமியம்மையார் பின்னர் ஆண்மகவைப் பெற, பெற்றோர் இருவரும் பெருமகிழ்வுற்றுக் குருவருளை வியந்து துதித்தனர்.

13 ஆவது குருமகாசந்நிதானம்:

ஸ்ரீ ஞானசம்பந்த தேசிகர்: இவர்கள் காசிக் கங்கை நீரைத் தங்கள் ஆன்மார்த்த மூர்த்தியின் திருமுன்பிற்கு வருவித்து அதில் தமக்கு முற்பட்ட மகாசந்நிதானங்களையும் நினைந்து நினைந்து மூழ்கியவர்கள். இப்பெருஞ்செயலுக்குப் பெரிதும் முன்னின்று உதவியவர்கள் ஆதீனத் திருக்கூட்டத்து அடியவருள் ஒருவராகிய விருத்தாசலத் தம்பிரான் சுவாமிகள்.

மகாசந்நிதானம் அவர்கள் தம் ஆன்மார்த்த மூர்த்தியுடன் காசி யாத்திரை சென்று திரும்புவதில் உள்ள இடர்ப்பாடுகளைத் திருவுளத்தடைத்து, 'நமது ஆதீனத் திருக்

கூட்டத்தவரில் கங்கையைத் தருமைக்குக் கொண்டுவரும் ஆற்றல் படைத்தவர் ஒருவரும் இல்லையோ' என்று கேட்ட பொழுது, விருத்தாசலத் தம்பிரான்சுவாமிகளே 'திருவருளையும் குருவருளையும், துணைக்கொண்டு அடியேன் இப்பணியை நிறைவேற்றுகின்றேன்' என்று கூறிஉத்தரவுபெற்றுத்திருவாங்கூர் மன்னனது ஆட்சிக்குட்பட்ட பத்மநாப புரத்துக்குச் சென்றார்கள். சென்றவர்கள் அங்குள்ள சிவாலயத்தில் திருமுன்பு நின்று தமக்கு இயல்பாக உள்ள சாரங்கி வாத்திய வன்மையால் அதன் வழியே தேவாரம் முதலிய அருட்பாடல்களை இனிமையாகப் பாடிப் பரவசப்பட்டிருக்கும்பொழுது அவர் தோளில் அம்பிகை நின்று நடனம் புரிவதை அங்கு வந்த மன்னன் கண்டு வியந்து பணிந்து சுவாமிகளைத் தன் அரண்மனைக்கு எழுந்தருள்வித்து வழிபாடுகள் பல இயற்றி, 'அடியேனால் ஆகத் தக்க பணி ஏதேனும் உண்டோ' என்று கேட்க, சுவாமிகள் கங்கை நீர் தருமைக்கு வரவேண்டிய நிலைமையைத் தெரிவித்தார்கள். உடனே அரசன் யானைகள் பலவற்றையும், ஒட்டகங்கள் பலவற்றையும் விடுத்து அளவற்ற பாத்திரங்களால் கங்கை நீரைக் கொணர்விக்க, தருமை ஆதீனத்தின் பூசை முற்றத்தில் அந்நீர் ஏராளமாக நிரப்பப்பெற்றது. அதில் முன்சொன்னவாறு குருமூர்த்திகள் மூழ்கி மகிழ்ந்தார்கள்.

14 ஆவது குருமகாசந்நிதானம் :

ஸ்ரீ கந்தப்ப தேசிகர் : இவர்கள் ஆட்சிக் காலத்தில் இவர்கள் தென்னாட்டு யாத்திரையை மேற்கொண்டு சென்று திருநெல்வேலியில் எழுந்தருளியிருந்தபொழுது மழையில்லாமையால் நாடு பஞ்சத்திற்குள்ளாகியிருந்தது. ஆயினும் வெள்ளையர் அரசாங்கம் குடிகளை நிலவரி தருமாறு வற்புறுத்தி வந்தது. வரி செலுத்தமாட்டாத குடிமக்கள் வெள்ளைத் துரையிடம் சென்று மழை இல்லாமையைச் சொல்லி முறையிட்டனர். துரையவர்கள், 'உங்கள் பாதிரியாரிடம் (குருமூர்த்திகளிடம்) நீங்கள் சென்று தெரிவித்து வேண்டிக் கொண்டால் மழை பெய்வித்துவிடுவாரே' என்று ஏளனமாகக் கூறினார். மழையில்லாத வருத்தத்தோடு வெள்ளைத்துரையின் இகழுரையால் வருத்தம் மிக, மக்கள் யாவரும் குருமூர்த்திகளிடம் சென்று நிகழ்ந்தவற்றை எடுத்துக்கூறி விண்ணப்

பித்தனர். குருமூர்த்திகள் புன்முறுவல் பூத்து, சொக்கநாதப் பெருமான் பூசனைக்குப் பின்னர்ச் சிறிது நேரம் சமாதியில் ஆழ்ந்திருந்து பின்னர் இப்பாடலை அருளிச்செய்தார்கள்,

சைவ சமயஞ் சமயமெனில், அச்சமயத்
தெய்வம் பிறைசூடுந் தெய்வமெனில், — ஐவரைவென்
றூனந்த வெள்ளத் தழுந்துவதே முத்தியெனில்,
வானங்காள் பெய்க மழை.

இப்பாடலை அருளிச்செய்தவுடன் மேகங்கள் திரண்டு மழை பொழியப் பஞ்சம் தீர்ந்தது. வெள்ளைத்துரை வெட்க முற்றுக் குருமூர்த்திகளிடம் வந்து, நூறு வராகன் பொன் காணிக்கையாக வைத்து வணங்கிப் பிழைபொறுக்க வேண்டினார். குருமூர்த்திகளும் கடைக்கண் நோக்கம் பாலித்தருளினார்கள்.

15 ஆவது குருமகாசந்நிதானம்:

ஸ்ரீ மாசிலாமணி தேசிகர்: இவர்கள் 13 ஆவது மகா சந்நிதானத்தின் ஆட்சிக் காலத்தில் கங்கை நீரைத் தருமைக்குக் கொணர்ந்த அருட்பணியில் ஈடுபட்ட விருத்தாசலத் தம்பிரான் சுவாமிகளேயாவர். இவர்களது இசை வன்மை 13 ஆவது மகாசந்நிதானத்தின் குறிப்பிலேயே கூறப்பட்டது. இவர்கள் காலத்திலும் மழையின்றி நாடு பஞ்சத்தால் வருந்திய பொழுது இவர்கள் தமது சாரங்கி வாத்திய இசையில் திருவையாற்றுப்பெருமான் திருமுன்பில் மேகராகக் குறிஞ்சிப் பண்ணில் அமைந்த ஞானசம்பந்தரது தேவாரத் திருப்பதிகங்களைப்பாடி வணங்கப் பெருமழை பெய்து பஞ்சம் நீங்கியது. மற்றொரு சமையத்திலும் தாது வருஷப் பஞ்சத்திலும் இவர்கள் எங்கும் வருண ஜெபம் முதலியன நடக்கச்செய்தமையால், மழை வளம் சுரந்து மக்கள் நலம் உற்றனர். இவர்கள் தம்பிரான் சுவாமிகளாய் இருந்தபொழுது ஏற்பட்ட திருவாங்கூர் மன்னனது தொடர்பு, இவர்கள் மகாசந்நிதானமாக அருளாட்சி ஏற்றபின் வளர்ந்து பெருகிற்று. அதற்குச் சிறந்த காரணராய் இருந்தவர் சுசீந்திரம் கட்டளைவிசாரணையில் இருந்த 'இலக்கண சுவாமிகள்' என்னும் முத்துக்குமாரத் தம்பிரான் சுவாமிகளாவர். இவர்களிடம் அம்மன்னன் பல இலக்கண இலக்கிய புராண சாத்திர நூல்களைக் கேட்டு அகம் மிக மகிழ்ந்தான்.

16 ஆவது குருமகாசந்நிதானம் :

ஸ்ரீ சச்சிதானந்த தேசிகர் : இவர்கள் காலத்தில் மாயூரம் துலாக்கட்டத்தில் இருந்த சாஸ்திரியார் ஒருவர் பிரம்ம சூத்திரத்தை வைத்து விஷ்ணு பரத்துவம் சாதிக்க விரும்பினார். அவரது விருப்பப்படியே இக் குருமூர்த்திகளே நடுவு நிலைமையில் வீற்றிருக்க, ஆதீனத்து அடியவருட் சிறந்த 'ஆறுமுகத் தம்பிரான்' என்பவருடன் சமய வாதம் தொடங்கி நடைபெற்றது. தம்பிரான் சுவாமிகள் பல பிரபல பிரமாணங்களால் சிவபரத்துவமே வேத முடிபாதலை விளக்கிக் காட்ட, சாஸ்திரியாரும் உடன்பட்டுத் தம்பிரான் சுவாமிகளது திருவடிகளில் பணிய முயன்றார். சுவாமிகள், 'இங்கு வணக்கமெல்லாம் குருமூர்த்திகட்கே' என்று கூறச் சாஸ்திரியார் மகாசந்நிதானத்தின் திருவடிகளில் வணங்கிச் சிவதீட்சை அளித்தருள வேண்டினார். குருமூர்த்திகள் திருவுளம் இசையச் சாஸ்திரியார் தம் மனைவியாரோடும் வந்து சிவதீட்சை பெற்று மகாசைவராகி 'வெள்ளப் பள்ளம்' என்னும் கிராமத்தைக் குருகாணிக்கையாக ஏற்பித்தார். இவர்கள் காலத்தில் திரிசிரபுரம் மகாவித்துவான், மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் ஆதீனத் தொடர்பு பெற்றிருந்தார்கள்.

17 ஆவது குருமகாசந்நிதானம் :

ஸ்ரீ மாணிக்கவாசக தேசிகர் : இவர்கள் அருளாட்சிக் காலத்தில் ஆதீன அடியவர் பலர் புலமை பெற்றுத் திகழ்ந்து ஆங்காங்குச் சென்று சைவசமயத்தையும், தமிழ் மொழியையும் பரப்பிவந்தனர். 'பரமசிவத் தம்பிரான்' என்பவர் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையிடம் பாடங்கேட்டுத் தாமும் 'மகாவித்துவான்' என்னும் சிறப்புப் பெயர் பெற்றுப் பல நூல்களை இயற்றினார். அவற்றுள் 'சிவானுபவ சாரம்' என்னும் நூலை மகாவித்துவான், மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களே பாராட்டியுள்ளார் இந்நூல் அச்சாகியுள்ளது. 'ஆறுமுகத் தம்பிரான்' என்பவர் பன்மொழிப் புலவராய்ப் பலருக்கு வித்தியா குருவாய் விளங்கினார். இவர் தம் மாணுக்கர் ஆண்டுதோறும் இவருக்குக் காணிக்கை செலுத்தி வந்தனர். 'பழமலைத் தம்பிரான்' என்பவர், மைசூர் மன்னர் அழைப்பிற்கு இரங்கி அங்குச்சென்று சாத்திர விரிவுரைகள் நிகழ்த்தி, மன்னரால் பல சிறப்புக்களைப் பெற்றார். மாவட்ட நடுவர்

மாயூரம் வேதநாயகம் பிள்ளையவர்கள் இப்பதினேழாவது மகாசந்நிதானத்தின் அருளாட்சிக் காலத்தில் இருந்தவரே.

18 ஆவது குருமகாசந்நிதானம்:

ஸ்ரீசிவஞானதேசிகர்: இவர்கள் காலத்தில் ஆதீனத்திலும், ஆதீனக் கோயில்களிலும் புதிய முறையில் பல திருப்பணிகள் செய்யப்பெற்றன. மொகஞ்சொதாரோ, ஹரப்பா முதலிய மறைந்த நகரங்கள் கண்டுபிடிக்கப்பட்டுப் பல வரலாற்று உண்மைகள் வெளியானது இவர்கள் காலத்திலேயாகும்.

19 ஆவது குருமகாசந்நிதானம்:

ஸ்ரீ மாணிக்கவாசக தேசிகர்; இவர்கள் காலத்தில் இந்திய மக்கள் வெள்ளையரோடு சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். அவ்வமையம் ஆதீனத்து அடியவர்களையும், ஆதீனக் கோயில்களையும் தக்க முறையில் பரிபாலித்து வந்த சிறப்பு இவர்களுக்கு உரியது. கடன் தொல்லைகளிலிருந்து மடத்தைமீட்டு இன்றைய வளர்ச்சிக்கு அடித்தளமிட்டவர்கள் இவர்கள்.

20 ஆவது குருமகாசந்நிதானம்:

ஸ்ரீ சிவஞான தேசிகர்: இவர்கள் ஆட்சிக்கு வந்த காலம், முதல் உலக மகாயுத்தம் நடைபெற்றுக்கொண்டிருந்த காலம். அவ்வமையம் தமது அருளாட்சிக்குள் யாதோர் இன்னலும் நிகழாதவாறு சொக்கநாதர் வழிபாட்டினாலும், ஆலயச் சிறப்பு வழிபாடுகளாலும் இவர்கள் சமய பரிபாலனம் செய்துவந்தார்கள். இங்கிலாந்து மன்னர் ஐந்தாம் ஜார்ஜ் தில்லியில் வந்து தர்பார் நடத்தியது இவர்கள் காலத்திலேயாகும். மதப்பற்றுடையவர்களும் அரசியலில் தீவிர பங்குகொண்டிருந்த அக்காலத்தில் இவர்களது அருளாட்சி செவ்வனே நடைபெற்றது.

21 ஆவது குருமகாசந்நிதானம்:

ஸ்ரீ சச்சிதானந்த தேசிகர்: இவர்களது அருளாட்சி மிகக் குறைந்த காலமே - ஓராண்டுக்குள்ளேயே நடைபெற்றது. அதற்குள் ஆதீன நிதிநிலை திருந்திநின்றது.

22 ஆவது குருமகாசந்நிதானம் :

ஸ்ரீ மாணிக்கவாசக தேசிகர்: இவர்கள் காலத்தில் சென்னை அரசில் இந்து சமய அறநிலைய மன்றம் தோன்றியது. இவர்களது நான்கு ஆண்டு அருளாட்சிக் காலத்தில் சமயப் பணிகளுக்குப் பொருளுதவிகள் செய்யப் பெற்றன. திருப்பாதிரிப்புலியூர் ஸ்ரீ ஞானியார் சுவாமிகள் மடத்தில் நடைபெற்ற சைவ சித்தாந்த மாநாட்டிற்கு ஓராயிர ரூபாய் உதவித் தொகையாக அளிக்கப்பட்டது. நாத்திகம் சிறிது தலைதூக்கிய அக்காலத்தில், இத்தகைய துணைச்செயல் கள் இன்றியமையாதனவாய் இருந்தன.

23 ஆவது குருமகாசந்நிதானம் :

ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர். இவர்கள் தமிழ்நாட்டில் உள்ள பல தலங்களுக்கும் யாத்திரை செய்தார்கள். அவ் வமையம் ஆங்காங்குள்ள பெருமக்கள் பலரும் மகாசந்நி தானம் அவர்களது அருள்பெற மிகச் சிறப்பாக வரவேற்றுப் பட்டணப் பிரவேசங்கள் செய்வித்து, வழிபாடுகள் செய்து மகிழ்ந்தார்கள். திருச்சிராப்பள்ளித் திரு. எல். எம். பரமசிவம் பிள்ளையவர்கள், திரு. டி. எம். நாராயணசாமிப் பிள்ளையவர் கள், மதுரைத் திரு. பி. டி. ராஜன் அவர்கள், திருநெல்வேலி மேடை தளவாய் முதலியார், கோட்டைப் பிள்ளைமார்கள் முதலியோர் குருமூர்த்திகளை வரவேற்றுச் சிறப்புற்ற பெரு மக்களில் குறிப்பிடத்தக்க சிலராவர். தளவாய் முதலியார் சொக்கநாதருக்குக் கனகாபிஷேகம் செய்வித்து மகிழ்ந்தமை இங்குக்குறிப்பிடத்தக்கதொன்று.

இவர்கள் ஆட்சிக் காலத்தில் யாழ்ப்பாணம் சுவாமிநாத பண்டிதர் ஆதீன வித்வத் சிகாமணியாய் விளங்கிப் பல அரும் பணிகள் செய்தார்கள், சீகாழி ப. அ. முத்துத் தாண்டவ ராயப்பிள்ளை, அவர் குமாரர் சோமசுந்தரம் பிள்ளை எம். ஏ., எல், டி., காழி. சிவ. கண்ணுசாமிப்பிள்ளை முதலாக மற்றும் பல புலவர்கள் ஆதீனத்தின் சார்பில் அறிவுப் பணி செய்தார் கள். சமய நூல்கள் பல அச்சேற்றி அன்பர்கட்கு இலவச மாக வழங்கப்பெற்றன.

24 ஆவது குருமகாசந்நிதானம் :

ஸ்ரீ சண்முக தேசிகர்: இவர்கள் காலத்தில் ஆதீனத்தின் ஆலயப்பணிகளும், சமயப்பணி தமிழ்ப்பணிகளும், சமூகப் பணிகளும் சிறப்புற்றுத் தழைத்தன. ஆதீனத்தின் நூலகம் பலவகை நூல்களால் விரிவுகண்டது. சமயப் பேரறிஞர்கள் பலரும் பங்கு பற்றிப் பணியாற்றும் வகையில் சைவசித்தாந்த மாநாடு ஆதீனத்தில் நடைபெற்றது. ஞானசம்பந்தம் என்னும் சமய இலக்கிய திங்கள் இதழ் தொடங்கி வெளிவரலாயிற்று. ஸ்ரீ குருஞானசம்பந்தர் துவக்கப்பள்ளி, ஆகம பாடசாலை, தேவார பாடசாலை ஆகிய கல்வி நிலையங்கள் தோன்றின. ஞானசம்பந்தம் அச்சக வாயிலாகப் பல சிறிய, பெரிய வெளியீடுகள் வெளிவந்தன. ஆதீனக் கோயில்களிலும், ஆதீனத் திருமடத்திலும் சிறப்புக் காலங்களில் சமயச் சொற்பொழிவுகள் பல நிகழ்ந்தன. மற்றும் இன்னோரன்ன அரும்பெரும்பணிகள் பல இவர்கள் காலத்தில் தோன்றி வளர்ந்தன.

25 ஆவது குருமகாசந்நிதானம் :

ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள். இவர்கள் திருவுளப்பாங்கின் வண்ணம் நிகழ்ந்த அரும்பெருஞ் செயல்கள் அளவற்றனவாகும். தருமையாதீனம் ‘ திருக்கயிலாய பரம்பரை ’ என்பதை மெய்பிக்கும் வகையில் இவர்கள் கடுமையான கயிலாய யாத்திரையை மேற்கொண்டு கயிலாய தரிசனம் செய்து மீண்டருளிக் கயிலைக் குருமணியாய் விளங்கினார்கள். இமயப் பெருந்தலங்களாகிய கேதாரநாதம், அமரநாதம், பசுபதிநாதம் என்பவற்றையும், ஜோதிர்லிங்கத் தலங்களையும் இவர்கள் தரிசித்து மகிழ்ந்தார்கள். காசித்தலத்திற்கு ஒன்பது முறை யாத்திரை செய்து அங்குப் பலநாள் தங்கிக் கங்கா ஸ்நானம் திருக்கோயில் வழிபாடு அடியவர் வழிபாடு முதலியன நிகழ்வித்தார்கள். ஆதீனத்தின் சார்பில் ஆலயப்பணிகள், அறப்பணிகள், கல்விப்பணிகள் முதலிய அளவற்ற பணிகளும் சிறப்புற நிகழத் திருவுளம் பாலித்தார்கள்.

திருமுறைகளுள் ஒவ்வொன்றும் தனித்தனி நூலாக, அரியகுறிப்புரை ஆராய்ச்சிகளுடன் வெளிவந்தமை இங்குச்

சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. இவர்களது அருட்டிருவுளப் பாங்கின் அருமையினை உணர்ந்த அன்பர்கள் இவர்களுக்குக் கனகாபிஷேகம் செய்வித்து மகிழ்ந்தார்கள். இறுதியிலும் இவர்கள் காசி யாத்திரையை மேற்கொண்டு சென்று அங்குப் பரிபூரணமானமை அனைவரும் வியந்து போற்றும் திருவருட் செயலாக உள்ளது. வழிபாடு, ஜெபம், தியானம், திருமுறைப் பாராயணம் முதலியவற்றில் இடையருத ஈடுபாடுகொண்ட இவர்கட்கு இறைவன் காசியில் பரிபூரணமாகும் நிலையை அருள் செய்தது இயல்பேயாகும்.

26 ஆவது குருமகாசந்நிதானம் :

இதுபொழுது 26 ஆவது மகாசந்நிதானமாக அருளாட்சி ஏற்று இருப்பவர்கள் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள். இவர்கள் கல்வி கேள்விகளில் சிறந்து வித்துவான் பட்டம்பெற்றவர்கள். பேச்சாற்றல் மிக்கவர்கள். ஒடுக்கத்தில் இருந்தபொழுது திருச்சிராப்பள்ளியில் உள்ள ஸ்ரீ மௌனமடம் கட்டளை விசாரணையில் இருந்ததுடன் சென்னையில் உள்ள ஆதீன சமயப் பிரசார நிலையத்தின் பொறுப்பினை ஏற்றுச் சிறப்பு நாட்களில் அங்குச் சமய மாநாடுகள் சமயச் சொற்பொழிவுகள் முதலியவற்றை நிகழ்த்துவித்தும், வாரவழிபாடு, தல யாத்திரை முதலியவை களைத் திருக்கூட்டத்தவருடன் செய்தும், சமய வளர்ச்சிக்கு ஆவன பல செய்தவர்கள். அப்பர் அவதாரத் தலமாகிய திருவாமூரில் நூதனமாக எடுக்கப்பெற்ற அப்பர் ஆலயத் திருப்பணியை அன்பர் பலரைக்கொண்டு முற்றுவித்து, நித்திய பூசை, மாதச் சதயம், ஆண்டுக் குருபூசை முதலியன நிகழ்தற்கு ஆவனவற்றை இவர்கள் செய்தருளினமை குறிப் பிடத்தக்க ஒன்று. அண்மையில் திருவையாற்றுக் கட்டளை விசாரணையில் அமர்ந்து அத்திருக்கோயில் திருப்பணியை முற்றுவித்து மகாகும்பாபிடேக விழா மிகச் சிறப்புற நிகழ இவர்கள் முன்னின்றமை யாவரும் அறிந்தது. இவர்கள் அருளாட்சி ஏற்றமை அனைவருக்கும் மகிழ்ச்சியைத் தருவது.

திருக்கயிலாய பரம்பரை

சீகண்ட பரமசிவன்

நந்திதேவர் (அகச்சந்தானாசாரியர்)

சனகர் | சனந்தனர் | சனாதனர் | சனற்குமாரர்

சனற்குமாரர்

சத்தியஞானதரிசனிகள்

பரஞ்சோதி மாமுனிகள்

மெய்கண்டதேவர் (புறச்சந்தானாசாரியர்)

அருணந்தி தேவர்

மறைஞானசம்பந்தர்

உமாபதி சிவாசாரியர்

அருள் நமச்சிவாயர் (மச்சுச் செட்டியார்)

சித்தர் சிவப்பிரகாசர்

நமசிவாய மூர்த்திகள்
வாவடுதுறை ஆதீனத் தாபகர்)

காழிக் கங்கை மெய்கண்டார்

காழிப் பழுதை கட்டிச் சிற்றம்பல நாடிகள்

பழுதைகட்டிச் சம்பந்த பண்டாரம்

சிவபுரம் ஞானப்பிரகாச பண்டாரம்

சிவபுரம் தத்துவப் பிரகாச பண்டாரம்

திருவாரூர்ச் செட்டித்தெரு பழுதைகட்டி
ஞானப்பிரகாச பண்டாரம்

சிதம்பர நாத மாசிலாமணி
கமலை ஞானப்பிரகாச பண்டாரம்

திருக்கயிலாய யாத்திரை முடித்து மீண்டபோது

(திரு

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானத்தில்
காசி விசுவநாதருக்கு
லட்டு அபிஷேகம் செய்தல்

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானத்தில்

அமரநாதம் வழிபாடு

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானத்தில்



பசுபதிநாதம் வழிபாடு.

இராமேஸ்வரம் யாத்திரையில் (தனுஷ்கோடியில்)

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள்

காசியில்:



ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள்
காசி விசுவநாதருக்குப் பாலபிஷேகம் செய்தல்

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள்



கேதாரேசுவரரை வழிபடுதல்

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம்



மானசசரோவரத்தில் காலை அனுஷ்டானத்திற்குப் பின்
ஜபம் செய்தருளல்



ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானத்தில்
சோமநாதம் வழிபாடு

பாரதியார் பாட்டு நலம்

திரு. மது. ச விமலானந்தம் எம். ஏ., அவர்கள்

(மலர் 30, இதழ் 12, பக்கம் 664 இன் தொடர்ச்சி)

உணர்ச்சி நலம்:

அமர கவியின் பாடல்கள் உள்ளத்தை அள்ளவும், நெஞ்சை உருக்கவும் ஏதுவாக அமைவது அப்பாடல்களில் பீறிடும் உணர்ச்சியே. ஏனைக் கவிஞர்களைவிட பாரதி எல்லோர் இதயத்திலும் இடம் பெற்றமைக்கு, இவ்வுணர்வு நலமே அடிப்படை எனலாம். தொட்ட இடமெல்லாம் உணர்ச்சி கொப்புளிக்கக் காணலாம். படிப்போர் உள்ளமெல்லாம் பாரதியின் உணர்ச்சி அப்படியே பற்றிக்கொள்கிறது. படிப்போர் நாடி நரம்பெலாம் முறுக்கேறி நிற்கப்பார்க்கலாம்.

உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதிலும்
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே

எனும்போது ஊக்கம் பிறக்கிறது; உணர்ச்சி பெருகுகிறது. கோழையெல்லாம் வீரராவர் இதனைப் பாடும்போது. தமிழகத்தைப் பொறுத்தமட்டில் பாரதி பாடல்கள் விடுதலை உணர்வையும் வீராவேசத்தையும் ஊட்டியதாயிற்றே. சீன, பாகிஸ்தான் படையெடுப்பின்போது உணர்ச்சியை ஊட்ட இவர் பாடல்களன்றோ உதவின. இவர் பாடல்கள் அனைத்தும் உணர்ச்சியின் பிழம்புகள், உணர்வின் வடிவங்கள், கனலன்ன கவிதைகள், தொட்டதும் பற்றிக்கொள்ளும் தீக்கதிர்கள்.

ஆங்கிலக் கவிஞன் வோர்ட்ஸ்வொர்த் கூறிய கவிதை இலக்கணத்துக்கு 1 முழுதும் பொருத்தமானது பாரதி பாடலே

1. Poetry is the spontanious overflow of powerful feelings; it takes its origin from emotion recollected in tranquility; the emotion is contemplated till, by species of re-action, the tranquility gradually disappears and an emotion, kindred to that which was before the subject of contemplation, is gradually produced and does itself actually exist in the mind. (Worsworth - Preface & Essay on Poetry)

எனலாம். எந்தெந்த பொருளை என்னென்ன உணர்ச்சியில் கண்டுணர்ந்தானே, அந்தந்த உணர்ச்சிகளை அவற்றைப் படிப்போரும் அப்படியே பெற்றுவிடுமாறு செய்யக்கூடியன. உள்ளத்தைப் பிணிப்பது உணர்ச்சியே, அது ஓங்கி நிற்கிறது அமரகவியின் பாடல்களில்; எனவே அழியாத மாகவிதையாக அமைந்துவிடுகின்றன. பாஞ்சாலி சபதத்தில் பாரதியின் உணர்ச்சி கட்டுக்கடங்காது கங்கு கரைமீறிச் செல்லக்காணலாம்.

ஆயிரங்களான — நீதி, அவை யுணர்ந்த தருமன்
தேயம் வைத்திழந்தான்; சிச்சீ! சிறியவர் செய்கை செய்தான்.

வீமன் வாய்மொழியாக,

இது பொறுப்பதில்லை — தம்பி, எரிதழல் கொண்டுவா
கதிரை வைத்திழந்தான் — அண்ணன் கையை எரித்திடுவோம்

எனப் பேசிடும்போது உணர்ச்சிக் கட்டத்தைத் தொடுவதைக் காணலாம். இவற்றைப் படிப்போரும், படிக்கப் பக்கம் நின்று கேட்போரும் உணர்ச்சி வயப்படுவர். அத்தகு உணர்ச்சி நலம் வாய்ந்தவை.

எதனை அணுகினும், எப்பொருளை நோக்கினும், அதனை உணர்ச்சி ஊடே ஊடுருவிப் பார்க்கிறார் பாரதி. அதனால் அவர் பாட்டுக்கு ஒரு வியத்தகு சத்தி பிறக்கிறது. காக்கைச் சிறகை அழகுடையதாக நாம் கருதுகின்றோமில்லை; ஆனால் பாரதியோ கருநிறச் சிறகினூடே ஒரு கனவினைக் காண்கிறார்; உணர்வின் காரணமாக, கண்ணனின் கருமைநிற வண்ணம் அங்கே அவருக்குத் தோற்றுகிறது. உடனே உணர்ச்சியை,

காக்கைச் சிறகினிலே நந்தலாலா — நின்றன்
கரிய நிறந் தோன்றுதையே நந்தலாலா

எனப் பாட்டாக்கி விடுகிறார். படித்த நாமும் அவ்வுணர்வினைப் பெறுகின்றோம். இவ்வுணர்வின்றேல் இது வெறுஞ் செய்யுளாக அமையுமே யன்றி வளமான பாட்டாக அமையாது.

கற்பனை நலம் :

பாட்டு ஒரு பறவை; கவிஞனும் பறவையும் (Birds & Bards) ஒரே நீர்மையர். கவிஞனும் பறவைக்குக் கற்பனைதான் சிறகு. ஐம்புலன்களால் ஒரு பொருளை அனுபவிக்க இயலா நிலையில், அதனை நினைவிற்குக் கொணர்ந்து அனுபவிக்கச் செய்யும் ஒருவகை விந்தையான சக்தி கற்பனையாகும். கவிதை நமக்கு இன்பம் பயப்பதே இக்கற்பனையின் மூலம்தான். இக்கற்பனை நலம் பாரதியின் பாடல்தோறும் பளிச்சிடுகிறது.

விட்டு விடுதலை யாகி நிற்பா யிந்தச்
சிட்டுக் குருவியைப் போலே

எனச் சிட்டுக்குருவியின் பாங்கில் விடுதலை வுணர்வினைக் காண்கின்றார். இச்சக்தியால்,

காக்கை குருவி எங்கள் ஜாதி — நீள்
கடலு மலையும் எங்கள் கூட்டம்
நோக்குந் திசையெலாம் நாமன்றி வேறில்லை
நோக்க நோக்கக் களியாட்டம்

எனப்பாடுகிறார். கண்ணன் பாட்டில், - கண்ணம்மா என் காதலியில்,

நெரித்த திரைக் கடலில் நின்முகங் கண்டேன்;
நீல விசும்பினிடை நின்முகங் கண்டேன்;
திரித்த நுரையினிடை நின்முகங் கண்டேன்;
சின்னக் குமிழிகளில் நின்முகங் கண்டேன்.

என்ற கூற்றில் கற்பனை நலம் கனிந்து ததும்புவதைக் காணலாம்.

காதலி கண்ணம்மாவை உலக நாயகியாகக் (ஓங்கி உளளந்த உத்தமனல்லவா கண்ணன்; காத்தற் கடவுளல்லவா) கற்பனை செய்கின்றார், சுட்டும் விழிச்சுடர்தான்.........என்ற பாட்டில். உலகமாகிக் காட்சியளிக்கும் கண்ணம்மாவின் கண்கள் சூரிய சந்திரர்களாம்; வட்டக் கரியவிழி வானக் கருமையாம்; பட்டுக் கருநீலப் புடவையும் அதில் பதித்த வைரமும், நீலவானமும் அதில் பளிச்சிடும் விண்மீன்களுமாம், அவளது சுந்தரப் புன்னகை, சோலை மலரொளியாம்; அவளது நெஞ்சின் நினைவலைகள், நீலக் கடலின் நீள் அலைகளாம். அவளது குரலின் இனிமை, கோலக்குயிலின் ஓசையாம்; இங்ஙனம் நம் மனக்கண் முன் உலகமாகத் தோன்றுமாறு கற்பனையால் தீட்டிக் காட்டுகின்றார் பாட்டில் பாரதியார்! கற்பனை இங்கே, கண் கண்டவற்றோடு உள்ளம் உணர்ந்தவற்றையும் கூட்டிப் புதியன படைக்கச்செய்துளது. 1 பாரதியின் ஒப்பிலாக் கற்பனைக்கு அவரது 'ஞானரதம்' ஆன்ற சான்றாகும்.

---

1. Imagination thus fuses the familiar and the strange, the thing I feel and the thing I see, the world within and, the world without into one that inderprets both.

(— J. L. Lowes, Convention and revolt in Poetry)

பொருள் நலம் :

கவிஞன் இதைப்பற்றித் தான் பாடவேண்டும் என்பதில்லை; எதைப்பற்றியும் பாடலாம். பாடலின் சிறப்பு எதைப்பாடினன் என்பதில் இல்லை; எப்படிப் பாடினன் என்பதில்தான் உள்ளது. பாரதியின் பா நலத்துக்குரிய பெருஞ்சிறப்பு அவர் தம் பாடற் பொருள் பலதிறப்பட்டு விரிந்து பரந்து நிற்பதே. இவர் பாடாதபொருளே இல்லையெனும் அளவிற்கு எல்லாவற்றையும் தொட்டும் தொடுத்தும் பாடியுள்ளார், இவரால் பாடப்பெருத பொருளே இல்லை; எல்லாப் பொருள் பற்றியும் பாடியுள்ளார் எனலாம். எதுபற்றியும் பாரதி என்ன பாடியுள்ளார் என்று எண்ணுமளவிற்கு எஞ்சாது பாடிச் சென்றுள்ளார்.

குருவியையும் பாடியுள்ளார்; குமரி முனையையும் பாடியுள்ளார். இமயத்தையும் பாடியுள்ளார்; இந்தியாவையும் பாடியுள்ளார்; காந்தியையும் பாடியுள்ளார்; கண்ணனையும் பாடியுள்ளார். நாடு, மொழி, சமயம், அரசியல், விடுதலை, ஒற்றுமை, பெண்மை அனைத்தும் பாடியுள்ளார்– இனிப் பாடுவதற்கு ஒன்றுமில்லை என்ற அளவுக்கு!

உயர்ந்த பொருளையும் பாடியுள்ளார்; தாழ்ந்த பொருளையும் பாடியுள்ளார். எப்பொருளும் இவர் கைப்படின் நற்பொருளாய் நிலைபேறு எய்துகிறது; மண் பொன்னுகிறது. யாவரும் அறிந்த பொருள்தான்; ஆனல் எவரும் வியக்குமாறு என்றும் நின்று புகழ் பெறுமாறு படைத்து விடுகிருர் பாரதி. சிறப்பு பொருளில் இல்லை; பாரதியின் பா நலத்தில் உள்ளது.

தனி ஒருவனுக் குணவில்லை யெனில்
ஜகத்தினை யழித்திடு வோம்.

என்கிருன் பசிக்கொடுமையைச் சாடி. இவ்வரி சாகா வரம் பெற்ற வரியாக நின்றுளது. நோக்கு மாறுபாடுகட்டுத்தக பாடல் வேறு பட்டு விளங்குகிறது. பாஞ்சாலி சபதம் ஏற்ற எடுத்துக்காட்டு. 1

(தொடரும்)

---

1 The subject in poetry is not so much talked of as the poets' relation with that thing. It is the thing seen through his temperament, idealised and transfigured by his imagination, emotionally relised in his sensitive being.

— S. J. Brorwn - The Realm of Poetry

திருவையாற்றுப் பதிற்றுப்பத்தந்தாதி

மூலமும் – உரையும்

உரையாசிரியர் :-

பண்டித வித்துவான், தருமையாதீனத் தமிழ்ப்புலவர்,

திரு. இராம. கோவிந்தசாமிப் பிள்ளை

(மலர் 30. இதழ் 12. பக்கம் 668 இன் தொடர்ச்சி)

புரியலரி வரமகிழ சரோருகவா
  வியிற்றீம்பால் பொழிய மேதி
விரியலரிக் கொடுகுதட்டி யுழக்க
  வெகுண் டெழுவாளை வீங்குதெங்கின்
றிரியலரிப் புடைகனிகள் உதிர்த்திடு
  மையாற்றிறையே! செம்பொன் மாத
வரியலரி ணமுமணிவோ யுன்பதமே
  தந்தருள்வாய் வம்ப னேற்கே. 24

(இ - ள்) அலரிவர - சூரியன் தோன்ற (உதயமாக) புரி சரோருகம் மகிழ - முறுக்குகள் நெகிழப்பெற்ற தாமரை மலர்களானவை களிப்புறுமாறு, வாவியில் தீம்பால் பொழியும் மேதி - அந்நீர்த் தடாகத்திடை இனிய தன் மடிவிலுள்ள பாலிணைச் சொரியும் எருமைகள், விரியல் அரிக்கு, கொடுகுதட்டி - விரிந்தலர்ந்த தடாகத்திடையுள்ள பூக்களை, தேன் பருக மொய்க்கின்ற வண்டுகளோடு ஒருங்கே கறித்துக் குதட்டிக்கொண்டு (மென்று) உழக்க - அக்குளத்தினை மேலும் கலக்குதலைச் செய்தலால், வெகுண்டு எழுவாளை - அச்சமுற்று மேல் கிளம்பின வாளை மீன்களானவை, வீங்கு தெங்கின் திரி அலரிப்புடை கனிகள் உதிர்த்திடும் - பருத்த தென்னை மரங்களினுடைய அசைகின்ற விரிந்த பக்கத்துடன் உள்ள முதிர்ந்த குலைகளிலுள்ள கனிகளை புலபுலவென்று கீழ்வீழ்ந்துகுமாறு செய்கின்ற (உதிரச்செய்கின்றவளம் வாய்த்து நிறைந்த) ஐயாற்று இறையே - திருவையாறு எனும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டெழுந்தருளியுள்ள பஞ்சநதீச்சுரனே, செம்பொன்மாதவர் இயல் - அரிணமும் அணிவோய் - இலக்குமி பிராட்டியாரின் தலைவராகிய திருமாலின் பச்சையாகிய உதிரத்தோடு கூடிய இலக்கணம் அமைந்த (நரசிம்ம அவதாரமுற்ற காலத்து) பச்சைத் தோலினையும் அணிந்த அண்ணலே (பரமேசுரனே!)

வம்பனேற்கு - வம்பனுகிய எளியவனுக்கு, உன்பதம் ஏ தந்து அருள்வாய் - சிவபதத்தை (தேவரீருடைய திருவடிப்பேறல்) அப்பதத்தினைக் கொடுத்துத் திருவருள் செய்தருள்வீராக. எ-று.

(கு - ரை) அலரி - அலர்த்துதலால் சூரியனுக்கு அலரி யெனப் பேர்போந்தவாறு காண்க. சரோருகம் - குளத்தில் வளர்தலால் சரோருகப் பெயர்பெற்றது. வாவி - குளம். விரியல் - தொழிற்பெயர். அரி - வண்டு. குதட்டல் - மென்று அசைபோடுவது. உழக்கல் - கலக்கல், அலரி - விரிதல். செம் பொன் மாது - இலக்குமி பிராட்டியார். இயல் - நல்லிலக்கணம். அரிணம் - பச்சைத் தோல். பதம் - பதவி (திருவடி). வம்பன் - புதியவன். (தொல்லையான துயரான செயல்களைப் புரிபவன்) வம்பு - புதுமை. ஏ - பிரிநிலை யேகாரம்.

வம்பலரும் பூந்தெரியல் அம்பிகைக்கோர்
புறமளித்தாய் வையமீதை
யம்பலருந் தரவேற்ருய் உயர்கங்கைப்
புரிசடையை யாற வென்றூழ்
வெம்பலரும் பொடிசெய்தாய் பிறையெயிற்றுக்
கருமறலி விழவுதைத்தாய்
பம்பலரு ளாழியவிம் மையிலின்ப
வாழ்வெனக்குப் பாலிப் பாயே. 25

(இ - ள்) வம்பு அலரும் பூ தெரியல் அம்பிகைக்கு ஓர் புறம் அளித்தாய் - புதுமணம் விரியும் பூமாலையினைத் தரித்த உமை யம்மையாருக்குச் சிவமாகிய தனது இடது பக்கத்தையே உரிமை யாக்கி யளித்தருளியவரே! வையம்மீது ஐயம் பலரும் தர ஏற்ருய் - உலகின்கண் (பலரும் நகையாடிட) பிச்சையினைப் பலரும் கொடுப்ப ஏற்றவரே. (இழிந்துளான் போல் ஏற்றவரே) உயர் கங்கை புரிசடை ஐயாற - உயர்வுறு நிலையினை உறுவிக்கும் கங்கையாற்றினைத் தாங்கிய புரிகளாகிய சடா பாரத்தினை யுடைய ஐயாற்றுப் பரமசிவனே; என்றூழ் - சூரியதேவனையும், வெம்பு அலரும் பொடிசெய்தாய் - வெப்பம் பொருந்திய கதிர்களையும் (தக்கன் வேள்வியில்) பொடியாகச் செய்தவ ராகிய தேவரே! பிறை எயிற்று கருமறலிவிழ உதைத்தாய் - பிறைபோல் வளைந்த பற்களையுடைய கரிய நிறமுடைய தென் திசைக் கோனை மார்க்கண்ட முனிவருக்காக வீழ்ந்தலறும்படிக் காலால் உதைத்தனை, பம்பு அலருள் ஆழிய இம்மையில் - பரந்த நிந்தையில் ஆழ்ந்துள்ள இப்பிறப்பின்கண், இன்பவாழ்வு - பேரின்பமாகிய வீட்டினை, எனக்குப் பாலிப்பாய் - அடியேற்கு அளித்தருள்வீராக. எ - று. ஏகாரம் - அசைநிலை.

(கு - ரை) 'வம்பே புதுமை, என்பது தொல்காப்பியச் சூத்திரம். வம்பு - மணம், ஈண்டு மணத்தை யுணர்த்திற்று. தெரியல் - ஆய்ந்து தொடுக்கப்பட்ட மாலே. அம்பிகை - உமா தேவியார். ஐயம் - பிட்சை. ஏற்றல் - தாழ்ந்து வணங்கித் தாங்கல். என்றூழ் - சூரியன். பிறை எயிறு - பிறைபோல் வளைந்த பற்கள். கருமறலி - கரிய இயமன். அலர் - நிந்தை. பாலித்தல் - கொடுத்தல். ஏகாரம் - அசைநிலே. கருமறலி விழவுதைத்ததைப்பற்றி,

பாலனுக் காயன்று பாற்கடலீந்து பணைத்தெழுந்த
ஆலினில் கீழிருந்து ஆறங்கமோதி அருமுனிக்காய்ச்
சூலமும் பாசமுங் கொண்டு தொடர்ந்தடர்ந்து ஓடி வந்த
காலனைக் காய்ந்தபிரான் கடவூருறை யுத்தமனே."

என்பது அப்பர் திருமுறை.

பாலமுது கனிநறுந்தேன் பாகுகற்கண்டிற்
கனிந்த பனுவல் கூறிச்
சீலமொடு பாவுமடி யார்க்கழிவில்
வீடருளுந் திருவை யாறு!
ஞாலமுதற் பலவிருவா முனையறிந்து
புகழ்வதற்கு ஞான மில்லேன்
நீலமணித் திருமிடற்றோய் எளியேனும்
கதியுற நன்னெறிசொல் வாயோ. 26

(இ - ள்) பால்அமுது - பாலாகிய அமுதும் (பாலும் அமிர்தமும்) கனி - முக்கனியும் (வாழை, பலா, மா) நறும்தேன் - நல்ல கொம்புத்தேனும், பாகு - வெல்லப்பாகும், கல்கண்டில்கனிந்த பனுவல்கூறி - கல்கண்டும் ஆயவை கலந்த இனிமை போல கனிவுற்ற நறும் பாடல்களைப்பாடி. சீலம் ஒடு பரவு அடியார்க்கு - ஒழுக்கமுடன் போற்றும் தொண்டருக்கு அழிவு இல்வீடு அருளும் திரு ஐயாறு! அழிவு இல்லாத முத்தி இன்பினைக் கொடுத்தருளும் திருவையாற்றுப் பெருமானே, ஞாலம் முதல் பல உரு ஆம் உன்னை - உலகம் முதல் இயமானன் இறுதியாக உடைய பலவடிவுடைய தேவரீரை, அறிந்து புகழ்வதற்கு இன்ன தன்மையன் என்றுணர்ந்து அன்னவாறே பரவிப் போற்றிடற்கு, ஞானம் இல்லேன் - அறிவு சிறிதும் இலியாகிய ஏழையேன். நீலம் மணி திருமிடற்றோய் - நீலமணிபோலும் கரியகண்டத்தையுடைய (நீலகண்டரே) இறைவரே, எளியேனும் - மிகவும் எளிமையுடையவனும் நல்நெறி சொல்வாய் - நல்ல

மோட்சகதியையடைய நல்ல ஞானமார்க்கத்தினை நவின்று அருளுவீர்களாக. எ - று. (ஏ)

குறிப்புரை வருமாறு:- பாலமுது - எனப் பொருள் கோடலு மொன்று. பால் - பசுப்பால், உடன்கூடியது (பயசு) 'பாலும் தெளிதேனும், பாகும்பருப்புமிவை, என்பது காண்க. முக்கனியும் சர்க்கரையும் மொய்த்த நறுந்தேனும் எனவருதல் கொண்டு மிக்க இனிமையுடையது என்பது புலனாகும். சீலம் - ஒழுக்கம். பெரியார்க்கு அடைமொழி ஆண்டு அறிவு சீலம் என்பனவாம். காலத்தானும் சீலத்தானும் அறிவானும் மூத்த பெரியார் என்பது பரிமேலழகர் பண்புரை. இயலும் இசையும் வல்ல புலமைமிக்க மெய்யடியார் என்பது தேற்றம். அழிவில் வீடு - அந்தமில் இன்பத்து அழிவில் வீடென்பது திருக்குறளுரை. ஞால முதல் பலவுருக்களில் முதல் வடிவு பிருதுவி (மண்); இயமானன் அந்த மான வடிவு இவை பஞ்சபூதத்தலங்களிலும், ஆறுதாரத்தலங்களி லும் காணப்பெறும் சதாசிவத் திருமேனிகளைக் குறிப்பதாகும். (திருநீலகண்டன் நீயே என்பதனை நீலமணிமிடற்றாய் என்றார். நீலம் அணி திருமிடறு - நீலமணி திருமிடறு, எனப் பிரித்துப் பொருள்தரும்படி இயைந்துளது. கறை மிடறணியலும் அணிந் தன்று, அக்கறை மறைநவில் அந்தணர் நவிலவும் படுமே என்பது புறப்பாட்டு. ரகாரம் - அசைநிலை. நீ (எழுவாய்) சொல்வாய் (பயனிலை) நன்னெறி (செயப்படுபொருள்) எ - று.

(தொடரும்)

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Sattanathaswami Devasthanam Sirkazhi.

" இந்தக் கோவிலைக் கண்காணிப்பாளர் வெகு நல்ல முறை யில் நிர்வகித்து வருவது பாராட்டுதற்குரியது. கோயில் வெகு அழகாக அமைந்திருப்பது கோவில் சுத்தமாக வைத்திருப்பதால் மேலும் அழகைக் கொடுக்கிறது."

B. S. சிவகுருநாதன்,
ஜில்லா நீதிபதி,
தற்பொழுது டிரிபுனல் நீதிபதி,
தஞ்சாவூர்.

15—11—71.

ஏழாம் திருமுறையில் : : : : சாத்திர நோக்கு

பேராசிரியர், திரு. கு. சுந்தரமூர்த்தி பி. ஏ.,
திருப்பனந்தாள்.

(மலர் 30. இதழ் 12. பக்கம் 679 இன் தொடர்ச்சி)

குருவருளேயே,

" சாத்திரத்தை ஓதினர்க்குச் சற்குருவின் தன் வசன
மாத்திரத்தே வாய்ந்தநலம் வாய்க்குறுமோ—ஆர்த்தகடல்
தண்ணீர் குடித்தவர்க்குத் தாகம் தணிந்திடுமோ
தெண்ணீர் மையாய்இதனைச் செப்பு "

எனவரும் பாடல் குறிக்கின்றது.

5. வினையும் பயனும்

வினையில் இருதிறன் உண்டு, ஒன்று இம்மைச் செய்தவினை இம்மையிலேயே பயன் தருவது. பிறிதொன்று இம்மைச் செய்தது மறுமையில் பயன் தருவது. இத்தகைய வினை கொடியது; நம்மையறியாமலேயே நம்மைப்பற்றி நிற்பது. இதனை 'முன்னைச் செய்வினை இம்மையில் வந்துமூடும்' 'வெய்தாகிய வினை,' 'வஞ்ச வல்வினை' எனச் சுந்தரர் குறிக்குமாற்றான் உணரலாம். தீவினைகளுள் மிகக் கொடியது கொலையாகும். இத்தீமை, செய்பவன் அதன் பயனை அப்பிறவியிலேயே பெறுவான். இதனைக் 'குற்றொருவரைக் கூறைகொண்டு கொலைகள் சூழ்ந்த களவெலாம்; செற்றொருவரைச் செய்த தீமைகள் இம்மையே வரும் திண்ணமே' என்றருளுகின்றார் சுந்தரர். இங்ஙனமே நல்லறங்களுள் இறைவனை வழிபட்டு உய்வதே தலைமையான அறமாகும். இதனையும் எப்பிறவியில் ஒருவன் செய்கின்றானோ அப்பிறவிலேயே அப்பயனை அடைவான் என்றருளுகின்றார் சுந்தரர். இதனைத்

" தம்மையே புகழ்ந்(து) இச்சை பேசினுஞ்
சார்வினுந் தொண்டர் தருகிலாப்
பொய்ம்மை யாளரைப் பாடாதே யெந்தை
புகலூர் பாடுமின் புலவீர்காள்

இம்மையே தரும் சோறுங் கூறையும்
ஏத்தலாம் இடர் கெடலுமாம்
அம்மையே சிவ லோகம் ஆள்வதற்(கு)
யாதும் ஐயுற வில்லையே "

எனவரும் பாடலால் அறியலாம்.

இதனையுளங் கொண்டே பரிமேலழகரும் * மிகப்பெரிய அறம் செய்தாரும், மிகப்பெரிய பாவஞ் செய்தாரும் முறையானன்றி இம்மை தன்னுள்ளே அவற்றின் பயன் அனுபவிப்ப ரென்னும் அறநூற்றுணிபு பற்றி, இப்பேறரஞ் செய்தான்றானுங் கொல்லப் படான்; படானாகவே அடியிற்கட்டிய வாழ்நாள் இடையூறின்றி யெய்துமென்பார், 'வாழ்நாண்மேற்' கூற்றுச் 'செல்லா தென்றார். செல்லாதாகவே, காலம் நீட்டிக்கும்; நீட்டித்தால் ஞானம் பிறந்து உயிர்வீடு பெறுமென்பது கருத்து. இதனான் அவர்க்கு வரும்நன்மை கூறப்பட்டது எனக் கூறுகின்றார். வினைகளுள் பழவினையும் (சஞ்சிதம்), வருவினையும் (ஆகாமியம்) இறைவழிபாட்டால் நீங்கும். நுகர்வினை (பிராரத்துவம்) உடல் முடியுங்கால் ஒழியும். இதனை,

' பாட்டும் பாடிப் பரவித் திரிவார்
ஈட்டும் வினைகள் தீர்ப்பார் '

எனச் சுந்தரர் குறிக்கின்றார். ஈட்டும்வினை-வருவினை. அஃதாவது ஏறும்வினை. ஞானசாத்திர நூல்களில் ஒன்றாகிய திருவருட்பயனும் ' ஏன்றவினை ' என்ற பாடலில் இக்கருத்தை அழகாக விளக்குதல் காணலாம்.

6. ஒறுப்பதும் அருள் :-

இறைவன் உயிர்களை ஒறுப்பதும் அத்தீமையினின்று அவ்வுயிர்களைப் போக்குவதற்கேயாகும். இதனை ' ஒறுத்தாய் நின்னருளில் அடியேன் பிழைத்தனகள் பொறுத்தாய் ' என்ற அடியால் சுந்தரர் குறிப்பிடுகின்றார். இதனையே பின்வந்த அருணந்தி சிவாச்சாரியாரும் ' நிக்கிரகங்கள் தானும் நேசத்தால் ஈசன் செய்வது ' எனக் குறித்துச் செல்வர்.

7. அடியார் வழிபாடு :-

சுந்தரர் அடியார் வழிபாட்டில் தலைநின்றவர். திருத் தொண்டத்தொகை ஒன்றே இதன் உண்மையை விளக்கும்-

---

* திருக்குறள் கொல்லாமை.

'தெய்வத்தினை வழிபாடு செய்தெழுவார் அடிதொழுவார்' அவ்வத்திசைக் கரசாகுவர் அலரால் பிரியாளே; 'அடியார் அடியார்கட்கெல்லாம் தொண்டே பூண்டொழிந்தேன்' எனப் பிறவிடத்தும் சுந்தரர் கூறியருளுகின்றார். இக்கருத்துச் சிவஞான போதப் பன்னிரண்டாம் நூற்பாவோடு ஒத்து நோக்கி மகிழ் வதற்குரியதாகும். 'நேயம் மலிந்தவர் வேடமும் ஆலயந்தானும் அரனெனத் தொழுமே',

" மறப்பித்துத் தம்மை மலங்களின் வீழ்க்குஞ்
சிறப்பில்லார் தந்திறத்துச் சேர்வை—அறப்பித்துப்
பத்தர் இனத்தாய்ப் பரனுணர்வி னுலுணரும்
மெய்த்தவரை மேவா வினை " 1

எனவரும் சாத்திரக் குறிப்புக்களைக் காண்க.

ஏழாந் திருமுறை இத்தகைய அரிய பல தத்துவக் குறிப்புக் களை உடையது. ஆதலால்தான் சுந்தரர் பெருமானை

" தொண்டன் ஊரன் பிதற்றிவை
தத்துவ ஞானிக ளாயி னுர்தடு மாற்றிலார்
எத்தவத் தோர்களும் ஏத்து வார்க்கிட ரில்லையே'

என அருளினர். எனவே பக்குவ முதிர்ச்சியுடையார் அஃதில் லாதவர் ஆகிய அனைவரும் ஓதி உய்ய வேண்டுவது இவ்வேழாந் திருமுறை என்பது விளங்கும்.

---

1 சிவஞான போதம்—முதல் அதிகரணம் உதாரணம் (2

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Sattanathaswamy Devasthanam, Shiyali,

" Visited the temple. Thiru. R. Gourirajan, the Supdt, of the temple received and explained the various aspects of the temple clearly and completely. The temple is kept very clean and neat and the Godly atmosphere is felt."

Sd K. Sundararajan
D. S. P. Ry Police
Madurai.

16—11—71.

இருவகைப் புணர்ச்சியில் : : எழுத்துப்பேறும் சாரியையும்*

டாக்டர். திரு. சோ. ந. கந்தசாமி M.A., M. Litt. Ph.D.

(மலர் 30, இதழ் 12, பக்கம் 675 - இன் தொடர்ச்சி)

5. சங்கர நமச்சிவாயர் :

'இவ்விகுதி முதலிய புணப்பைச்சார்ந்த ஆண்டைக்கியைந்து நிற்றலிற் சாரியை'.

இனி, திராவிட ஒப்பிலக்கணத்தின் தந்தை எனப்புகழப் பெறும் கால்டுவெல், சாரியை பொருள் பொதிந்த பழைய வேற்றுமை உருபுகளே என விரிவாக விளக்கி உள்ளார். (Vide, A Comparative Grammar of the Dravidian Languages pp. 260—270) எனின், சாரியைகளில் வேற்றுமைப்பொருள் பயப்பனவுடன், 'கெழு' வினைவேராகவும் கொள்ளத்தக்கது என ஒருபடி மேற்சென்றுரைத்த உரையாசிரியர்களின் ஒட்பத்தினை என் என்பேன்.

சாரியை தோன்றும் இடம் :

சாரியை வேற்றுமைப்பொருண்மை பெற்றிருத்தலின் பெயரினைச் சார்ந்தே வரும் எனத் தொல்காப்பியர் துணிந்துரைக்கிருர்.

" உயர்திணைப் பெயரே அஃறிணைப்பெயரென்று
ஆயிரண் டென்ப பெயர்நிலைச் சுட்டே "

(தொல். எழுத்து. 117)

" அவற்றுவழி மருங்கிற் சாரியை வருமே "

(தொல். எழுத்து. 118)

வேற்றுமை, அல்வழி என்ற இருமொழிப் புணர்ச்சிக்கும் சாரியை உரியது எனினும் வேற்றுமைப் புணர்ச்சிக்குச் சிறப்புரிமை உடையது எனக் கருதுகின்ருர். (தொல். எழுத்து. 132) சாரியை வேற்றுமைப் புணர்ச்சியில் வருதலையே புத்தமித்திரரும் சுட்டினர். (வீரசோழியம். எழுத்து. 27ம் காரிகை)

புணர்மொழிகளைப் பிரித்துப் பார்த்தால், அவற்றின் பின் தொடராது இடையில் நின்று இயங்கும் சாரியையின் இயல்பினை

" சொற்சிதர் மருங்கின் வழிவந்து விளங்காது
இடைநின்று இயலும் சாரியை இயற்கை "

(தொல். எழுத்து. 132)

" உம்மும் கெழுவும் உளப்படப் பிறவும்
அன்ன மரபின் மொழியிடைத் தோன்றிச்
செய்யுள் தொடர்வயின் மெய்பெற நிலையும் "

(தொல். எழுத்து. 481)

" புணரியல் நிலையிடைப் பொருணிலைக் குதவுந "

(தொல். சொல். 250)

எனவரும் பகுதிகள் உணர்த்துகின்றன. அன்றியும், வேறுகி நின்ற இருமொழியும் தம்மிற் சார்தற்பொருட்டு இயைந்து நின்றது " என்ற நச்சினார்க்கினியரின் கருத்தும், " சாரியை யாவது சொல் தொடர்ந்து செல்லும் நெறிக்கண் நின்று', என்ற அடியார்க்கு நல்லாரின் உள்ளக்குறிப்பும் தொல்காப்பியர் கொள்கையினைத் தெளிவுறுத்துகின்றன.

பவணந்தியாரின் புதுமை :

பவணந்தியார் ஒருமொழியில்கூட, சாரியை வரும் என்று எண்ணினர். சொற்களைப் பகுபதம், பகாப்பதம், எனப்பகுத்துச் சொல்லுறுப்புக்களை எல்லாம் நுணுகி நோக்கிய பவணந்தியார் உணர்ந்தனர், சிறந்தன்று, உண்டது, பெறுகுவை முதலிய வினைமுற்றுக்களில் வரும் அன், அ, கு, முதலியன விகுதிப்புணர்ச் சிக்கு உதவிய சாரியை என எண்ணினர் (நன். உருபு. 242 மயிலைஉரை). எனின், வானவன் குறியவன் நெடியவன், புலைத்தி, வலைச்சி, வெள்ளாட்டி - எனவரும் சொற்களில் விகுதிப்புணர்ச் சிக்கு உதவிய அ, த், ச், ட் - முதலியவற்றைச் சாரியை எனக் கூறுமல் பெயரிடைநிலை எனக்கருதினர் (நன். பத. 140) எனவே பகுபதம் வினையாயின் விகுதிப்புணர்ச்சிக்கண் வருவன சாரியை என்றும், பெயராயின், பெயரிடைநிலை என்றும் பெயரளவில் தான் வேறுபாடு கொண்டனர்.

தொல்காப்பியரே உணர்ந்தனர், கிளந்தன, சிறந்தன்று முதலிய சொற்களை ஆண்டுள்ளனர். சங்க நூல்களிலும், பல்லவர்

காலப் புனுவல்களிலும் இத்தகைய சொற்கள் உள்ளன. இவற்றில் விகுதி சார்ந்துவரும் உறுப்பினைச் சாரியை எனக் கருதுதல் மொழிநூலாருட் சிலருக்கு உடன்பாடன்று. பெறுகுவை, உய்குவை என்பவற்றில் வரும் -கு- சொல்லாக்க அசையே (formative suffix). படர்க்கைவினை முற்றுக்களில் காணப்படும் அன், ல, அ பெயரெச்ச விகுதியாகும். அன், ல, அ இரண்டும் மாற்று வடிவங்களே (Altornant forms); என்போல எனின், இன் ல இ இரண்டுமே இறந்தகால இடைநிலையாய் வருதல் போல என்க. பெயரெச்சம் + பால்உருபன்று = படர்க்கைவினை முற்று. இஃது 'அடைமுதல்' Attributive construetions) அமைப்பு உடையது.

காட்டு :-

Attribute		Head		
அலடி		முதல்		வினைமுற்று
நடந்த	+	து	⊳	நடந்தது
சிறந்த(ன்)	+	து	⊳	சிறந்தன்று
நடந்த(ன்)	+	அன்	⊳	நடந்தனன்
நடந்த	+	அன்	⊳	1) நடந்தவன்
				2) நடந்தான்
				$V^1 + V^2 \rhd V^1$

பால்விகுதிகள் யாவும் சுட்டுப்பெயர்களின் சுட்டுவடிவங்களே : (Bound Forms) எனவே அவற்றின்முன் தோன்றுவன பெயரெச்சங்களே. இங்ஙனம் கருதின், பதமுன் விகுதி புணர்வழி வருவன சாரியை அல்ல, பெயரெச்ச விகுதியே என்பதும்; தொல்காப்பியரும், உரையாசிரியர்களும் கூறியாங்குச் சாரியை இருமொழிப் புணர்ச்சியில்தான் வரும் என்பதும் வலிவுபெறும்'

தொல்காப்பியர் ஓதிய சாரியைகள் :

புணரியல் நிலையிடைப் பொருணிலைக்கு உதவும் சாரியைகளைப் புணரியலில் தொல்காப்பியர் தொகுத்துக்கூறுகிறார். அவையாவன,

இன், வற்று, அத்து, அம், ஒன், ஆன், அக்கு, இக்கு, அன் என்பன. (தொல். புணர். 119)

'பிறவும்' என்றதால் தம், நம், நும், உம், கெழு, ஏ, ஐ, ஞான்று என்பனவும் கொள்க என்றார் இளம்பூரணர் (பக்கம் 43). இவருள், 'ஞான்று' ஒழிந்தன எடுத்தோதுவர் என நச்சினார்க்கினியர் மொழிந்தனர் பக். 83. தொல்காப்பியர் இச்சாரியைகளுக்கு இலக்கணம் கூறிய இடங்கள். வருமாறு :—

சாரியைகள்	நூற்பா எண்கள்

1. 'இன்' 120 121 131 167 169 173 182 184 186 193 195 218 241 242 272 279 287 377 402 420 433 435 436 459 470 476 477.

'இன் சாரியை வழக்குப் பயிற்சியாலும், நூலுட் பலகாலும் எடுத்தோதப்படலானும், வாளா ஓதிய வழி தானே சேறலானும் முன்வைக்கப்பட்டது' — இளம்பூரணர் உரை. பக்கம் 43.

2. அத்து 125 133 168 181 185 193 219 228 242 287 305 317 318 531 377 402.

3. அம் 129 244 260 283 304 336 350 365 375 386 415 417.

4. வற்று 122 133 174 175 177 178 183 189 220 281 378.

5. அன் 176 194 198 200 263 388 419 421 422
6. அக்கு 128 270 329 384 385 418.
7. ஆன் 124 199 247 286 331
8. இக்கு 125 127 248 286.
9, ஒன் 180 294.

'பிற' எனத் தொல்காப்பியர் கருதிய சாரியைகள் :

10. தம் 191 320.
11. நும் 191 320
12. நம் 190 324
13. ஏ 164 431

14. ஐ 258 372,
15. உம் 481
16. கெழு 481

தாம், தான் என்பனவும் அக்காலத்துச் சாரியைகளே அவைதாம் - தொல். எழுத்து. 2 86 109 119 142 158 170. அதுதான் - புறம். 195.

இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் "எல்லா நன்மையும் எனச் சாரியை ஈற்றின் கண்ணும் வருதலின் இடைநின்றியறல் பெரும்பான்மை எனக்கொள்க" என்றனர். (இளம். பக். 46; நச்சி. பக். 90). ஈண்டு இறுதி நின்றது முற்றும்மையாகலின், 'இடைநின்றியலும் சாரியை இயற்கை' என்ற நூலாசிரியர் கருத்தே வன்மையுடையதென்க.

எல்லாச் சொற்களும் சாரியை பெற்றுத்தான் புணர்தல் வேண்டும் என்ற நியதியில்லை. (தொல் - உருபு. 202)

சில சொற்கள் இரண்டு சாரியைகள் பெறுதலும் உண்டு.

(வளரும்)

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Kambakareswaraswamy Devasthanam, Thirubuvanam

தூத்துக்குடி தெய்விகப் பேரவைக்கூட்டுச் சங்கம் சார்பில் 10—11—71 தேதி புதன்கிழமை மதியம் வருவதாக தாக்கல் கொடுத்து எதிர்பாராதபடி திருச்சியில் பஸ் ரிப்பேர் ஆகி வர முடியாது, இரவு காலம் கடந்து களைப்புடன் வந்த எங்கள் 165 பேரையும் முகமலர்ச்சியுடன் வரவழைத்து உயிர்குறுதி பயக்கும் வகையில் வழிபாடு செய்வித்து வரலாறு எடுத்துக் கூறியும் களைத்து வந்த எங்களுக்கு உற்சாகம் ஊட்டும் வகையில் உண்டியும் அளித்து உபசரித்து உடல் களைப்பை நீக்கியது, நிர்வாகஸ்தர்களின் பண்பையும் திறமையையும் காட்டுகிறது. இவ்வாறு நிர்வாகஸ்தர்கள் உற்சாகமாக இருக்க வழி செய்யும் மகாசந்நிதானம் அவர்கள் சைவப்பணி வளர்க. சைவம் தழைக்க இறையருள் புரிவாராக.

Sd ர. மீனம்மாள்,
காரியதரிசி.

10—11—71.

தருமையாதீனம் 25-வது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி பரிபூரணமான பத்தாம் நாள்
குருபூஜை விழாவில் (19—11—'71)



குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனம் மகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ தெய்வசிகாமணி அருணாசல தேசிக பரமாசாரிய சுவாமிகள்
அவர்கள் உடன்வர
தருமையாதீனம் 26-வது மகாசந்நிதானத்தில்
குருமூர்த்த வழிபாட்டிற்கு எழுந்தருளல்

தருமையாதீனம் 25-வது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி பரிபூரணமான பத்தாம்நாள்
குருபூஜை விழாவில் (19—11—'71)

குருமூர்த்த வழிபாடு முடிந்து அஞ்சலிக்கூட்டம் தொடங்குதல்

கயிலைக் குருமணி குருபூஜை விழாவில் :

பக்தர்கள் பணிவுரைக் கூட்டமும், நினைவு மலர் வெளியீடும்

"வேலன்"

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி குருமூர்த்தத்தின் முன்பு சரியாக 12 மணிக்கெல்லாம் பணிவுரைக் கூட்டம், குன்றக்குடி ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் தலைமையில், தருமையாதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகள் முன்னிலையில் தொடங்கிற்று.

காஞ்சிபுரம் தொண்டைமண்டல ஆதீனம் மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகளும், திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடம் இளவரசு வித்துவான் ஸ்ரீமத் முத்துக் குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகளும் மேடையில், வீற்றிருந் தார்கள்.

வந்திருந்த அனைவரும் பேசவியலாத காரணத்தால், காலச் சுருக்கம் கருதி ஒரு சில அன்பர்களும் புலவர்களும் மட்டுமே தம் பணிவுரைகளை வழங்க முடிந்தது.

முதலில், சிதம்பரம் அறப்பணிச்செல்வர் டாக்டர் திரு. K. அரங்கசாமிப் பிள்ளை அவர்கள் தம் வரவேற்புரையில் பின் வருமாறு பேசினார்கள் :-

"இன்று எல்லாம்வல்ல எம்பிரானுடைய திருவருள் துணை கொண்டு, சிவசமாதி எய்திய ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியவர்களது திருவருள்முன்னிலையில் கூடியுள்ளோம். ஸ்ரீலஸ்ரீ குருமணி அவர்கள் 26 ஆண்டுகள் அருளாட்சி செய்தார்கள். முத்தித்தலமாகிய ஸ்ரீ காசியிலே அநாயாசமாக இவ்வுலகை நீத்த அவர்கள் புண்ணியவடிவு ஆனவர்கள். ஆரூர், தில்லை, காசி ஆகிய மூன்று தலங்கள் முத்தித் தலங்கள். இம்மூன்றுடனும் தொடர்பு உடைய இவர்கள், தவத்தால், பூஜாபலத்தால் அருளரசு குறைவற ஓச்சிக் காசியிலே சிவசமாதி கூடிய பெருஞ் சிறப்புப் பெற்றுள்ளார்கள். சோழநாட்டிலிருந்து பாண்டிநாட்டிற்குக் கி. பி. 7ம் நூற்றாண்டில் திருஞானசம்பந்தர் சென்றதுபோல், கி. பி. 16ம்

நூற்றாண்டில் குருஞானசம்பந்தர் பாண்டிநாட்டிலிருந்து சோழ நாட்டிற்கு வந்து இவ்வாதீனத்தைத் தொடங்கி யருளினார்கள். இதன் அறத்தொண்டு குருமணிகளின் அருளாட்சிக்காலத்தே சிறந்தது.

26 ஆவது குருமகாசந்நிதானமாக அருளரசு ஏற்றுள்ள ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் மக்கள் உள்ளம் கவர்ந்த தொண்டு புரிந்தவர்கள். சென்னையிலே பல ஆண்டுகள் பிரசார நிலையத் தொண்டு புரிந்து காலத்துக்கேற்பப் பணி புரிந்த 'தவமுனிவராக இருந்தவர்கள்' அவர்களை வாழ்த்தவேண்டும். வாழ்த்துவதும் வானவர்கள் தாம்வாழ்வான் என்றபடி நம்மை வாழ்விக்க அவர்களை வாழ்த்த வேண்டும். ஆயிரம் திருநாமம்பாடி வாழ்த்துவதுபோல் இது அமையும்" என்று கூறி அனைவரையும் வரவேற்றார்கள்.

குன்றக்குடி, திருவண்ணாமலை ஆதீனம் குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ தெய்வசிகாமணி அருணாசல தேசிக பரமாசாரிய சுவாமிகள் (குன்றக்குடி அடிகளார் எம். எல். சி.)அவர்களின் தலைமையுரைச் சுருக்கம் :-

"தருமையும், கமலையும், விரிதமிழ்க் கூடலும் திருநகராக அரசு வீற்றிருக்கும் நிலையைக் குமரகுருபரர் பாடியருளினர். திருத்தருமையின் இன்றைய குருமுதல்வர் அவர்கள் தொண்டின் திருவுருவாக விளங்கிய கயிலைக் குருமணிகளின் மறு வடிவம் என்றே கூறுமாறு அமைந்தார்கள். அவர்களுடைய அருளாட்சித் தொடக்கம் திருவருள் மணத்துடன் உள்ளது. ஊனிலும் உயிரிலும் கலந்துள்ளார்கள். அருளார்ந்த சூழலாகிய தருமையிலே நாமும் இவர்களும் தொடக்கத்திலே இருந்தோம், முதற்கண் ஆதீன அலுவலராக இருந்து பின்னர்த் திருக்கூட்டத் தம்பிரானாக இருந்து, தமிழ் பயின்ற காலத்தில் கலந்துரையாடினோம்; இலக்கண இலக்கியங்களையெல்லாம் பேசிப் பழகினோம்.

பெரிய பண்புடையவர்கள் கயிலைக் குருமணி அவர்கள். நம்முடைய மடங்கள் மக்களோடு தொடர்பு கொள்ளவேண்டும் என்பதிலே அழுந்திய நம்பிக்கை உடையவர்கள். புலியும் பசுவும் ஒரு துறையில் உண்ணும் உண்மையைச் சாதித்தவர்கள் அவர்கள். ஞானபீடங்கள் ஜீவ வித்துக்கள் என்று கூறப்படுபவை. அப்படி, கயிலைக் குருமணி அவர்களுடைய பண்பு நலங்களும், 24 ஆவது குருமூர்த்திகளுடைய தோற்றப் பொலிவும் வாய்க்கப் பெற்றவர்களாக 26 ஆவது குருமூர்த்திகள் விளங்குகின்றார்கள்.

அந்தக் குருமுதல்வரை இந்தக் குருமுதல்வரிடத்திலும் பார்க்கிறோம். அவர்கள் கயிலை முதல் குமரிவரை யாத்திரை செய்த அருள் அனுபவம் உடையவர்கள்; நடமாடும் கோயிலாக திருமந்திரத்திற்கு வாழ்வியல் தத்துவமாகத் திகழ்ந்தவர்கள் அவர்கள். யாத்திரையும் வழிபாடும் ஒரு நோன்பாகவே கொண்டவர்கள். 'நாடெலாம் திரிந்து' அரன் நாமம் பரவியவர்கள். நால்வர் பெருமக்கள் அடிச்சுவட்டிலே அருள்யாத்திரைகள் புரிந்தவர்கள். அவர்களுடைய அருளாட்சி ஒரு முன்மாதிரியாகவே அமைந்திருந்தது.

அவர்கள் நினைவாக இந்தச்சில நாட்களுக்குள் ஒரு மலர் உருவாக எண்ணிற்றுத் திருவருள். ஆனால் வந்திருக்கக்கூடிய செய்திகளோ, கடிதங்களோ மலைபோன்று குவிந்துள்ளன. அதில்கடுகளவே இன்றைய மலராகவெளியிடமுடிந்தது, ஆலால சுந்தரர் மீண்டும் அவனிக்கு வந்து சென்றதுபோல அமைந்து விட்டது கயிலைக்குருமணி அவர்களின் வாழ்வு என்று நாம் எழுதிய கவிதை இம்மலரில் உள்ளது.

திருக்கூட்டத் தம்பிரான்களுக்கு உரிய அருள் வாய்ப்பு நிரம்பப் பெற்று, கயிலைக்குருமணியவர்களின் திருவருள் நோக்கத்தில் கனிந்தவர்கள் 26 ஆவது குருமுதல்வர் அவர்கள். பெரும் பணி செய்து செய்து ஊக்கமும் வளமும் உடையவர்கள். இவர்களது அருளாட்சி நீடு வாழ்க.

தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் தலைமைஉரையை நிறைவுசெய்து, அழகுற அச்சிடப்பெற்றிருந்த "ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியின் நினைவுமலரை' வந்திருந்த அன்பர்களுக்கும் பெரியோர்களுக்கும் வழங்கினார்கள்.

பிறகு, தொண்டைமண்டல ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் பேசியபோது குறிப்பிட்ட சில கருத்துக்கள் :

ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணி அவர்கள் சைவத்திற்குப் பெருநலம் விளைவித்தவர்கள் நாம் கல்லூரி ஆசிரியராக இருந்து தொண்டுசெய்யும் புண்ணியத்தை நமக்கு உண்டாக்கியவர்கள். தனிச்சிறப்பு கயிலாயயாத்திரை செய்த பெருமையாகும். என்றும் எவர்க்கும் இல்லாத சிவபக்தி உடையவர்கள். சித்தம் சிவமாக்கிச் செய்தனவே தவமாக்கும் செம்மணியாக அவர்கள் விளங்கினார்கள். இன்று எழுந்தருளி

யிருக்கும் 26 ஆவது குருமகாசந்நிதானம் அவர்கள் சென்ற காலத்தின் பழுதிலாத் திறனும் இனி எதிர்காலத்தின் சிறப்பும் விளங்க அருளாட்சி புரியும் முழுத்தகுதியும் இயல்பாக வாய்க்கப் பெற்றவர்கள்; இன்று முதலமைச்சர் அமெரிக்காவிலிருந்து தம்முடைய செய்தியைக் கூறுகின்றார் என்றால் இவர்களுடைய ஆட்சியும் திறனும் விளங்கும்.

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் இளவரசு வித்துவான், ஸ்ரீமத் முத்துக்குமாரசுவாமித் தம்பிரான்சுவாமிகள் தெரிவித்த கருத்துக்கள் :

களிமண் உருண்டையைக் கூடத் தம்முடைய ஹஸ்த விசேஷத்தால் உயர்ந்த நிலைக்கு உருவாக்கக்கூடிய உயர்ஞானச் செல்வராக விளங்கியவர்கள் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகா சந்நிதானம் அவர்கள். எந்தக் கூட்டத்தையும் 'இன்று ஒரு பொன்னாள்' என்றே கூறித் தொடங்கியருளும் அவர்களுடைய ஆட்சி உண்மையிலேயே ஒரு பொற்காலமாகவே இருந்தது. திருவள்ளுவர், 'தோன்றிற் புகழொடு தோன்றுக' என்றபடி புகழோடு தோன்றிப் புகழோடு வாழ்ந்து, ஸ்ரீ காசியிலே தம் வாழ்வை நிறைவுசெய்தார்கள். புலவர் பாடும் புகழ்தான் மெய்ப் புகழ் ஆகும். அதனைப் பெரிதும் பெற்றவர்கள் அவர்கள். அவர்கள் அடிக்கடிக் கூறி மகிழும் திருப்பாட்டு:

"தொழுது தூமலர் தூவித் துதித்து நின்று
அழுது காமுற்று அரற்றுகின் றாரையும்
பொழுது போக்கிப் புறக்கணிப் பாரையும்
எழுதும் கீழ்க்கணக்கு இன்னம்பர் ஈசனே."

என்பதாகும். அவ்வாறு செய்த பூஜாபலம் உடைய புண்ணிய மூர்த்தி அவர்கள். யாருக்கும் கிட்டாத பெரும் பாக்கிய மாக அவர்கள் ஸ்ரீ காசியிலே பரிபூரணம் எய்தியமை நமக் கெல்லாம் போற்றுதற்குரிய ஒன்றாகிவிட்டது. நாமெல்லாம் கூடிப் புதிய 26 ஆவது குருமகாசந்நிதானந்தை வணங்கி அவர்கள் அருளாட்சி நீடு வாழ்க என வாழ்த்தும் இந்த வேளையில், ஸ்ரீ காசியில் எங்கள் தலைவர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்கள் தம் குருநாதரை நினைந்து கங்கா தீரத்திலே இருப்பார்கள்.

அடுத்துச் சிதம்பரம், திரு. R. கனகசபைப்பிள்ளை அவர்கள் பேசினார்கள். 25 ஆவது கயிலைக் குருமணியவர்கட்கு வணக்கமும் 26 ஆவது குருமகாசந்நிதானமவர்கட்கு வரவேற்பும் வாழ்த்தும் தெரிவித்த திரு. பிள்ளை அவர்கள் தம் பேச்சிற் குறிப்பிட்ட கருத்துக்கள் :

இன்று ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணியவர்கள் சமாதிமுன்நின்று பேசவே அச்சமும் மனநிறைவும் கொண்டு நிற்கின்றேன். பல தேவாலய அறப்பணிகளில் ஈடுபட்டிருந்தவர்கள் ஸ்ரீலஸ்ரீ குருமணி அவர்கள், என்னைப்போன்றவர்களை யெல்லாம் ஈர்த்தார்கள் அவர்கள். நாத்திகர்கள், கிறித்தவர்கள், மகமதியர்கள் ஆகிய பல்வேறு சமயத்தவர்களையும் ஈர்க்கக்கூடிய தெய்விக ஆற்றல் உடையவர்களாக இருந்தார்கள். இவர்கள் காலம் இக்கால வரலாற்றிலே ஒரு Land mark ஆக உள்ளது, மக்களுக்காகத் தொண்டு செய்தவர்கள். அடைகின்ற இலட்சியமும் அடையும் நெறியும் தூய்மையாக இருக்கவேண்டும் என்ற நிலையில் தூய பணிகளை இயற்றியவர்கள்.

இன்று எழுந்தருளியிருக்கும் 26 ஆவது குருமுதல்வர் அவர்கள் பெரிய நிர்வாகத்தைக் கொண்டு செலுத்தும் ஆற்றல் உடையவர்கள். எப்பேர்ப்பட்ட சிக்கலையும் அவிழ்க்கத்தெரியும் என்று சற்றுமுன் இங்கு ஏற்பட்ட சிறு நிகழ்ச்சி யொன்றால் கோடிட்டுக் காட்டிவிட்டார்கள். தருமையாதீனத் தருமப் பணிகளையும், தமிழ்ப்பணிகளையும் தொடர்ந்து இனிது நிறைவேற்ற மிகப் பொருத்தமானவர்கள். ஞானதீபமாக உள்ள இவர்களுடைய ஆட்சியினால், நல்லன பொலியும் என்பதும், கயிலைக் குருமணியவர்களால் இந்த நிர்வாகத்தில்பழக்கப்பட்ட பேரனுபவம் உடையவர்கள் என்பதும் என் ஆழ்ந்த நம்பிக்கைகள்.

பின்னர்ப் பேசிய சிதம்பரம், திரு. பொன். சொக்கலிங்கம் எம். எல். ஏ., அவர்கள் தெரிவித்த கருத்துக்கள் :

எனக்கும் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கட்கும் குறுகிய காலப் பழக்கமே என்றாலும் அவர்களை நன்றாகத் தெரிந்து தொழக்கூடிய வாய்ப்பு எனக்குக் கிடைத்திருந்தது. அவர்கள் சொரூப நிலையிலிருந்து அரூபநிலைக்குச் சென்றுள்ளார்கள். 26 ஆவது குருமுதல்வர் அவர்களின் வடிவமாகவே திகழ்கின்றார்கள். அரசியல் வாதிகள் முதலிய அனைவரும் பற்றுக்கொள்ளும் அளவிற்குச் சிறந்து விளங்கினார்கள்.

தமிழ் மொழியின்மீது பற்றுக்கொண்டவர்கள் கயிலைக் குருமணியவர்கள். "ஆருத்துயரிலே நானும் பங்கெடுத்துக் கொள்கின்றேன்" என்று அமெரிக்காவிலிருந்தே டாக்டர், கலைஞர் அவர்கள் கூறியுள்ளார்கள். ஏழைகளின் சிரிப்பிலே இறைவனைக் காண்கின்றேன் என்று பணி புரிந்தார்கள். தமிழகத்து நாலரைக்கோடி மக்களுக்கு மட்டுமன்று, இந்தியத் துணைக்கண்டத்திற்கே இவர்களுடைய பிரிவு ஈடுசெய்யவியலாத ஒன்ருக உள்ளது.

அறிஞர் அண்ணாவுக்கு கலைஞர் கண்ணீரைக் காணிக்கை யாக்கியது நாடறிந்த ஒன்று. அதை நினைவுபடுத்துவதுபோலக் கண்ணீரைக் காணிக்கையாக்கி, 25 ஆவது குருமகாசந்நிதான மவர்களுக்கு 26 ஆவது குருமகாசந்நிதானம் அவர்கள் அஞ்சலி செலுத்துகின்ருர்கள். இவர்கள் நன்ருகப் படித்தவர்கள்; பல ரோடு பழகியவர்கள்; தமிழக முதல்வரிடத்துப் பற்றும் பாச மும் கொண்ட பெரியவர்கள்; தமிழை ஆட்சி மொழியாக்கித் தமிழ் அர்ச்சனையைக் கண்டுள்ள தமிழக அரசு இவர்களை வாழ்த்துகிறது; வணங்குகிறது.

அடுத்து, மகாவித்துவான் திரு. ச. தண்டபாணி தேசிக ரவர்கள் பேசுகையில் பின்வரும் கருத்துக்களை வெளியிட்டார்கள்.

உள்ளத்தில் நிறைவு ஏற்பட்டுவிட்டால் உரைக்கு இடம் இல்லை. உருவான திருமேனி, ஒளியான திருமேனி என்று இரண்டு திருமேனிகள் சிவபரம்பொருளிற்கு உண்டு. சிவத் தின் வேருகாத ஞானசாரியனுக்கும் இது பொருந்தும். ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் ஒளியான திருமேனி வடிவில் நிற் கின்ருர்கள் என்று கூறுதலே உண்மை. 'அவிச்சின்ன பரம்பரை' என்று முத்திநிச்சய உரையிலே வருவதற்கு விளக்கம், இங்கே இந்த ஞான மரபிலே இன்று இருபத்தாருவது குருமூர்த்தியாக வீற்றிருப்பவர்கள் ஆவார்கள். அவர்களே இவர்கள்; இவர்களே அவர்கள். வேறுபாடு இல்லை. செந்தமிழ் வித்து, சிவானுபவ மாக விளைவதைக்கண்டு மகிழ்ந்து நிற்பவன் நான்.

ஸ்ரீ காசியிலே பரிபூரணம் ஆன அவர்கள் குறிக்கோளை அறிந்த முன்னுணர்வுடையவர்கள்; என்றும் நீங்காமல் இத யத்தில் இருப்பவர்கள். அவர்கள் திருவடிகள் வாழ்க.

பின்னர் டாக்டர் திரு. நடராஜன் அவர்கள் பேசும்போது வெளியிட்ட கருத்துக்கள்.

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் இம்முறை காசி செல்லும்போது உடன் செல்லக்கூடிய பெரும்பேறு கிடைத்தது. அவர்கள் திருமுறை முதலிய உயர்ந்த ஞானசாத்திரங்களுக்கு விளக்கம் கூறியவாறே இந்த யாத்திரையை நிகழ்த்தினார்கள். பண்புநலம் பலவும் வாய்ந்தவர்கள். திருவருள் வீறு உடையவர்கள். அருளாட்சி ஏற்ற ஆண்டுமுதலாக இந்நாள்வரை அவர்கள் ஆற்றியுள்ள பெரும்பணிகள் உலகறி புகழ் உடையவை. அவர்களுக்குப் பிற்றோன்றலாக உள்ள 26 ஆவது குருமகாசந்நிதானம் அவர்கள் தம் திருத்தொண்டால் பெருஞ் சிறப்புடையவர்கள். இவர்கள் திருவடி வாழ்க என வாழ்த்துவதே நம் குறிக்கோள்.

அடுத்து காட்டூர் திரு. கே. வி. இராமையா முதலியாரவர்கள் பேசியபோது பின்வரும் கருத்துக்களை எடுத்துரைத்தார்கள்.

இன்று, சிவசமாதி எய்தியுள்ள ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணி அவர்கட்குத் தண்டனிட்ட வணக்கத்தைச் செலுத்துகிறேன். கடல்கடந்த புகழ் உடையவர்கள் அவர்கள். சிஷ்ய பரம்பரையைச் சார்ந்தவனாகலின் நான் 25 ஆண்டுகளாக அவர்களுடைய அருளாட்சியை இனிது அறியக்கூடிய வாய்ப்பினைப் பெற்றிருந்தேன். அவர்களை அடுத்து 26 ஆவது குருமகாசந்நிதானமவர்கள் மாத, வார வழிபாடுகளைத் தமிழகத்திலேயே சிறப்புற நிகழ்த்தக்கூடிய பிரசாரமன்றத்தைச் சென்னையிலே நிறுவித் தெய்வமணம் பரப்பிப் பெருந்தொண்டு செய்தவர்கள்.

1936ல், ஒடுக்கம் சுவாமிகளாக இருந்தபோது அறிமுகம் ஆகி, இறுதியாக இந்தமுறை ஸ்ரீ காசிக்குச் செல்லும்போது சென்னை சென்ட்ரல் புகைவண்டி நிலையத்தில் வழியனுப்பிற் கலந்துகொள்ளும்வரை நான் பழகியவரை அவர்கள் பண்பின் சிகரமாக இருந்தவர்கள். அவர்களைப் பிரிந்த துக்கம் தாங்காமல் என்னையே தைரியப்படுத்திக்கொண்டுஇங்கே நிற்கின்றேன். என்னிடத்தே தனிப்பட்ட அன்பு கொண்டவர்கள். வழங்கும் கொடைக்கரங்கள் உடையவர்கள். தமிழகத்தின் எல்லா மதங்களையும் கோட்பாடுகளையும் அறிந்தவர்கள். தமிழகத்தில் தேய்ந்துவரும் இன, மொழி உணர்ச்சிகளை உணர்ந்தவர்கள். பூஜா பலமும் ஆன்ம பலமும் உடையவர்கள். ஆன்மாவைப் புடம் போட்டுப் பரிசுத்தப்படுத்தியவர்கள். தன்னைத்தான் சுட்டு எரித்த தகுதிப்பாடுடையவர்கள்.

மடாலயத்துக்கு மற்ற தலைவர்கள் வந்துபோகும் புதிய சம்பிரதாயத்தை வளர்த்தவர்கள். தமிழ்மொழிக்காகத் தம் வாழ்வை ஆக்கிப் பல பணி புரிந்தவர்கள்.

வாழையடி வாழையாக வளர்ந்துவரும் இந்த ஞானமரபிலே 26 ஆவது குருமணியவர்களுடைய அருளாட்சி தழைத்தோங்க நாம் இறைவனை வாழ்த்துவோம்.

அடுத்து சென்னை D. I. G. திரு. பரமகுரு அவர்கள் பேசிய போது பின்வரும் கருத்துக்களைத் தெரிவித்தார்கள்.

பெறுதற்கரியது இம்மனிதப்பிறவி. இப்பிறவிப்பெருங் கடலில் ஒப்பற்ற குருவாக - சீரிய குருவாக - தவமே வடிவமாக எழுந்தருளியிருந்தவர்கள் நம் கயிலைக் குருமணி அவர்கள். கடமையே கண்ணாக இருந்தவர்கள். சரியை, கிரியை, யோக ஞானநெறி தலைப்படும்படி மக்களுக்கு நெறிகாட்டியவர்கள். அவர்களுடைய பிற்றோன்றலாக இன்று எழுந்தருளியுள்ள 26 ஆவது குருமகாசந்நிதானம் அவர்கள் எல்லாவகையிலும் பொருத்தமும் தகுதியும் உடையவர்கள். உலக அனுபவமும் உலகப்புகழும் பெற்றவர்கள். இவர்கள் அருளாட்சியில் மடாலயமும், தேவஸ்தானங்களும் நல்ல நிர்வாகத்தை இனிது பெற்று நலம்பெருக்கும் என்பது உறுதி.

சென்னை, " கலைமகள் " ஆசிரியர் திரு. கி. வா. ஜகந்நாதன் அவர்கள் வெளியிட்ட கருத்துக்கள் :

மூளை பேச வேண்டிய நேரம் இல்லை இது; இதயம் பேச வேண்டிய நேரம். அறிவு ஆராய்ச்சிக்கு இங்கே வேலை இல்லை. உணர்வு தடுமாறும் வேளை. கயிலைக்குருமணி அவர்கள் இறைவனுக்குச் செல்லப்பிள்ளையாகிவிட்டார்கள். ஸ்ரீ காசியிலே பரிபூரணம் ஆகிவிட்டார்கள். எம்பிராட்டி மடியிலே இருந்து, இறைவனின் ஞானோபதேசம் பெறும் நிலை எய்திவிட்டார்கள். புண்ணியப்பேறு இது. திருமேனி மறைந்தாலும் அவர்களின் புகழுடம்பு வளர்கின்றது. சாதி, சமயம், கட்சி வேறுபாடுகள் கடந்து படர்ந்து விரிந்த ஆலமரம்போல் அவர்களுடைய பண்புகள் வளர்கின்றன. கண்டவர்கள் யாரும் " யார் இந்தப் பெரியவர் " என்று கூறி வணங்கும் திருமுகப் பொலிவு உடைய அருளாளர் அவர்கள். கண்ணாடியிலே பார்த்தவர் முகம் எல்லாம் தெரிவதுபோல அவர்களோடு பழகியவர்கள் எல்லோர்க்கும் அவர்கள் வெளிப்பட்டார்கள். செந்தூரிலே

கந்தசஷ்டி நாட்களிலே அவர்களோடு உடன் பழகும் நிலை அடியேனுக்கு ஏற்பட்டது.

தீபசந்தானம் என்று சொல்வார்கள் ஆசாரியபரம்பரையை. 26-வது ஒளிவளர் விளக்கு ஞானச்சுடர் விரிக்கின்றது. பரஞ்சோதியாக உள்ள பெருமான் சுடராக வருகிறான். வேண்டும் காலத்து உதவும் கைவிளக்காக வருகிறான். 26-வது ஒளி விளக்கு - இந்தச் செஞ்சுடர் உலகை வாழ்விக்கத் தொடங்குகின்றது.

சென்னையிலே பிரதிநிதியாக முன்பு இருந்தவர்கள் இன்று நிதியாக, ஞானநிதியாக வந்துள்ளார்கள். திருவருள் துணை கொண்டு வணங்கிப் போற்றுவோம்.

அடுத்து சென்னை வித்துவான் திரு. ப. வடிவேல் பிள்ளை அவர்கள் கையறுநிலை வாசித்து அளித்தார்கள்.

சென்னை திரைப்பட இயக்குநர், திரு. கே. எஸ். கோபால கிருஷ்ணன் அவர்கள் பின்னர்ப் பேசுகையில் சில கருத்துக்களை வெளியிட்டார்கள்.

எனக்கும் குருமணியவர்கட்கும் ஏற்பட்ட தொடர்பு குறுகிய காலத்தே உண்டாகியது. அவர்களைத் திருமடத்தில் கண்ட போது என் தந்தையைக் கண்டதுபோன்றே நான் உணர்ந்தேன். கண்களில் ஓர் ஒளி; சொற்களிலே கனிவு; அசைவில் அருள். ஆதிபராசக்தி படத்தை ஒருமுறை பார்த்தருள வேண்டி நின்றேன். இப்படிப்பட்ட ஒரு பெரியவரிடம் ஆசி பெற்றமை என் பேறே. அவர்களிடம் கைதேர்ந்த இயக்குநர்க்கு இருக்க வேண்டிய கலைநுட்பங்கள் இருக்கக்கண்டேன் நான். அவர்கள் மறையவில்லை; தம்முடைய பணிகளை நிறைவான தகுதி உடையவரிடத்து ஒப்படைத்த நிம்மதியோடு அவர்கள் அருளுருவாகி விட்டார்கள். மகா தீர்க்கதரிசியாக விளங்கிய அவர்களது பிற்றோன்றலாக உள்ள நம் 26வது குருமகாசந்நிதானம் அவர்களின் திறம் உலகம் அறிந்தது. அகில உலகப் புகழும் சிவநெறிக்குத் தொண்டாற்றும் பெருமையும் உடைவர்கள் இவர்கள் : இவர்கள் அருளரசு ஓங்குக.

தஞ்சை இந்துசமய அறநிலைய துணை ஆணையர் திரு. கோதண்டபாணி அவர்கள் அடுத்து உருக்கமாகப் பேசிப் பின் வரும் கருத்துக்களைத் தெரிவித்தார்கள்.

ஜீவன் முக்தராய் அருளாசி வழங்குகின்றூர்கள் கயிலைக் குருமணி அவர்கள். வேலூரில் கிருத்திகையன்று மௌன உபவாசத்துடன் இருந்து, அன்றே திட்டமிட்டு, நெறிவகுத்து விட்டார்கள். எங்களுக்கு எந்தக் கஷ்டமும் இல்லாது, அன்றும் இன்றும் என்றும் நன்றே புரியக்கூடிய 26 ஆவது குருமகாசந்நிதானமவர்களை வகுத்துவிட்டார்கள். அவர்கள் காட்டும் அருள் நெறிப் பாதையிலே நம்மையெல்லாம் அழைத்துச் செல்லும் அவர்கட்கு நம் வணக்கங்களைத் தெரிவித்துக்கொள்வோம்.

அடுத்து திரு. அ. வெ. ரா. கிருஷ்ணசாமி ரெட்டியார் அவர்கள் ஒருகையறு நிலைப்பாடலை வணக்கமாக உரைத்தார்கள்.

தருமையாதீனம், மகாவித்துவான். திரு. சி. அருணைவடிவேலு முதலியார் அவர்கள் பின்வரும் கருத்துக்களைப் பேசினூர்கள்.

பல்வேறு துறைகளிலே எல்லோர்க்கும் வழிகாட்டியாக விளங்கியவர்கள் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள். எளியவர்களையெல்லாம் ஆட்கொள்ளும் அருமை உடையவர்கள். எளியேனிடம் தனியாக ஆதரவு காட்டினூர்கள். 25 ஆவது கயிலைக் குருமணியவர்களின் வேருகாத 26 ஆவது குருமாமணியவர்களைத் தொழுது பணிபுரிவோமாக.

ஆட்சிச்சொற்காவலர், திரு. கி. இராமலிங்க முதலியாரவர்கள் பேசும்போது பின்வரும் கருத்துக்கள் வெளிப்பட்டன.

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் ஒரு தனி வரலாற்றையே உண்டாக்கிச்சென்றுவிட்டார்கள். கயிலாய யாத்திரை செய்தவர்கள். ஆட்சித்திறன் உடையவர்கள்; அன்பின் கனிவுடையவர்கள். 'மண்பாதலம் புக்கு மால்கடல் மூடி மற்றேழுலகும் விண்பால் திசைகெட்டு' என்று அப்பரடிகள் கூறியபடி அஞ்சாமை உடையவர்கள். 'ஆக்கம் அதர்வினுய்ச் செல்லும் அசைவிலா, ஊக்கம் உடையானுழை' என்ற குறட்கு இலக்கியமாக வாழ்ந்தவர்கள். 26 ஆவது குருமகாசந்நிதானம் அவர்கள் 'நம் சுவாமிகள்' என்று சென்னையில் வாழும் அன்பர்கள் எல்லாம் உரிமையோடு கூறிப் பாராட்டும் திறம் உடையவர்கள். பணிபல புரிந்த அவர்களுடைய நல்லாட்சி தழைத்துச்செழிக்கும்.

" திருக்கோயில் " ஆசிரியர் திரு. ந. ரா. முருகவேள் அவர்கள் பேசுங்கால், பின்வரும் கருத்துக்களை உரைத்தார்கள்.

மிக எளியவர்களையும் இளையவர்களையும் அளவுக்குமேல் பரிவுகாட்டி ஆட்கொள்ளும் இயல்பு படைத்தவர்கள் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள். என்னையும் ஆவணிமூலத்தில் பட்டமளித்துப் பாராட்டினார்கள். என்வாழ்க்கையை உருவாக்கியவர்கள்; அவர்கள் வழிநின்று தொண்டாற்ற முற்பட்டுள்ள 26 ஆவது குருமணி அவர்களை வணங்கிப் போற்றுவது நம்கடமை.

திருச்சி திருக்குறள்வேள் திரு. ஜி. வரதராஜபிள்ளை அவர்கள் பின்னர்ப் பேசும்போது உரைத்த கருத்துக்கள்.

திருமுறைகளில் பக்தி உடையவர்கள் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள். அதனால் மடத்தில் உள்ளவர்களுக்கும் பக்தி பெருக்கினார்கள். திருமுறைகளுக்கு உரை வெளியிடும் பெரும்பணி மேற்கொண்டு, ஒன்பதாம் திருமுறை வரை வெளியிட்டருளியவர்கள். திருமந்திரத்தில் கூறும் " அடப் பண்ணி வைத்தார் " என்ற திருப்பாட்டிற் கூறியபடி யாக்கை நிலையாமையை உணர்ந்து, அவ்வாறே ஸ்ரீ காசி சென்று அங்குத் தம்முடைய வாழ்வின் இலட்சியத்தை அடைந்தவர்கள். அவர்களது பிற்றோன்றலாக எழுந்தருளியுள்ள 26 ஆவது குருமகாசந்நிதானம் அவர்களுடைய அருளரசு வாழ்க என வணங்கிப் போற்றுவோமாக.

தவத்திரு.குன்றக்குடி அடிகளார் அவர்கள் நிறைவுரைக்குப் பிறகு தருமையாதினம் குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய கருத்துக்கள் வருமாறு :-

இன்று நாம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் திருவருணிழலில் கூடியுள்ளோம். அவர்கள் அருள்வழியில் செல்லச் சான்றோர்கள் எல்லோரும் நம்முடைய அருள்நெறிப் பணிகளில் ஒத்துழைக்கவேண்டும். அறநிலையத் துறையினர் ஒத்துழைப்பும் தேவை. ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியவர்கள் விரிந்த திருவுளப் பாங்கு வாய்ந்தவர்கள். ஏழை எளியவர்கட்கு அவர்கள் காட்டிய கருணை வரம்பற்றது. வேலூரில் நிவேதனமாகும் லாடு முதலிய பிரசாதங்களை இங்குக் கொண்டுவந்து எளியவர்க்கு வழங்கி மகிழ்ந்த செய்தியை இதற்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம். ஆட்சித்திறனும் நிர்வாகப் பெருந்திறமும் உடையவர்கள் அவர்கள்.

இவ்வாதீனத் திருக்கூட்டத்து அடியார்களை வித்துவான் களாகத் தயார்செய்த பெருமை அவர்கட்கு உண்டு. நிர்வாகத் துறையிலும் திருக்கூட்டத்து அடியவர்களை ஈடுபடுத்தித் திறமை யுடையவர்களாகச் செய்துள்ளார்கள். ஞானபீடத்துக்குத் தக்க வாரிசுகளைத் தயாரித்திருப்பதுபோலப் பொருள்துறை ஆட்சி யிலும் ஆதீன நிர்வாகத்தில் தேர்ந்த அலுவலகப் பணியாளர்களை அவர்கள் நியமித்திருக்கிறார்கள். முதிர்ந்த அனுபவமுடைய கண்காணிப்பாளர்களுக்குத் தக்க வாரிசுகளையும் பயிற்சி பெறச் செய்துள்ளார்கள். நிர்வாக யந்திரத்திற்கு நல்ல செயல் திறமை உடையவர்களாக ஆக்கியிருக்கிறார்கள். பரிபூரணமடைந்த சில மணி நேரத்துக்குள் அவர்கள் திருமேனி தருமைக்கு வந்து சேர்ந்தமை இதனை விளக்குகிறது. 'ஞானமே யானபோது சிவம்;' ஞானம் – மகாசந்நிதானம். கிரியை – பணியாளர்கள். கிரியையும் ஞானமும் கலந்தால்தான் செயற்படும் உலகம். அதுபோல் தருமையாதீனச் செயற்பாட்டுச் சிறப்பிற்குப் பணி யாளர்கள் உறுப்புக்களாக உறுதுணையாக இருந்துவருகிறார்கள். குருமணி அவர்கள் எல்லோரிடத்தும் இன்முகத்துடன் நகைச் சுவையாகப் பேசும் இயல்புடையவர்கள். சர். C. P. இராமசாமி அய்யர் தலைமையில் அறநிலையங்களின் ஆய்வுக் குழுவினர் தருமைக்கு வந்தனர். ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களிடம் உரையாடிக்கொண்டிருந்தபோது சர். C. P. அய்யர் அவர்கள் தங்களுக்கு வாரிசாக யாரை நியமித்திருக்கிறீர்கள் என்று கேட்டார். ஸ்ரீலஸ்ரீ குருமணி அவர்கள் சிரித்துக்கொண்டே ஆதீனத் திருக்கூட்டத்து அடியவர்கள் அனைவருமே தமக்கு வாரிசுகள்தான் என்று கூறினார்கள். எல்லோரும் அவர்கள் கூறிய விடையை அறிந்து வியந்தனர்.

யாராலும் அசைக்கமுடியாத தத்துவ வளம் உடைய சைவ சமயத்தை Practical - ஆக நடைமுறையில் தழைத்தற்கேற்ற செயல்முறைகளைத் தீட்டுதல் வேண்டும்.

பிசிராந்தையார் பாடிய அழகிய புறநானூற்றுப் பாட் டொன்று நினைவிற்கு வருகின்றது: "யான்கண்டனையர் என் இளையர்" என்பார் அவர். பாண்டியன் நெடுஞ்செழியன் உண்டால் அம்ம இவ்வுலகம் இந்திரர் அமிழ்தம் இயைவதாயி னும் இனிதெனத் தமியர் உண்டலும் இலர் ..." என்று கூறி,

"தனக்கென முயலா நோன்றாள்
பிறர்க்கென முயலுநர் உண்மையானே"

என்று முடிக்கின்றான்.

இத்திருமடத்தின் பொருள் முழுவதும் திருவருள் நோக்கிலேயே செலவு செய்யப்பெற்று வருகிறது. தலைவன் செய்யும் தருமங்கள் கீழ்ப்பட்ட அனைவர்க்கும் உண்டு. அதுபோன்று நாம் செய்யவிருக்கும் எல்லாப் பணிகளுக்கும் விளையும் பயன் அனைவரையும் சாரும். ஆதலால் கரும்பு தின்னக் கூலி போல, அலுவலை நேரிதின் ஆற்றினால் அதனால் விளையும் நிறைவும், அறப்பயனும் அனைவருக்கும் கிடைக்கும்.

ஸ்ரீலஸ்ரீ குருமணியவர்கள் அரசியற்கலை நுட்பங்களையும் அறிந்தவர்கள். அரசியலை மடத்திற்குள்ளிருந்து கொண்டே முற்ற அறிந்திருந்தார்கள்; அவர்கள் பரிபூரணம் அடைந்த பிறகும் 'கூட அந்தத் தெய்விக பலம் எப்படித் திருமடத்தைக் குழப்பங்கட்குள்ளாக்காதபடி காத்தது என்பது நினைக்க வியப்பை உண்டாக்குவதாகும். பரிபூரணம் அடைந்த அன்று அவர்கள் திருமேனி காசியில்; அடியேன் சென்னையில்; திருக்கூட்டத்து அடியார்கள் தருமையில். திருப்பனந்தாள் காசிவாசி ஸ்ரீலஸ்ரீ அருணந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களும், குன்றக்குடி ஆதீனம் மகாசந்நிதானம் அவர்களும் தருமைத் திருமடத்தில் திருக்கூட்டத்து அடியவர்களுடன் இருந்து ஞானபிஷேக முடிவு செய்துள்ளார்கள். அமைதியும் நிறைவும் ஆக இது முடிந்தது குருவருள் என்றே கூறலாம்.

நாம் தேவாரப் பாடசாலையில் பயின்றோம். கந்தர்கலி வெண்பாவை இளமை முதலே பாராயணம் செய்யும் வழக்கம் நமக்கு இருந்து வந்தது; பொருள் உணர்ச்சி இல்லாமலேயே அந்நூலை இடைவிடாது பல்லாண்டுகள் பாராயணம் செய்தோம். அந்நூலின் பயன் நம் வாழ்வில் படிப்படியாக நிகழ்ந்து விட்டது. முதலில் "ஓசை எழுத்து முதலாம் ஐந்திலக்கணமும் தோய்ந்து பழுத்த தமிழ்ப்புலமை பாலித்து" என்ற தமிழ்ப் புலமையை அளித்தது திருவருள். ஒழுக்கமுடன்.........ஆயும் பழைய அடியாருடன் கூட்டியது. அப்பனுவல் கூறி வரும் அத்தனையும் நம் வாழ்வில் முறையாக நிகழ்ந்து வருதலை எண்ணுகையில் பின்னரும், அப்பனுவல் கூறுவது போலத் திருவருள் 'சேய கடியேற்கும் பூங்கமலக்கால்காட்டி அடியேற்கு முன்னின்று அருளும்' என நினைந்து நெகிழ்தலையன்றி வேறு என்செய்ய இயலும்?

சாதாரண ஏழை விவசாயக் குடும்பத்தில் பிறந்த நாம் இந்த நிர்வாகத்திற்கு இன்று வந்திருக்கின்றோம். சாமானியர்களால்,

நடத்தப்பட்டுவரும் அரசாங்க ஆட்சி போன்றதே திருமடங்களின் ஆட்சியும். மக்களுடைய சார்பில் இங்கே உள்ளவர்கள் அறம் புரிந்து காத்து வருதலை அனைவரும் உணரவேண்டும்.

இத்திருமடத்தைச் சார்ந்து இலட்சம் குடிமக்கள் உள்ளனர். இந்தத் துறையில் நிர்வாகம் புரிதற்கு மிகுந்த திறனும் உரமும் தேவை. அதனைக் குருவருள் கூட்டுவிக்கும் என்ற நம்பிக்கையும் உண்டு. கிறித்தவர்கள் போலக் கிராமந்தோறும் நம் தொண்டு செயற்பட வேண்டும். பணமும் படையும் மட்டும் போதாது. தொண்டுள்ளம் வேண்டும். அத்தகு திருத்தொண்டின் உறைப்பால்தான் மீண்டும் சைவமும் தமிழும் தழைத்தினிது ஓங்கும். நம்முடன் அந்தப் பணிக்கும் அனைவரும் துணை நிற்பார்கள் என்று நம்புகிறோம். குருவருளாலுங் திருவருளாலும் எல்லோர்க்கும் நல்லன எல்லாம் பெருக வாழ்த்தி நிறைவு செய்கின்றோம்.

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Kambakareswaraswamy Devasthanam, Thirubuvanam.

In the Course of my tour of Thanjavoor District, I was very fortunate enough to vist this famous temple and to worship the Lord and Amman. As used with Dharmapuram Muth, this temple also is well maintained. The staff are quite interested in the upkeep of the temple and arranging worships and dharsan for the Devotees.

(Sd) Varadharajan,
Member.
Commitee on Judication,
of Courts,
Madras.

22—11—'71.

வேலூர் வரவேற்பில் :

தருமையாதீனம் 26ஆவது மகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அருளிய

வாழ்த்துரை

குருவணக்கம்

என்னையிப் பவத்தில் சேரா வகையெடுத் தென்சித் தத்தே
தன்னைவைத் தருளி னாலே தாளிணை தலைமேல்சூட்டும்
மின்னமர் தருமைமேவி மெய்கண்டான் மரபில்வந்த
மன்னவ ! சுப்ரமண்ய வள்ளலே ! போற்றி ! போற்றி !

தேவாரம்

கீதத்தை மிகப்பாடும் அடியார்கள் குடியாகப்
பாதத்தைத் தொழநின்ற பரஞ்சோதி பயிலுமிடம்
வேதத்தின் மந்திரத்தால் வெண்மணலே சிவமாகப்
போதத்தான் வழிபட்டான் புள்ளிருக்கு வேளூரே "

தேவஸ்தானம் பெருங்குடி மக்களே ! பணியாளர்களே ! பொதுமக்களே !

தருமையாதீனத்தின் இருபத்தேழு கோயில்களில் முதன்மையான திருக்கோயில் புள்ளிருக்கு வேளூர். நமது ஆதீன மரபின்படி முதன் முதலாக இத்தல வழிபாட்டினைச் செய்யவேண்டும் என்று எண்ணினோம். செல்வமுத்துக்குமாரனைத் தரிசிக்க வேண்டுமென்ற பெருவேட்கை நம் உள்ளத்தே பெருகிற்று. சென்ற சில தினங்களுக்குமுன் காசியில் பரிபூரணம் எய்திய கயிலைக்குருமணி அவர்கள் சிவசாயுச்சியமுத்திப் பெரும்பேறு எய்திய காலத்தே "முத்தையா" "முத்தையா" என்று அழைத்துக்கொண்டே பரிபூரணம் பெற்றார்கள். பலநாட்கள் பெருமான் திருப்பெயரை ஓதி ஓதிப் பக்தி செய்தவர்களுக்கு இத்தகைய முத்திநிலை கைகூடும் என ஞானநூல்கள் கூறுகின்றன.

சென்ற கார்த்திகைத் திருநாள் குருவாரம். ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்களின் மௌனவிரதநாள். முத்துக்குமாரப் பெருமானது அபிஷேகஆராதனைகளைத்தரிசித்துஎன்றுமில்லாத திருவருள் நினைவோடு நவரத்தின அங்கியில் உள்ள முத்தை யாவின் பாதங்களை எடுக்கச்செய்து கண்களில் ஒற்றிக்கொடுத்து அணியச்செய்து வழிபட்டுக் காசிக்கு விடைபெற்றார்கள். அப் பெருமான் திருவடிகளில் இரண்டறக் கலந்தார்கள். அக் குருமணியின் அருளாசியையே துணைக்கொண்டு அவர்கள் விட்டுச்சென்ற பணிகளைத் தொடர்வது நமது கடமை என்று கருதுகின்றோம்.

இன்று எண்ணற்ற பல வரவேற்பிதழ்களால் நம்மை வர வேற்றுப் பாராட்டியுள்ளீர்கள். நமக்குள்ள சிறப்புக்களால் இத்தகைய பாராட்டுக்கள் கிடைத்திருப்பதாக நாம் கருதவில்லை. எல்லாம் கயிலைக்குருமகாசந்நிதானத்தில் ஆற்றியுள்ள அரும் பணிகளுக்குக் கிடைத்த பரிசுகளாகவே நாம் கருதுகிறோம்.

மணிவாசகர் கூறிய " நானார் என்உள்ளமார் ஞானங்களார் வானோர்பிரான் என்னை ஆண்டிலனேல் " என்ற நிலையினைத் தான் நாமும் கருதுகிறோம். குருவருளும் திருவருளும் உணர்த் தில் உணரும் நிலையே நம்நிலை. சாதாரண பட்டி தொட்டியில் வாழ்ந்த நம்மைப் பட்டினத்து சுவாமிகளாக மாற்றியது கயிலைக் குருமணியின் கைவண்ணம். குருமணி அவர்கள் அஸ்த விசேஷமுடையவர்கள். அவர்கள் மண்ணைத் தொட்டாலும் பொன்னாகும். அவர்கள் திருக்கரத்தால் துறவுக்கோலம் அளிக் கப்பட்டவர்கள் இன்று நல்ல நிலைகளில் விளங்குகின்றார்கள். குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனம் மகாசந்நிதானமும், திருப் பனந்தாள் காசிமடம் இளவரசு சுவாமிகளும் குருமணி அவர் களிடம் அருள்துறவு பெற்றவர்கள். உலகியல் வாழ்வுக்கு அப் பால் விளங்கும் திருவருள் வாழ்வுதான் உலகை இயக்கி வரு கிறது என்ற உறுதி உடையவர்கள் நம் குருமணி அவர்கள். அவர்களை நினைக்கும்போது சமயாசாரியர்களில் சுந்தரர் வர லாறுதான் நம் நினைவிற்கு வருகிறது.

மேலைக்கடற்கரையில் உள்ள திருவஞ்சைக் களத்தில் வழி பட்டுக்கொண்டிருந்த சுந்தரர்க்கு உலகவாழ்வு போதும் என்ற நினைவுவந்தது. கயிலைவருமாறு அழைத்து அருளாணை அனுப் பினான் இறைவன். நம்குருமணியவர்களும் கீழைக்கடற்கரையில் உள்ள கயிலையனைய செந்திற்பதியில் கந்தசஷ்டித் திருநாட் களில் மோனத்தவமிருந்த காலத்தில் காசிக்குவருமாறு இறைவன் திருவருள் அழைப்பு விடுத்தான்போலும். அங்கேயே காசிசெல்ல

தருமையாதீனம் 25-வது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி பரிபூரணமான பத்தாம்நாள்
குருபூஜை விழாவில் (19—11—'71)

குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனம்
ஸ்ரீலஸ்ரீ தெய்வசிகாமணி அருணாசல தேசிக பரமாசாரிய சுவாமிகள்
பொன்னாடை போர்த்துதல்

தருமையாதீனம் 25-வது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி பரிபூரணமான பத்தாம்நாள்
குருபூஜை விழாவில் (19—11—'71)





.6-வது மகாசந்நிதானத்தில் அன்பர்கள் புடைசூழ
பட்டணப்பிரவேசமாக எழுந்தருளல்

தருமையாதீனம் 25-வது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி பரிபூரணமான பத்தாம்நாள்
குருபூஜை விழாவில் (19—11—'71)



தருமையாதீனம் 26-வது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளைக்
காசிமடம் ஜூனியர்
வித்துவான், ஸ்ரீமத். முத்துக்குமாரசாமித் தம்பிரான் சுவாமிகள்
கொலுவழிபாடு செய்தல்

திருக்கடவூர் சோமவார சங்காபிஷேக விழா
(29—11—71)

துறைசை ஆதீனம் 22 - வது மகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக பரமாசாரிய சுவாமிகள்
தருமைக்கு எழுந்தருளியபோது
வரவேற்பு (29—11—71)

துறைசை தருமை ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானங்கள்
தரிசனத்துக்கு எழுந்தருளல்

முடிவுசெய்து விட்டார்கள். காசிக்குச் சென்ற குருமணி அவர்கள் கங்கையாடவில்லை. விசுவேசனை வணங்கவில்லை. சென்ற 12 மணி நேரத்தில் சிவனடி சேர்ந்தார்கள் என்பதை நினைக்கும் போது திருவடிப் பேற்றிற்கே திருவருள் அழைத்துச் சேர்த்துக் கொண்டதாகத்தான் இதனை உணர முடிகிறது.

மரணவஸ்தைகள்ஏதுவுமில்லாமல்,நோயிற்கிடவாமல்பாயிற் டுக்காமல் கால பைரவத் தலமாக விளங்கும் காசிக்குச் சிறந்த கால பைரவஅஷ்டமி தினத்தில் இருந்த நிலையில் முத்திநிலை கூடினார்கள். ' அடப்பண்ணி வைத்தார் அடிசிலை உண்டார் மடக் கொடியாரோடு மந்தணங் கொண்டார், இடப்பக்கமே இறை நொந்தது என்றார்- கிடக்கப் படுத்தார் கிடந்தொழிந்தாரே' என்ற நிலை இல்லாமல் மூன்று சிறந்த மருத்துவர்கள் உடனிருந் தும் அவர்கள் அநாயாச மரணமெய்தியதை எண்ணி எண்ணி உலகம் போற்றுகிறது.

தருமையாதீனத்தில் இருபத்தாறரை ஆண்டுகள் அரு ளாட்சி செய்து சைவத்தையும் தமிழையும் தம் இரு கண்கள் எனப் போற்றியவர்கள். எண்ணற்ற திருப்பணிகளைச் செய்தும் இமயம் முதல் குமரிவரை உள்ள தலங்களுக்கு யாத்திரை சென்று வழிபட்டும், மானுடர் அணுக ஒண்ணா மலையாகிய கயிலாய மலையைத் தரிசித்தும் மகாகும்பாபிஷேகங்கள் முதலியன நிகழ்த் தியும் அன்பர்கள் உள்ளத்தில் அழியாத இடம்பெற்றவர்கள். இந்தியக் குடிமக்கள் அனைவரும் அவர்களது பத்தியையும் பண்பு நலங்களையும் பாராட்டுகின்றனர். அவர்களால் இருபத்தாறரை ஆண்டுகள் வளர்க்கப்பெற்ற நம் ஆட்சியும் அவர்களது அடிச் சுவடுகளைப் பின்பற்றியதாகவே அமையும்.

இன்று சைவ மெய்யன்பர்களும் குடிமக்கள் பலரும் பொது மக்களும் நமக்கு வரவேற்பளித்துள்ளனர். புறச்சமயத்தவர் களாகிய புங்கனூர் இஸ்லாமியர்கள் நமக்குச் செங்கோல் வழங்கி யுள்ளனர். ஆட்சியில் வளைவில்லாமல், மனத்தில் கோணலில் லாமல் நேர்மையாக நடக்க வேண்டுமென்பதை நினைப்பிக்கிறது செங்கோல். நம்திருமடத்தினைச் சேர்ந்த குடிமக்களில் இஸ்லாமியர்கள், கிறிஸ்தவர்கள் எல்லோரும் உள்ளனர். அனைவரும் ஒன்றுபட்டுத் திருமடத்தின்பால் அன்பு செய்து வருகின்றனர். இந்த நிகழ்ச்சி மதவேறுபாடற்ற நமது ஆதீன நிர்வாகத்திற்கு ஒரு எடுத்துக்காட்டு.

பஞ்சாயத்து யூனியன் வெள்ளிக் கோபுரம் ஒன்றைப் பரிசாக வழங்கியுள்ளது. முடிமன்னர்களும் அவர்களுக்குப்பின் வந்த

ஆங்கிலேய அரசாட்சியும் திருக்கோயில்களின் பராமரிப்புக்களை திருமடத்தின்பால் ஒப்படைத்தன. இன்றைய அரசினரும் திருமடத்தின் திருக்கோயில்கள் நல்ல நிலையில் விளங்குவதைப் பாராட்டுகின்றனர். பஞ்சாயத்து யூனியனும் கோபுரத்தை நம்மிடம் ஒப்படைத்திருப்பது, திருக்கோயில் நிர்வாகம் திருமடங்களிடமே இருக்கவேண்டும் என்ற அவர்கள் கருத்தை நமக்குத் தெரிவிக்கிறது.

ஆதீனத் திருக்கோயில்களைச் சேர்ந்த குடிமக்கள் இலக்ஷத்திற்கு மேற்பட்டவர்கள் இருக்கிறார்கள். அனைவரும்ஒன்றுபட்டுத் தொண்டு செய்தால்தான் கோயில் தழைக்கும். திருமடம் செழிக்கும். குடிமக்களும் தழைப்பார்கள்.

'தருமம் தலைகாக்கும்' என்று ஒருபழமொழி 'தருமம் செய்தால் செய்ததருமம் நம்மைக் காக்கும்' என்று ஒருபொருள். நம் குடும்பங்களில் தருமத்திற்கென்று கொஞ்சம் நிலம் விட்டால் சொந்தசொத்தெல்லாம் போய்விட்டாலும் தருமத்திற்கு என்று விடப்பட்ட நிலம் விற்கமுடியாதாகையால் அந்நிலம் நம்மைக் காக்கும் என்றும் ஒருபொருள் சொல்வார்கள்.

கயிலைக் குருமணி அவர்கள் இந்தத் தேவஸ்தானக் குடிமக்களுக்கு நிலப்பட்டா வழங்கினார்கள். ஒருசிலரே அதனைப் பெற்றுக்கொள்ள முன்வந்தனர். கிஸ்தி கட்டவேண்டிய கடமை வந்துவிடுமோ என்று அஞ்சிப் பலர் முன்வரவில்லை. கோயில் வேறு நாம் வேறு என்ற நினைப்புமாறிப் பரஸ்பரம் ஒத்துழைத்தால்தான் கோயில்கள் வளரும்.

கடவுள் சென்னையில் வியாபாரியாக, வேலூரில் விவசாயியாக நம் நிலைகளுக்கு ஏற்ற நிலைகளில் இருந்து அருள்செய்கின்றான். கோயில் நம்முடையது; திருமடம் நம்முடையது என்ற எண்ணம் மக்களிடையே வளரவேண்டும். பலவகை அறங்களைக் கண்காணிக்கும் தலைமைப் பொறுப்பு மட்டுமே நம்முடையது. இத்தனைச் சொத்துக்களுக்கும் அதிபதி என்று நாம் எண்ணவில்லை. ஒருமனிதன் தன் தேவைக்கு மேற்பட்ட பொருள்களை வைத்திருப்பதைப் பாவமென்று உபநிஷத்துக்கள் கூறுகின்றன. பெருந்தீனி தின்பவன் என்று சிலரை நாம் குறைசொல்வதைப் பார்க்கிறோம். நம்மிடையே சிலர் புகுந்து நமக்குள்ள உறவுகளைக் கெடுக்க முயல்வார்கள். தாய்தந்தையர்கள் அடிக்கவும் அணைக்கவும் உரிமை உடையவர்கள் என்பதை மக்கள் உணர வேண்டும். கடிதோச்சி மெல்ல எறிதல் சிலவேளைகளில்

நிகழலாம். குடிகள் கடமையுணர்ந்து பணி செய்யக் கடமைப் பட்டவர்கள் என்பதை உணரவேண்டும்.

நிர்வாகம்என்பதுஒருமனிதனதுஇயக்கம்போன்றது. எல்லா உறுப்புக்களும் அவனோடு ஒத்துழைக்கும்போதுதான் மனிதன் செயலாற்ற முடியும். சிப்பந்திகளும் குடிமக்களும் கை கால் முதலிய உடலுறுப்புப்போன்றவர்கள். நாம் மூளையாக அல்லது இதயமாக இருந்து உறுப்புக்களை இயக்குகிறோம். கோபுரத்தின் அடித்தளமாகத் தூண்களாக சுதைச் சிற்பங்களாக நீங்கள் விளங்குகிறீர்கள். கோபுரக் கலசமாக நாம் விளங்குகின்றோம். எல்லோரும் இணைந்து செயலாற்றுவதான் ஸ்தாபனம்செழிக்கப் பயன்தருவது.

இறைவன் தோன்றாத்துணையாயிருந்து எல்லோரையும் பாதுகாப்பான். அவனது ஆலயங்களைக் காப்பது நம்கடைமை. செந்தமிழ்ச் சொக்கன் திருவருளாலும் செல்வமுத்துக்குமரன் திருவருளாலும் எல்லோரும் இனிது வாழ்க வாழ்க என வாழ்த்தி முடிக்கின்றோம்.

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Sattanathaswami Devasthanam, Sirkazhi.

Visited the temple along with my wife and other members of my party at about 10-30 A.M. The temple has been kept clean and the Supdt. was pleased enough to describe the legends behind the temple and to make us understand the importance of the various deities of the temple.

" It is a real pleasure to witeness the workship conducted in this temple by the priests in charge of temple worship. "

Sd Apurba Lal Majumdar,
Speaker. West Bengal Assembly,
13th. Nov. 1971

வாழ்த்தும் அஞ்சலியும்

குன்றக்குடி, திருவண்ணுமலை ஆதீனம் மகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ தெய்வசிகாமணி அருணுசல தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்

(தவத்திரு. குன்றக்குடி அடிகளார்)

அழைப்பை நோக்கி.....!

தருமையும் கமலையும் விரிதமிழ்க் கூடலும்
திருநக ராக அரசுவீற் றிருந்தவ,
பல்லுயி ருக்கும் பவசம் பந்தம்
மாற்றிய ஞானசம் பந்தமா முனிவ,
அறுபடை வீட்டில் அமர்ந்தருள் வழங்கும்
அண்ணலின் பெயர்தம் முரிமையாக் கொண்ட
சொற்பொருள் தேடும் சுப்பிர மணிய
தேசிக கயிலைக் குருமணி ! நீயே
ஒன்றுக்கும் போதா என்றன் உளத்தினில்
புகுந்து நின்றனை, புகலரும் பெரியோய் !
கண்ணப்பன் அன்பைக் காளத்தி யப்பன்
உகந்த தற்குக் காரணம் என்னை ?
அங்ஙனே போலும்நின் அன்பே ! ஆனல்
கண்ணப் பன்தன் கண்ணினைத் தந்தான்.
யாதுநீ பெற்றனை என்பால் ஐயனே !
உமையொரு கேள்வன் உலகுடை நாயகன்
என்னுயிர் எடுத்துக் கொண்டுநின் னுயிரை
மண்ணில் தவழ்ந்திட மனங்கொண் டானலன் !
மன்னு மாமலை கயிலை யதனிலே
எந்தை ஈசன் தனக்குத், தாயிற்
சிறந்த பரிவுடன் செய்ம்முறைப் பாங்குடன்
பணிகள் செய்திடும் அடியா ரிலாத
நிலையில் நினைவந் தழைத்தனன் கொல்லோ ?
ஆலால சுந்தரன் என்ன ஆயினன் ?
பண்டொரு நாள் அவன் அணுக்கத் தொண்டினை
மறந்து காதல் மயக்கங் கொண்டிட
அண்ணல் வருந்திய வருத்தம்ஆ ரறிவார் ?

அண்ணல் மட்டும் அறியலாம். அவனோ(டு)
ஆரூ ரன்பால் ஆர்ந்த வேட்கையில்
மாதே வனும் இம் மண்ணிலே நடந்து
மீண்டும் அவனை மீட்டுச் சென்றனன்!
அந்தஆ ரூரன் மீண்டும் அக் காதல்
வழிப்பட் டிருப்பான் போலும்! எதையும்
காதலிக் காமல் தன்னையே காதலித்(து)
இன்புறும் இனிய தோழனை விரும்பி
கயிலா யத்துறை நாதன் கடிதினில்
நாடி நின்னை நயந்துபெற் றனனோ ?
தகைசால் சிவத்திடம் தன்னலம் இருந்ததே,
அவன்நன் றாக வாழ்ந்துபோ கட்டும்!
நின்னுடைப் பேணலில் நிமலன் மகிழ
மண்ணகம் விட்டுனை மறைத்தெ டுத்தனன்.
யானென் செய்வல்? யானென் செய்வல்?
நெஞ்சின் தூய்மை நின்முகம் காட்டக்
குழைத்த அன்பினை நின்சொற் கூட்ட
அணைத்த அணைப்பின் இதத்தினை இகழ்ந்தேன்!
எம்போ லியரும் இம்மண் ணுக்கிரை
யாகி விடாமல் அழியா மாண்பு
படைத்துத் தந்தநின் படைப்புத் தொழிலையும்
ஊனுக் குணவும் உயிர்க்கு ஞானமும்
உவந்தளித் திடும் நின் காத்தல் தொழிலையும்
நின்றன் சிரிப்பில் எந்தம் பண்டைக்
கொடுவினைக் காரியம் மறைந்திடும் தொழிலையும்
ஞானத் தழுவலால் எம்மூல மலம்
அவித்தழித் தமைந்த அழித்தல் தொழிலையும்
இமயம் சார்கருங் காக்கையும் எழிலார்
பொன்மய மாகப் பொலிவது போல
நின்னைச் சார்ந்த நமக்குநின் னுரிமை
தந்(து) எம் பெயரை மாற்றி நின்பெயர்
தந்துநல் இன்பத் தொட்டிலில் வளர்த்ததால்
நின்றன் நிகரிலா அருளும் தொழிலையும்
ஆக ஐவகைத் தொழிலையும் அறிந்து
நினைந்து நெகிழ்ந்தே உருகு கின்றனம்!
நீர்த்துளி காணாப் பயிரென எம்முயிர்
வாடா தோ? நாம் வாடிடக் கயிலைக்
கடவுள் தாம் மகிழக் கருதிய தறமோ?

கூடல் மா நகர் நெடுஞ் செழியனே அன்று
தன்நிறை தவறினன். அது போ லின்று
கூடல்மா நகரில் கொற்ற மமர்ந்தருள்
ஆலவாய் அண்ணலும் நிறை தவ றித்தான்
மகிழவும் எம்முயிர் வாடவும், நின்னுயிர்
கொண்டுபோய்ச் சேர்த்துக் கொடுமை செய்தனனே !
கயிலை நாதன் காதலித் தான்நினை
கயிலை நாதனைக் காதலித் தாய், நீ !
நானே நின்னை நயந்துகா தலித்தே
என்னெஞ் சினின்றும் நின்னை யகற்றிடக்
கயிலை மலையா னலும்சா லாதே
கண்ணால் நின்னைக் கண்டு மகிழத்
தடைசெய் தான் அவன் ஆயினும் நின்னை
நெஞ்சால் நினைந்து மகிழும் உரிமை
எந்தை ஈச னலும் பறித்திட
இயலா உரிமை ! என்றன் உரிமையே !
நின்னை நினைந்தென் ஆவி கழியும் !
நின்னை உள்ளி நீளுல கத்தில் நீ
பணித்த பணிகளைச் செய்து கிடப்பேன் !
கயிலை நாதன் கழிபெரு வேட்கையால்
நின்னை அழைத்திட நெடிதுகா முற்றனன் !
எனையழைத் திடாமல் தனிநீ ஏகினை !
பெரியோர் செய்கை பொருட்குறிப் புடையது
என நான் தேறி இவ்வுடல் தாங்கினன் !
எந்தை கயிலை ஈசன் தன்னிடம்
செந்தமிழ்ச் சுந்தரன் விண்ணப் பித்துச்
சேர மான்பெரு மானைச் சேர
அழைத்துக் கொண்டது நீ அறி யாததோ ?
உண்மையில் உன்னிடம் ஒரு விண்ணப்பம்
நின்னடி வேண்டுவன் யான் அஃதொன்று !
எந்தை கயிலை ஈச னெடு நீ
இனிது மகிழ்ந்துறைந் திருக்கும் போழ்தினில்
என்னையும் அழைத்திட எடுத்துக் கூறி
இனியஉத் தரவுபெற் றெனக்(கு) அதை யனுப்பி
அருளுக ! நாளும்நின் அழைப்பை
நோக்கியே வாழ்தலை நோன்பெனச் செய்வனே.

Private Secretary
TO HIS HOLINESS THE JAGADGURU
MAHASWAMIGALAVARU OF SRINGERI MUTT
Sarada Peetham,
Sringeri-Kadur, Mysore State

Camp : Sringeri,
Date : 13th Nov. 1971

H H felt for the Paripoornam of the Swamiji of Dharmapuram Adhinam who was very much devouted to religious activities and doing Dharmic works.

His Holiness prays to the Almighty to bless the devouted successor Sri-La-Sri Shanmuka Desika Gnana Sambanda Swamigal also to continue the religious propaganda and activities of his predecessors.

காஞ்சிபுரம், தொண்டைமண்டல ஆதீனம்,

ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள்

Sri-La-Sri Maha Sannidhanam Needuzhi Vazha.

வித்துவான்,
ஸ்ரீமத். முத்துக்குமாரசாமித் தம்பிரான் சுவாமிகள்
ஜூனியர், ஸ்ரீ காசிமடம்

திருப்பனந்தாள்.
தஞ்சை ஜில்லா.
16—11—1971.

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் அருள் ஆற்றலைப்பற்றியும் அவர்கள் ஆற்றிய அருட்செயல்களைப்பற்றியும் அவர்களின் நல் இயல்புகளைப் பற்றியும் அடியேன் எழுதும் தகுதியும் ஆற்றலும் உடையவன் அல்லேன், எனினும் தருமையிலிருந்தபோது என் நெஞ்சில் நீங்காச்சில நிகழ்ச்சிகளையும்,

அன்றும் பனசை வந்தபின்னும் அடியேனுக்கு அருளிய அருளிப் பாட்டையும் "நினைவில் நின்றவை" எழுதுகிறேன்.

"நின்னவார் பிறரின்றி நீயே யானாய்
நினைப்பார்கள் மனத்துக்கோர் வித்து மானாய்
மன்னனாய் மன்னவர்க்கோர் அமுத மானாய்
மறைநான்கு மானாய்ஆ றங்க மானாய்
பொன்னானாய் மணியானாய் போக மானாய்
பூமிமேல் புகழ்தக்க பொருளே உன்னை,
என்னானாய் என்னானாய் என்னி னல்லால்
ஏழையேன் என்சொல்லி ஏத்து கேனே"

தருமபுர ஆதீன மடத்தில் இருந்த பொழுது தமிழ் வித்துவான் வகுப்பில் சேர்ந்து படிக்குமாறு உத்தரவாயிற்று. ஓராண்டு தமிழ் பயின்றபின் 'வேதநூல், சைவ நூல் என்றிரண்டே நூல்கள் வேறுரைக்கும் நூல் இவற்றின் விரிந்த நூல்கள்' ஆகையால் உலக நூல்களைக் கற்பதில் நாட்டம் இல்லாமல் சைவத்துறையாகிய சாந்திரங்களைக் கற்பதிலேயே நாட்டம் செல்வதாக இருந்தது. இப்பொழுது காஞ்சிபுரம் தொண்டை மண்டல ஆதீனகர்த்தராக இருப்பவர்களும், அந்நாளில் தருமபுர ஆதீனக் கல்லூரியில் பேராசிரியராக இருந்தவருமாகிய திரு. முத்து. சு. மாணிக்கவாசக முதலியாரவர்கள் வழி ஸ்ரீலஸ்ரீ கயிலை மகாசந்நிதானம் அவர்கள் திருமுன் இதனைத்தெரிவித்த பொழுது ஸ்ரீலஸ்ரீ கயிலை மகாசந்நிதானம் அவர்கள் மெய்ஞ்ஞானம் பெற உலகியல் நூல் அடிப்படையாகும் என்றும்; 'உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும் கல்லார் அறிவிலாதார்' என்பது தமிழ் மறை ஆகலின் உலகத்தோடு ஒட்ட ஒழுகுதல் கைகூடுதற்கு உலக நூல்களை முதலில் நன்குகற்று உலகநடை அறிந்து ஒழுகுங்கால் சைவ சாத்திர நூல்களையும் கற்றுப் பயனடையலாம் என்றும் அறிவுரை வழங்கியருளித் தமிழ் வித்துவான் கல்வியைத் தொடரச்செய்து, சாத்திரக் கல்வியை எளிதில் பெற அருள் செய்தார்கள்.

"பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப்பரிந்து" என்ற திருவாசகம் என் அளவில் மிகவும் பொருந்துவதாக விளங்குகின்றது. என் உடம்பு மிகவும் மெல்லிதாக இருக்கும். உடல் நல்ல வளர்ச்சியோடு இருந்தாலன்றித் தொண்டுகள் செய்யலாகாதே! ஆகலின் இதனை நன்கு உணர்த்தி அருளிய ஸ்ரீலஸ்ரீ கயிலை மகாசந்நிதானம் அவர்கள் ஒரு சமயம் பொங்கல் விழா நாளில் கரும்பும் இஞ்சியும் நிறையக் கொடுத்தருளிக் கருப்பஞ்

சாற்றுடன் இஞ்சியும் சேர்த்துப் பருகின் உடல் வளமடையும் என்று பணித்துத் தாயினும் சாலப் பரிவு கூர்ந்து அருள் செய்தார்கள்.

பொங்கல் பூசை முடிந்த பிறகு அனைவரும் உத்தரவு பெற்றுத் தத்தம் இல்லங்களுக்கு ஏகினர். மாகேஸ்வர பூசைக்கு மகாசந்நிதானமும் அடியார்களுள் அடியேன் மட்டும் இருந்தோம், " உனக்கு நான் துணை, எனக்குச் சொக்கேசர் துணை " என்று கூறியருளி,

" ஆறுதலை இல்லை அடியேனுக் கன்பாகத்
தேறுதலை சொல்வார் சிலரில்லை — வேறெனக்குத்
திக்காரும் இல்லை சிவனே பழிக்கஞ்சி
சொக்கேநின் தாளே துணை "

என்ற சொக்கநாத வெண்பாப் பாடலை நினைவு கூர்ந்தருளினர்கள். எனவே உயிர்கட்கு இறைவனைத் தவிர வேறு யாரும் துணையில்லை என்பதை அறிந்து அறிவுறுத்திய உபதேசம் நெஞ்சை விட்டகலாததொன்றுகும்.

" தன்னைத்தான் காக்கின் சினம் காக்க " என்பர் வள்ளுவர். " சீ சீ சினமே தவிராய் " என்றருளினர்கள் நமது பரமாசாரியராகிய குருஞானசம்பந்தர். எத்தனைப்பொருள்கள் தான் கற்பினும் கேட்கினும் சினம் ஓரோவழி வந்துவிடுவதுண்டு. அதனல் கயிலை மகாசந்நிதானம் அவர்கள் " பிருங்கி " என்று என்னை அன்பாகக் குறிப்பிடுவதும் உண்டு. என்னதான் முயன்றுலும் அறியாமல் கோபம் பீறிட்டு வந்து விடும். ஒரு சமயம் ஞானசூரியன் முன்னும் என்னையறியாது வந்து விட்டது எனலாம். இஞ்ஞான்றும் காரியம் பார்க்கும் திரு. சுப்பையா முதலியார், திரு. ஜெயபால் நயினுர் முன்னிலையில் என்னை அன்புடன் அழைத்துவரச் செய்தார்கள்; தாம் ஆதீனத் திருக்கூட்டத்து அடியார்களுள் ஒருவராய் இருந்தகாலத்து நிகழ்ச்சிகள் சில எடுத்துக்கூறினர்கள். தாம் இப்பொழுது திருக்கூட்டத்துஅடியார்களை எத்தகைய சிரிய முறையில் வைத்திருப்பதையும் திருக்கூட்டத்து அடியார்கள் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதையும் விளக்கியருளினர்கள். நிர்வாகத்தில் கோபம் கொள்ளுதல் கூடாது. பொறுமையுடன் இருத்தல் வேண்டும் என்றும் உபதேசம் செய்தார்கள்.

ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் செவ்வி அறிந்தும் அழைத்தபோதும்தான் செல்லும்கடப்பாடுடையேன். பிறஅமயங்களில் கூடியவரையில் செல்லாதிருப்பதே நடைமுறைப் பழக்கம்.

இவ்வாறு இருப்பதை அறிந்து, கோபத்துடன் இருந்தாலும் அதனைக் கருதாமல் வந்து செல்லவேண்டும். இங்கு வந்து கோபப்பயனைப் பெறுவதாயினும், பலதடவை வந்து போனால் தான் அதனைக்காண்போர் உனக்குத் தனி மதிப்புத்தருவர்; ஆகவே, வாராதிருத்தல் கூடாது; அழையாதிருப்பினும் அமயம் பார்த்து வந்து போதல் வேண்டும்" என்ற உபதேசம் என் செவியைவிட்டகலாதிருக்கிறது.

நான் திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்துக்கு வரும்போதும் வந்தபிறகும் பலதடவை உபதேசிக்கப்பெற்றது - 'திருப்பனந்தாள் காசிவாசி சுவாமிகள் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி எஜமான் சுவாமிகள் அவர்களின் மனம் கோணாமல் அவர்களின் திருவுளப்பாங்கின் வண்ணம் ஒழுகுதல் வேண்டும்' என்பதும் 'பதவி மலர் மஞ்சமல்ல. சுயநலம் பாராமல் ஸ்தாபனத்தின் நலம் ஒன்றே கருதி முன்னோர்களின் கருத்துப்படி என்றும் வாழ வேண்டும்' என்பதுமாகும்.

கயிலைக் குருமகாசந்நிதானத்தின் அருள்பெற்ற எவரும் அறிவுடையவராவர், அவர்களின் அருள்பெற்ற கோழையும் வீரனாவான்; உடல் வலியற்றவனும் வன்மை பெறுவான்; அவர்கள் சந்நிதி அடைந்த பகைஞனும் பாவியும் நலம்பெறுவர்.

அவர்களிடத்தில் ஆசிரமம்பெற்று அவர்கள் அருள் பெற்றவர்களே ஸ்ரீலஸ்ரீ குன்றக்குடி மகாசந்நிதானம் அவர்கள் ஆவர். தருமையில் இன்றைய 26ஆவது பட்டம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளும் கயிலைக் குருமகா சந்நிதானத்திடமே ஆசிரமம் பெற்றுச் சமய விசேஷ ஞான தீட்சை முதலிய எல்லாத்தீட்சைகளும் ஆறுகட்டி பல்லக்குமுதலிய சின்னங்களும், பூரண அருளும்பெற்று ஒடுக்கம் சுவாமிகளாகவும் விளங்கினார்கள்; அடியேனும் ஸ்ரீலஸ்ரீ கயிலை மகாசந்நிதானம் அவர்கள்பால் ஆசிரமம் பெற்றவனே. இருமகாசந்நிதானங்களையும் சிறந்த அடியார்கள்பலரையும் ஆக்கிய பெருமை வேறுயாருக்கும் இருந்திருக்க முடியாதென்றே எளியேன் எண்ணுகிறேன்.

கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் அருளிப்பாட்டின் வண்ணம் தோன்றாத்துணையாய்உள்ள குருவருட்டுணைகொண்டு எங்கள் தலைவர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி எஜமான் சுவாமிகள் அவர்களின் திருவுள்ளம் உவக்கும் தொண்டனாக வாழும் கடப்பாடுடையேன்.

காவாய் கனகத்திரளே போற்றி

சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள்

திருவாவடுதுறை ஆதினம் திருப்பணி மடம். 13—11—'71 திருச்செந்தூர்.

தருமை ஆதீனம் 26ஆவது மகாசந்நிதானம் பட்டம் ஏற்றதில் என் மனமார்ந்த மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தாங்கள் நீடூழிவாழ எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தித்துக் கொண்டு எனது நமஸ்காரத்தைப் பணிவன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தவத்திரு. சுந்தரசுவாமிகள்

கௌமார மடாலயம்
சின்னவேடம்பட்டி அஞ்சல், கோயம்புத்தூர் 6

தோத்திரப் பதிகம்

கொச்சகக் கலிப்பாக்கள்

குருஞான சம்பந்தக் குருமுதல்வர் தருமையில்
இருபத்தைந் தாம்பட்டத் திருந்தருளாட் சியைச்சிறப்பாய்
இருபத்தா றுண்டியற்றி இயைந்ததே வாலயங்கள்
இருபத்தே ழிணைப்புரந்த இசைக்கயிலைக் குருமணியே.

கயிலாய பரம்பரையாக் காணும்உரை மெய்யாக்கிக்
கயிலாயத் திருமலைக்குக் கவின் அப்பர் என நடந்து
பயிலும்வழி பாடாற்றிப் பரமனருட் கடற்குளித்த
எயிலமையும் திருத்தருமை எழிற்கயிலைக் குருமணியே.

சாலஅருள் பொழிவிழியும் சாந்தமிகும் முகமலரும்
சீலமுடன் உளம்குளிரச் செப்புதிரு வாய்முதலாக்
கோலமிகும் திருக்காட்சி குவிமனத்தும் படத்தும் அன்றித்
தூலவிழி காண்பதுண்டோ சுகக்கயிலைக் குருமணியே.

எழுசீர் விருத்தம்

திருக்கயி லாய பரம்பரை யாகத்
திகழ்திருத் தருமையா தீனம்
பெருக்கமார் ஞானக் கோல்கரத் தேந்திப்
பிறங்கரு ளாட்சி யிலமர்ந்து
திருத்துநற் புலமை தவங்கொள்சண் முகப்பேர்த்
தேசிக ஞானசம் பந்தர்
குருத்துவம் இருபத் தாறதாக் கொண்டு
குலவருள் பொழிந்தனர் மாதோ.

குருபாதமே கதி

சிதம்பரம் பாதபூஜை
ஸ்ரீ அம்பலத்தாடிமடம்,

புதுவை,
16—11—71,

ஸ்ரீலஸ்ரீ திருநாவுக்கரசு சுவாமிகள்

தருமையாதீனத்தின் தனிப்பெரும் தவவேந்தராகிய ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் ஸ்ரீ ஆனந்தநடேசனின் அருள்அடி நிழலை அடைந்த செய்தி அறிந்து அதிர்ச்சி அடைந்தேன்.

திருவாமூரில் நடைபெற்ற திருநாவுக்கரசர் ஆலய மகா கும்பாபிஷேக விழாவிலும் வேலூர் மகாகும்பாபிஷேக விழா மண்டலாபிஷேகக் கார்த்திகை விழா முதலிய நாட்களிலும் குருமணி அவர்களைத் தரிசிக்கும் வாய்ப்புப்பெற்றோம். ஆவுடையார்கோயில் சென்று மணிவாசகரைத் தரிசித்து மீளும் காலை தருமை வந்து குருமணி அவர்களைக் கண்டோம்.

இவ்வாறு பன்முறையும் தரிசித்து மகிழ்ந்த நம் உள்ளம் அவர்களது பிரிவுக்கு ஆராத்துயர் கொள்கிறது. காசி யாத்திரை சென்று பரிபூரணமடைந்து திரும்பிய அவர்களது திருமேனியைப் புதுவையில் கடைசியாக வழிபடும் வாய்ப்புப் பெற்றோம். குருமணி அவர்கள் சமயம், மொழி, நாடு, சமுதாயம் இவற்றோடு கலந்து நம்மை வாழ்விக்கின்றார்கள்.

வாழ்த்து

தருமையாதீனத்தில் 26 ஆவது குருமகாசந்நிதானமாக எழுந்தருளி அருளரசு ஏற்றுள்ள மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் நமது ஆன்மார்த்த மூர்த்தியாக எழுந்தருளி விளங்கும் ஸ்ரீ சிவகாமசுந்தரி சமேத ஸ்ரீ நடராஜப்பெருமான் திருவருளால் நீடு வாழ்க என வாழ்த்துகிறோம்.

சொக்கநாத வெண்பா

பிரிந்தேன் மலத்துனது பேரருளி னாலே
அறிந்தேன் உனை நன்று ஐயா — செறிந்தஇன்ப
பூரண செங்கமலப் பொற்பாதா கூடலில்வாழ்
ஆரண சொக்கநா தா. (27)

— குருஞானசம்பந்தர்.

राष्ट्रपति भवन, नई दिल्ली - 4
RASHTRAPATI BHAVAN,
NEW DELHI- 4.

November 13, 1971

Your Holiness,

I am grieved to learn of the demise of your esteemed predecessor, His Holiness Sri La Sri Kailai Subramanya Desika Gnanasambanda Paramacharya Swamigal. I had the privilege of meeting him for the first time at Nainital and subsequently at Dharmapuram itself more than once. In his demise, we have, no doubt, lost a great personage. My respectful condolences to you and other members of the Adheenam.

Yours sincerely,

V. V. Giri.

B. D. JATTI
Lieutenant Governer

Raj Nivas,
Pondicherry
November 13, 1971.

Poojya Swamiji,

I am in receipt of the telegram dated 12th November, 1971 from the Manager of the Adhinam mentioning about Poojya Sri Subramanya Desiha Gnanasambanda Paramacharya Swamigal's attainment of Paripoornam at Varanasi on the 10th November at 8-00 P. M. and also the election of your Holiness as the 26th Guru Maha Sannidhanam.

I took the opportunity of attending the final ceremony of His Holiness Sri Subramanya Desika Gnanasambanda Paramacharya Swamigal and placed a wreath.

I hope the activities of the Adhinam will be carried on as before. With Pranams,

தமிழக முதலமைச்சர்

மாண்புமிகு டாக்டர், கலைஞர், மு. கருணாநிதி அவர்கள் செய்தி

அறநிலைய அமைச்சர்,

மாண்புமிகு. மு. கண்ணப்பன் அவர்கள் மூலமாக

மு. கண்ணப்பன்
அறநிலைய அமைச்சர்

தமிழ் நாடு அரசு
தலைமைச் செயலகம்
சென்னை-9
18—11—1971.

பேரன்புடையீர் !

வணக்கம். இன்று மாலை நான் அமெரிக்காவில் சிகிச்சை பெற்றுவரும் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களோடு தொலைபேசியில் தொடர்புகொண்டபோது கீழ்க்காணும் செய்தியைத்தங்களுக்குத் தெரிவிக்குமாறு கேட்டுக் கொண்டார்.

"தருமையாதீனத் தலைவர் பொறுப்பை அருள்மிகு சோமசுந்தரத் தம்பிரான் அவர்கள் ஏற்றுள்ளமை அறிந்து மெத்தவும் மகிழ்ச்சி அடைவதோடு அவருக்கு என் பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். அவர் பொறுப்பேற்றுள்ள காலத்தில் திருக்கோயில்கள் அனைத்திலும் செந்தமிழ் வளர்க்கும் பணியிலும், நந்தமிழ்நாட்டு ஏழை எளியோர்க்கு திருக்கோயில்கள் மூலம் கல்வி, மருத்துவம் மற்றும் இன்றியமையாத் தேவைகளை இயன்றளவு மிகுதியாக நிறைவேற்றும் வகையிலும் அவருடைய பணி அமையும் என்று எதிர்நோக்குகிறேன். புதிய பொறுப்பினை ஏற்றிருக்கும் அவருக்கு என் இதயமார்ந்த நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.''

K. VEERASWAMI
Chief Justice

High Court Buildings
Madras-1
18—11—1971.

I was so sad to hear of the sudden demise at Banaras of the 25th Adhinakarthar Sri-La-Sri Subramaniya Paramacharya Desigar. I knew him personally and had the highest regards for his spritual eminence and administrative ability which

was clearly reflected in the upkeep of the several temples and general adjoined improvement. May His Holiness's sprit be an inspiration and guide to one and all.

மாண்புமிகு. ஆர். சதாசிவம்
உயர்நீதிமன்ற நடுவர்.

சென்னை-10.
17—11—71.

தருமபுர குருமகாசந்நிதானங்கள்

திருக்கயிலாய பரம்பரைத் திருத்தருமை ஆதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் நம்மிடையில் இல்லை என்று நினைக்கும்பொழுது, நினைவோ அன்றிக் கனவோ என்று தான் தோன்றுகிறது. 'நீரில் எழுத்தாகும் யாக்கை' – அதனால் சிற்றம்பலத்தில் வீற்றிருக்கும் கூத்தப்பெருமானை வழிபட வேண்டும் என்கிற நீதிநெறி விளக்கக் கருத்து மனத்தின்கண் தோன்றுகிறது. இப்பூவுலகில் மனிதப்பிறவி வேண்டுமென்றால், நடராஜப்பெருமானின் திருவடிகளைக் காணும் வாய்ப்புக் கிட்டுவதற்கே என்பது திருநாவுக்கரசரின் அருள்வாக்கு. காசி என வழங்கும் வாரணசியில் இறந்தவர்க்கு முக்தி கிடைக்கும் என்ற கருத்தில் ஆழ்ந்த நம்பிக்கையாலே 25 ஆவது குருமகா சந்நிதானம் நாளை வருகிற தன் ஜென்மநக்ஷத்திர தினத்தைக் காரணமாகக்காட்டி, நெருங்கிய அன்பர்களுடன் சென்ற புதன் கிழமை காலை காசியை அடைந்து, மாலையில் அந்தப் புனித பூமியில் முத்தி அடைந்தார்கள்.

காலம் சென்ற 25 ஆவது குருமகாசந்நிதானத்தை 25 ஆண்டுகளாக எனக்குத் தெரியும். அவர் வீற்றிருக்கும் காட்சியைப் பார்க்கும்பொழுது "அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே" என்கிற எண்ணம்தான் எனக்குத் தோன்றுவது. கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம் என்கிற பதங்கள் இந்த மடத்திற்கும், திருக்கயிலாயத்திற்கும் உள்ள தொடர்பைக் காண்பிக்கின்றது. 25 ஆவது மகாசந்நிதானம் 12 ஆண்டுகளுக்கு முன் கயிலாய யாத்திரை சென்று வந்தார்; அவர் 25 ஆண்டுகளுக்குமேல் தருமபுர ஆதீனத்தில் தவச்சக்ரவர்த்தியாக ஆற்றிய அருட்செயல்கள் பல. தருமை ஆதினத்திற்கு உட்பட்ட

27 கோயில்களும் 27 நக்ஷத்திரங்கள்போல் திகழ கும்பாபிஷேகங்கள் நடத்தி நல்ல முறையில் இருக்கிறதென்றால் அது அவரது ஆட்சித் திறமையையே புலனாக்குகின்றது. சைவ சமயக் கருத்துக்களைப் பரப்புவதற்கு அவர் மேற்கொண்ட பணிகள் பல. 'ஞானசம்பந்தம்' என்கிற திங்கள் இதழ்கள் மூலமும், குருபூஜை விழாக்கள் மலர்கள் மூலமும், குருமகாசந்நிதானம் அவர்கள் தன் திருவருள் சிந்தனைகளை வெளியிட்டு இருக்கிறார்கள். திருமுறை, சித்தாந்த நூல்களை நல்லமுறையில் அச்சிட்டு வெளியிடுவதை முக்கியமான பணியாக நடத்தி வந்தார்கள். தேவாரப் பாடல்கள் எந்த முறையில் பாடவேண்டும் என்பதற்கு திரு· தண்டபாணி தேசிகர் உதவியுடன் இசைத்தட்டுகள் தயாரித்து வெளியிட்டிருக்கிறார்கள். நான் வேலூர் ஜில்லா மாஜிஸ்டிரேட் பதவியிலிருக்கும்பொழுது அந்த இசைத் தட்டுகளை திருவண்ணமலைக் கோயிலுக்கு என் மூலம் அனுப்பினார்கள்.

சென்னை சமயப்பிரசார நிலையம் அவர்கள் ஆரம்பித்த ஸ்தாபனங்களில் முக்கியமானது. அதைத் திறமையாக நடத்தி வந்த அறிவும், ஆற்றலும், பண்பும், பக்தியும் வாய்ந்த ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் 26 ஆவது மகாசந்நிதானமாக வந்துள்ளார்கள் என்று நான் நேற்று கேட்டது மறைந்தவர்கள்பால் மனவருத்தத்தின் மத்தியில் மகிழ்ச்சியைத் தந்தது. வாழ்க்கையில் இன்பமும் துன்பமும் கலந்து வரும் என்பதைப் புகட்டும் நிகழ்ச்சி யாகத் தோன்றிற்று. ஆங்கிலேய ஆட்சியில் 'King dead longlive Mr. King'–அரசர் இறந்துவிட்டார் அரசர் நீடுழிவாழ்க என்ற அர்த்தம். தவச்சக்கரவர்த்தியாகிய 25 ஆவது மகாசந்நிதானம் மறைந்தார்கள்.

26 ஆவது மகாசந்நிதானம் தோன்றினார்கள். தருமையாதீன பரிபாலனம் தொடர்ந்து நடைபெற வேண்டும். கோயில்களும் மடங்களும் நமது சமுதாயத்திற்கு இரு கண்கள் போன்றவை. அவைகள் நாம் வையத்தில் வாழ்வாங்கு வாழத் துணைபுரிய வேண்டும்.

Dr. RATHINAVELU SUBRAMANIAM

Madras - 10.
17—11—71.

I have known the late 25th Guru Mahasannithanam Sri-La-Sri Subramania Desika Gnanasambanda Paramacharya Swamigal, for the last 6 or 7 years. I first came in contact with him at Chida-

mbaram during the Arudhra Festival after the Mahabishekam was over. From the time onwards I have been seeing him twice or thrice in the course of the year and I had the rare privilege of having been his physician and attend on him. He was extremely pious, well read and his very presence inspired pious atmosphere. It is only given to very few people to command respect by their very appearance. I have visited a number of temples under his control. Everyone of them was kept spotlessly clean - a tribute to his efficient management. I had the privilege of attending the Kumbabishekam of Tiruppanandal temple and Vaideeswarankoil temple, both performed under his direct control. In spite of the huge crowds in both the temples all the functions took place as per the schedule and in proper order without any confusion. Whenever I had the chance to meet him, I always looked forward to listening to his discourses on some aspect of religion. He spoke so well that on one occasion, the song that he recited got fixed in my mind without any further need for me to read that song. That shows how well he can impress in the minds of others. His attaining samathi is a personal loss to me in so far as I can not get his blessings for many of my undertakings. His blessings ensured cent per cent success. Apart from my personal loss, it is a loss to the community in particular and to the country as a whole, that such a pious religious leader had passed away immaturely. One great consolation is that he has trained his successor who will follow his footsteps very closely and maintain the high traditions that he has set up. I am sure Lord Nataraja in His kindness will bless all his followers and continue to guide them just as the Guru Mahasannithanam guided them when he was actively present in their midst.

கயிலைக் குருமணி அவர்கள்

திருமதி. சௌந்தரா கைலாசம்

காசிக்குப்போன தருமபுர ஆதீனத் தலைவர் அவர்கள் கலந்துவிட்டார்கள், இறைவன் திருவடிகளில் என்ற செய்தியைக் கேட்டதும் கண்கள் கலங்கிவிட்டன. எதிரே உள்ள காட்சி மறைந்து நெஞ்சமெனும் திரையிலே நினைவு பல காட்சிகளை ஒன்றன்பின் ஒன்ருகப்படர விடுகிறது. கயிலைக் குருமணி அவர்களின் கனிவான பார்வை தெரிகிறது. அவர்கள் வாழ்ந்த வாழ்க்கையிலே அழகு புரிகிறது. பெரியதொரு மடத்திற்கு அதிபதி - அளவிடமுடியாத பல வசதிகள் இருந்தும் அவற்றிலேயே காலமெல்லாம் மூழ்கிக்கிடந்து ஆற்றவேண்டிய கடமைகளை மறந்துவிடாமல் வழிவழியாக வந்துகொண்டிருக்கும் ஆதீனப் பெருமையைக் காத்து வளர்த்தார்கள் கயிலைக் குருமணி அவர்கள். அவர்களுடைய அருள் ஆட்சி 25 ஆண்டுகள் நடந்தது. கோயில்கள் எண்ணிறி இருபத்தேழு நட்சத்திரங்களைப் போல அவர்களுடைய ஆட்சியின்கீழ் இருந்தன. தரையைப் பார்த்தாலே சொல்லிவிடலாம் "இது தருமபுர ஆதீனத்தைச் சேர்ந்த கோயில்" என்று! அந்த அளவிற்குக் கோயில்களைத் தூய்மையாக வைத்திருக்க ஏற்பாடு செய்தவர்கள் நமதுகுருமணி அவர்கள். நல்ல முறையிலே கோயில்களைப்பேணி பக்திநெறி தழைத்தோங்க அரும்பாடுபட்டார்கள். குறுகிய அவர்தம் ஆட்சிக்காலத்திற்குள் பெருகின நன்மைகள் கோடி. கோயில்கள் இருபத்தேழும் குடமுழுக்காடின. பொறுப்பிலே உள்ள கோயில்கள் அனைத்தையும் பொலிவுறச் செய்தாயிற்று - என்ன வேலை - வந்தவேலை முடிந்தது - இனிப் போய்வரலாம் என்று புறப்பட்டு விட்டதோ புனித ஆவி?

வருவதும் பிரிவதும் உலக வழக்குத்தான் என்ருலும் இன்னதது இனியார்ப் பிரிவு - அறனறிந்து மூத்த அறிவுடையவர்களுடைய பிரிவு - அதிலும் நம்மிடம் மிகுந்த அன்பு காட்டியவர்களுடைய பிரிவு என்ருல் அது மிகுந்த துயரத்தைத் தருவதாக அமைகிறது. கயிலைக் குருமணி அவர்களைக் கண்டு பழகிய கண்கள் நிச்சயமாகப் பிரிவுச்செய்தியிலே நீரினைப் பொழியத்தான் செய்யும். அவ்வளவு இனியவர்கள்; அன்னையினும் பரிவு மிக்கவர்கள். கற்ரோரை மிகமிகப் பாராட்டும் பண்பு படைத்தவர்கள், கடமையைப் பெரிதாகக் கருதும் இயல்புள்ளவர்கள். ஆசையோடு, மன்ருடி, ஆண்டுகள் 25 ஆயினவே அருளாட்சி

துவங்கி, ஆகவே வெள்ளிவிழா நடத்தலாமே என்று சென்ற ஆண்டு அன்பர்கள் கேட்டபோது அறவே 'கூடாது' என்று சொல்லி விட்டார்கள். எதற்கு இதெல்லாம் என்று வெறும் பேச்சிற்காகச் சொல்லிவிட்டு எப்பொழுது, எப்படி, நடைபெறும் விழா என்று ஏங்கி ஏங்கிக் கனவு காணுமல் வினைவேறு சொல் வேறுபட்டுப்போகாமல், உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசாமல் உயர் வாழ்வு வாழ்ந்தார்கள் அவர்கள். இறைவனுடைய திருவுள்ளம் முன்கூட்டியே நன்ருகத் தெரிந்திருக்கும் போலிருக்கிறது. அதனுல்தான் ஆண்டுக்கொரு கோயிலுக்குக் குடமுழுக்கு என்று 27 ஆண்டுகட்குத் திட்டத்தை நீட்டாமல் 25 ஆண்டுகட்குள்ளாகவே அனைத்துக் கோயில்களுக்கும் குடமுழுக்கு ஏற்பாடு செய்திருக்கிருர்கள். செய்வதற்கரிய பலவற்றைச்செய்துவிட்டு, பெய்வதற்கரிய அருள்மழையைப் பெய்துவிட்டு, கயிலைக்குருமணி அவர்கள் காசியிலேபோய் பெறுவதற்கரிய பெரும் பதவியைப்பெற்றுவிட்டார்கள். இப்படி ஒரு முடிவு வாராதா என்று காசியிலே குடியேறிக் காத்து கிடப்பவர்கள் எத்தனையோபேர். காரணம் திருவாரூரிலே பிறக்க முக்தி, தில்லையைக் கண்டு தொழ முக்தி, திருஅருணையை நினைக்க முக்தி, காசியிலே இறக்கமுக்தி என்பார்கள். காசியிலே சென்று அடங்கிய அப்புனித ஆவியின் ஆசியாலே வளருகின்ற நாம் அவர்களுக்கு நமதுமனமார்ந்த அஞ்சலியைச் செலுத்துவோமாக.

நாதன் தாள் வாழ்க!

வணங்குவோமே !

அருளுலகக் குருமணியை, தருமை என்னும்
ஆதீனத் தவமணியை, அல்ல லுற்ற
இருளுலகைக் கரையேற்ற எழுந்து வந்த
இணையற்ற ஒளிக்கடலை, இறைவன் மீது
பொருளுலகின் பார்வையதும் எண்ணப் போக்கும்
பொருந்திவரச் செய்துநின்ற புண்ணி யத்தை
மருளுமனம் தெளிவித்த மாணிக் கத்தை
வாழ்வுதந்த செழுமையினை வணங்கு வோமே.

வாழ்க ! வாழ்க !!

குருமணிக் கேற்ற சீடர் குலமணி யாக நாளும்
அருளிலே தோய்ந்து, பக்தி ஆற்றினைப் பெருக விட்டு
மருளிலே கிடந்தார் எல்லாம் மாற்றியே பிறப்பெடுக்க
இருளிலே சோம ஞக எழுந்தசுந் தரரே வாழ்க !

செய்திகள்

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்களின்

குருபூஜை விழா

முத்தித்தலமாகிய காசியில் 10—11—71 புதன்கிழமை காளாஷ்டமி தினத்தில் பரிபூரணம் அடைந்து தருமையில் 12—11—71 அன்று சிவசமாதியில் எழுந்தருளுவிக்கப் பெற்ற ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்களின் குருமூர்த்தத்திற்குத் தருமையாதீனம் 26-வது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் நாடோறும் காலை மாலை இருவேளைகளிலும் அடியவர் குழாங்களோடு எழுந்தருளி அபிஷேக ஆராதனைகள் செய்வித்துச் சிறப்பு வழிபாடு நிகழ்த்தியருளினார்கள்.

பத்து நாட்களிலும் ஏராளமான பக்தர்கள் குருமூர்த்தத்திற்கு வந்திருந்து மலர்மாலை அணிவித்து வழிபட்டு ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தைத் தரிசித்து அருளாசி பெற்றுச் சென்ற வண்ணமிருந்தனர்.

திருமடங்களின் தலைவர்கள் :

குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம், திருப்பனந்தாள் காசிமடம் ஸ்ரீலஸ்ரீ அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள், காஞ்சிபுரம் தொண்டைமண்டல ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம், மயிலம் ஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள் திருமடத்தின் தலைவர், கௌமாரமடம் ஸ்ரீமத் சுந்தர சுவாமிகள், பேரூர் ஸ்ரீ சாந்தலிங்க அடிகளார் திருமடத்தின் தலைவர் ஸ்ரீமத் இராமசாமி அடிகள், புதுவை ஸ்ரீ அம்பலத்தாடி மடம் சுவாமிகள், வேளாகுரிச்சி ஆதீனகர்த்தர் முதலியோர் வந்திருந்து வழிபாடாற்றினர்.

ஆதீனப்பணியாளர்கள் :

தருமையாதீனத் திருமடம் தேவஸ்தானம் அலுவலர்கள் பணியாளர்கள், குடிமக்கள் மெய்யன்பர்கள் அனைவரும்

நாடோறும் குருமூர்த்தத்திற்கு வந்து அபிஷேகஆராதனைகளைக் கண்டு தரிசித்து நல்லாசி பெற்றனர். தருமையாதீனக் கல்வி நிலையங்களின் ஆசிரியர்களும், மாணவர்களும் ஊர்வலமாகச் சென்று கயிலைக் குருமணி அவர்கள் குருமூர்த்தத்திற்கு மலர் மாலைகள் அணிவித்து வழிபாடாற்றினர். ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் ஆதீனத்திருமடம் தேவஸ்தானங்கள் பணியாளர்கள் அன்பர்கள் முதலியோர்க்குக் குருவழிபாடு முடித்துப் பட்டாடைகள் வழங்கி ஆசிவழங்கினர்கள்.

குருபூசைத் திருநாள் :

19—11—71 வெள்ளிக்கிழமை குருபூசை விழா. தருமைத் திருமடம் விழாக்கோலம் பூண்டது. வீதிகள் தூய்மை செய்யப் பெற்று தோரணங்களால் அழகுறுத்தப் பெற்றன. குருமூர்த்தம் கண்ணையும் கருத்தையும் கவரும் வகையில் வண்ண மின் விளக்குகளால் வனப்புறுத்தப் பெற்றிருந்தது. கீற்றுக்காவணம் மிகப் பெரிதாகப்போடப் பெற்று பல்லாயிரவர் வந்து வழிபடும் வகையில் வசதிகள் செய்யப் பெற்றிருந்தது. 18—11—71 மாலையிலிருந்தே தமிழகத்தின் பல்பகுதிகளிலிருந்தும் அன்பர்கள் வரத்தொடங்கினர்.

குன்றக்குடி ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் :

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்களிடம் அளவற்ற பக்தி கொண்டவர்கள் குன்றக்குடி ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள். குருமணி அவர்களின் குருபூசை விழாவிற்கு முதல்நாள் மாலையே தருமை வந்து சகல காரியங்களையும் கண்காணித்து விழா சிறப்புறநிகழ முன்னின்றருளினர்கள். ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களைச் சிறப்பாசிரியராகக் கொண்டு வெளிவரும் 'தமிழகம்' இதழை, கயிலைக் குருமணி நினைவு மலராக வெளியிட்டு அன்பர்கள் பலர்க்கும் வழங்கியருளினர்கள்.

குருபூசைத் திருநாள் :

காலை 7 மணிக்கு சொக்கநாதப் பெருமானுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் நிகழ்ந்தன. ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழிபாடு நிகழ்த்தி ஞானபுரீஸ்வரர் திருக்கோயில், தருமபுரீசுரர் திருக்கோயில், ஸ்ரீ மகாலக்ஷ்மி துர்க்காதேவி திருக்கோயில் வழிபாடுகள் செய்து பண்டாரக் கட்டிற்குஎழுந்தருளினர்கள். ஆதீனதேவஸ்தானங்களிலிருந்தும்

மற்றும் பல திருக்கோயில்களிலிருந்தும் பிரசாதங்கள் பார்க்கப் பெற்றன. பெருமக்கள் பலர் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களைத் தரிசித்து அருளாசிபெற்றனர்.

குருமூர்த்த வழிபாடு :

காலை 9 மணிக்கு ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் குன்றக்குடி ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம், காஞ்சிபுரம் தொண்டை மண்டல ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம், காசிமடம் இளவரசு வித்துவான். ஸ்ரீமத் முத்துக்குமாரசாமித் தம்பிரான் சுவாமிகள் முதலியோர் உடன்வர அடியார்கள் புடைசூழ மேள வாத்தியங்களுடன் குருமூர்த்த வழிபாட்டிற்கு எழுந்தருளினுர்கள். குருமூர்த்தத்தில் அன்பர்கள் பல்லாயிரவர் நிறைந்திருந்தனர். கயிலைக் குருமணி அவர்கள் சமாதி கூடிய இடத்தில் சிவலிங்கப் பிரதிஷ்டை செய்யப் பெற்றிருந்தது. விசேஷ அபிஷேகங்கள் நிகழ்ந்தன. பொன்னுடைகள் மலர் மாலைகள் திருவாபரணங்கள் சார்த்தி அலங்காரங்கள் செய்விக்கப்பெற்று தீபாராதனைகள் நிகழ்த்தினுர்கள் அடியார்கள் அகமுருகிக் குருவழிபாடு செய்தனர். ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் குருபக்தி எவ்வாறு செய்ய வேண்டுமென்பதை அடியார்கள் அனைவருக்கும் விளக்கும் வகையில் வழிபாடுகள் செய்தார்கள். அன்பர்களுக்குத் திருநீறளித்து ஆசி வழங்கினுர்கள்.

நினைவு மலர் :

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்களின் அருள்வரலாறு ஆதீனப்பணிகள், அற்புதநிகழ்ச்சிகள் குண நலன்கள் முதலியனவும் அன்பர்களின் அஞ்சலிக்கட்டுரைகள்கடிதங்களில் சிலவற்றையும் தொகுத்து சுருங்கிய நாளில் குருமணி அவர்களின் நினைவு மலர் ஒன்று தயாரிக்கப்பெற்றிருந்தது. அம்மலரை ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் குருமூர்த்தத்தில் வைத்துக் குருமணிக்குக் காணிக்கையாக்கினுர்கள்.

குன்றக்குடி ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் நினைவு மலரை வெளியிட்டு அன்பர்களுக்கு வழங்கினுர்கள்.

பக்தர்கள் பணிவுரை :

குருவழிபாடு முடிந்தபின் அன்பர்களின் மிக உருக்கமான அஞ்சலியுரை நிகழ்ச்சி நடந்தது. குருமணி அவர்களிடம் பக்தி

நலங்கனிந்த சிதம்பரம் அறப்பணிச்செல்வர் டாக்டர். திரு. கே. அரங்கசாமிப் பிள்ளை வரவேற்புரை கூறினர். உள்ளங் கரைய உடல் கரைய கயிலைக் குருமணி அவர்களின் சிறப்பியல்பு களை விரித்துரைத்துக் குன்றக்குடி ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் இந்நிகழ்ச்சியைத் தொடங்கியருளினர்கள். [தொண்டை மண்டல ஆதினம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் காசிமடம் இளவரசு ஸ்ரீமத் சுவாமிகள். சிதம்பரம் திரு. R. கனகசபைப்பிள்ளை, சட்டமன்ற உறுப்பினர் திரு. பொன். சொக்கலிங்கம், மகா வித்துவான். திரு. ச. தண்டபாணிதேசிகர், டாக்டர் திரு. நடராஜன், காட்டூர் திரு. K V. இராமையா முதலியார், சென்னை D. I. G. திரு. பரமகுரு, கலைமகள் ஆசிரியர் திரு. கி. வா. ஜகந்நாதன், திரு. ப. வடிவேல் பிள்ளை, திரைப்பட இயக்குநர். திரு. கே. எஸ். கோபாலகிருஷ்ணன், அறநிலைய உதவி ஆணையர் திரு. கோதண்டபாணி, திரு. அ. வெ. ரா. கிருஷ்ணசாமி ரெட்டியார், மகாவித்துவான். திரு. சி. அருணை வடிவேலு முதலியார், திரு. கீ. இராமலிங்க முதலியார், திருக் கோயில் ஆசிரியர், திரு. ந. ரா. முருகவேள், திருக்குறள்வேள் திரு. G. வரதராஜபிள்ளை முதலியோர் முறையே அஞ்சலியுரை கள் நிகழ்த்தினர்கள். ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் குருபக்தியின் சிறப்பைச் சொல்லால் செயலால் உரையாற்றி வெளிப்படுத்தி அனைவர்க்கும் அருளாசி வழங்கினர்கள். பின்னர் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் குருமூர்த்தங்களை முறையே வழிபட்டுத் திருமடத்துக்கு எழுந்தருளினர்கள்.

மாகேசுரபூசை :

நண்பகல் மாகேசுர பூசை நடைபெற்றது. அடியார்கள் பல்லாயிரவர்க்குத் திருவமுது அளிக்கப்பெற்றது. மகாசந்நி தானம் அவர்கள் அடியார்கள் பூடைசூழ இருந்து திருவமுது கொண்டருளினர்கள்.

குருபக்தி விரிவுரை :

மாலை 6 மணி. ஆதீன திருநெறிய தெய்வத் தமிழ்மன்றம் மக்கள் வெள்ளத்தால் நிரம்பியது. அமுதமொழிக் கொண்டல், திருமுருக கிருபானந்தவாரியார் அவர்களின் விரிவுரை நடை பெற்றது. குருபக்தியின் சிறப்பினை வாரியார் அவர்கள் அழகுற எடுத்து விளக்கி விரித்துப் பேசி யின்புறுத்தினர்கள்.

பட்டணப்பிரவேசம் :

இரவு 10 மணிக்கு ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களின் பட்டணப்பிரவேச நிகழ்ச்சி. இருபதுக்கு மேற்பட்ட நாதசுரம்

கிளாரினெட் குழுவினர்களுடன் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் பட்டணப்பிரவேசம் எழுந்தருளினர்கள். ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களைச் சிவிகையில் இருத்தி வழிபாடு செய்த பின் சிவிகை புறப்பட்டது. அன்பர்களுக்கு மலர் மாலைகள் அணிவித்து மகாசந்நிதானம் அவர்கள் சிறப்புச் செய்தருளினர்கள். தருமைத் திருநகரின் நான்கு வீதிகளிலும் பூரணகும்ப மரியாதைகள் செய்விக்கப்பெற்றன. வாண வேடிக்கைகள் நிகழ்ந்தன.

கொலுக்காட்சி :

இரவு 3 மணி அளவில் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களைக் கொலுவில் எழுந்தருளச் செய்து அடியார்கள் வழிபடும் நிகழ்ச்சி நடைபெற்றது. திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் இளவரசு சுவாமிகள் கொலுவழிபாட்டைச் செய்தருளினர்கள். அன்பர்கள் வழிபாடுகள் செய்து காணிக்கைகள் செலுத்தி அருளாசி பெற்று மகிழ்ந்தனர்,

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின்
வேளூர் விஜயம்

தருமையாதீனத் திருக்கோயில்களில் தலைமைத் திருக்கோயில் வேளூர் ஸ்ரீ வைத்தியநாத சுவாமி தேவஸ்தானம். இங்கு எழுந்தருளியுள்ள ஸ்ரீ செல்வமுத்துக்குமாரர் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கட்கு அன்புத் தெய்வமாய் விளங்கிய பெருமான். எனவே முதன்முறையாக ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் வேளூர்த் தரிசனத்திற்கு எழுந்தருளுவதென்று திருவுளம் பற்றினர்கள்.

28—11—71 ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு வேளூருக்கு எழுந்தருளினர்கள். வேளூர் நகர எல்லையில் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களைப் பூரணகும்ப மரியாதைகளுடன் வேளூர் கட்டளை விசாரணை வித்துவான், ஸ்ரீமத் இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள் வரவேற்றார்கள்.

வரவேற்பு :

ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களை வெள்ளி நாற்காலி சவாரியில் எழுந்தருளச்செய்து நகர் எல்லையிலிருந்து விசேஷ மேளவாத்தியங்களுடன் அன்பர்கள் அழைத்துச் சென்றனர்.

நான்கு வீதிகளிலும் வரவேற்பு வளைவுத் தட்டிகள் தோரணங்கள் முதலியன கட்டி பொதுமக்கள் மகாசந்நிதானம் அவர்களை வரவேற்றார்கள்.

தேவஸ்தான அலுவலர்கள், பஞ்சாயத்து யூனியன் ஊழியர்கள் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களைப் பூரணகும்ப மரியாதைகள் செய்து வரவேற்றனர். திருவீதிவலமாக ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் கட்டளை மடத்துக்கு எழுந்தருளினார்கள்.

கொலுக்காட்சி :

கட்டளை மடத்தில் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களை வேளூர் கட்டளை விசாரணை வித்துவான், ஸ்ரீமத் இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள் அலங்கரிக்கப்பெற்ற கொலுபீடத்தில் எழுந்தருளச்செய்து தீபாராதனைகள் செய்து வழிபட்டார்கள். அன்பர்கள் பலரும் கொலுவழிபாட்டில் கலந்துகொண்டு வணங்கித் திருநீறு பெற்று மகிழ்ந்தனர்.

திருக்கோயில் வழிபாடு :

காலை 10 மணிக்கு ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் திருக்கோயிலுக்கு எழுந்தருளினார்கள். கற்பக விநாயகர் முதலாக எல்லா மூர்த்திகளையும் முறையே தரிசித்து விசேஷ வழிபாடுகள் செய்தார்கள். புள்ளிருக்குவேளூர்த் தோத்திரத்திரட்டு என்ற தரிசன விழா மலரை ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் ஸ்ரீ செல்வமுத்துக்குமாரர் திருவடிகளில் சார்த்தி அன்பர்கட்கு வழங்கியருளினார்கள்.

அபிஷேக ஆராதனை :

ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் அருளாணைப்படி ஸ்ரீவைத்தியநாதர் ஸ்ரீதையல்நாயகி மற்றும் எல்லா மூர்த்திகட்கும் விசேஷ அபிஷேகங்கள் நிகழ்த்தப்பெற்றன. பஞ்சமுகார்ச்சனை, நவசக்தி அர்ச்சனைகள், சண்முகார்ச்சனைகள் நடைபெற்றன. வழிபாட்டில் அன்பர்கள் பலர் கலந்துகொண்டனர்.

மாகேஸ்வர பூஜை :

நண்பகல் அடியார்களுக்கு மாகேசுர பூசை நடைபெற்றது. வேளூர்க் குடிமக்களுக்கு அன்னதானம் நடைபெற்றது. ஏழைகளுக்கு உணவு அளிக்கப்பட்டது.

வரவேற்புப் பொதுக்கூட்டம் :

மாலை 6 மணிக்கு ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் திருக் கோயில் வழிபாட்டிற்கு எழுந்தருளினர்கள். வழிபாடு சிறப்புற நிகழ்ந்ததும் அன்பர்களுக்கு பிரசாதப் பைகள் வழங்கப் பெற்றன. 7 மணிக்கு ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் வரவேற்பு மேடைக்கு எழுந்தருளினர்கள்.

யாகசாலைக்கு எதிரில் அமைத்துள்ள பிரசார மண்டபத்தில் மேடை அமைக்கப்பட்டிருந்தது. அன்பர்கள் பல்லாயிரவர் திரண்டிருந்தனர். மகாசந்நிதானம் அவர்கள் மேடைக்கு எழுந் தருளியதும் சீகாழி திரு. S. திருஞானசம்பந்தம் கடவுள் வாழ்த்துப் பாடினர். சிதம்பரம் டாக்டர் திரு. கே. அரங்கசாமிப் பிள்ளை அவர்கள் பணிவஞ்சலி உரை நிகழ்த்தினர். சிதம்பரம் சட்ட மன்ற உறுப்பினர் திரு. பொன். சொக்கலிங்கம் அவர்கள் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களுக்கு வரவேற்புரை கூறினர்.

வேளூர் தேவஸ்தானம் கட்டளை விசாரணை வித்துவான் ஸ்ரீமத் இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள் வரவேற் புரை நிகழ்த்தி ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களுக்கு வரவேற்பு நன்மலர் ஒன்றைப் படித்தளித்தார்கள். வேளூர் ஸ்ரீ தையல் நாயகி அன்பில்லத்தின் மாணவர்கள் மழலைச் சொல்மலர் ஒன்றினைப்படித்து மகாசந்நிதானம் அவர்களை வணங்கினர்.

வேளூர்ப் பொதுமக்கள் சார்பில் பஞ்சாயத்து யூனியன் தலைவர் அவர்கள் மகாசந்நிதானம் அவர்கட்கு வரவேற்பிதழ் படித்தளித்து ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் திருவுருவம் அமைந்த வெள்ளிக்கோபுரம் ஒன்றை வழங்கி ஏலக்காய் மாலை அணிவித்தார்.

வேளூர் திரு சீனுவாசரெட்டியார் அவர்கள் மகாசந்நிதானம் அவர்கட்குப் பொன்னுடை போர்த்தி மலர்மாலை அணிவித்தார்.

புங்கனூர் முஸ்லிம்கள் வரவேற்பிதழ் படித்தளித்து மலர் மாலை சூட்டி 5½ அடி உயரம் உள்ள வெள்ளிச் செங்கோல் ஒன்றைப் பரிசாக வழங்கி வரவேற்றனர். முஸ்லிம்கள் பலர் மகாசந்நிதானம் அவர்களை வாழ்த்தி மலர் மாலை சூட்டிப் பாராட்டினர்.

வேளூர் தேவஸ்தானம் சிவாசாரியர்கள் வாழ்த்திப் பொன்னுடை அணிவித்து மலர் மாலை சூட்டி வரவேற்றனர். வேளூர் வர்த்தக சங்கம், கூட்டுறவு விவசாய பாங்க், கூட்டுறவு பால்வழங்கும் சங்கங்கள் சார்பில் வரவேற்பிதழ் படித்தளித்து மலர் மாலைகள் அணிவிக்கப்பெற்றன.

வேளூர் திரு. மு. முருகையாதேசிகர் பாமாலை பாடி வரவேற்பிதழ் படித்தளித்தார். வேளூர் விவசாயிகள் சார்பாக வாழ்த்துக்களும் மலர் மாலைகளும், பழங்களும் அளிக்கப்பெற்றன.

வேளூர் அரசினர் உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்கள் சார்பில் தலைமையாசிரியர் வரவேற்பிதழ் படித்தளித்து மலர் மாலை சூட்டினார். வேளூர்த் தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் சார்பில் தலைமையாசிரியர் வரவேற்பிதழ் வழங்கினார்.

கன்னியாகுடி கார்காத்தார் சங்கத்தினர் வேலைப்பாடுகளுடன் வெள்ளிச் சட்டம் வேய்ந்த அழகிய வரவேற்பிதழைப் படித்தளித்து மாலைகள் அணிவித்து பொன்னாடை போர்த்திப் பாராட்டினர்.

கன்னியாகுடி பஞ்சாயத்து சபையினர் வரவேற்பிதழ் படித்து மலர்மாலை சூட்டினர். கற்கோவில், தொழுதூர்ப் பொதுமக்கள் மலர்மாலைகள் சூட்டி வரவேற்பிதழ் அளித்தனர். கதிராமங்கலம், மருவத்தூர், எடக்குடி, வடபாதி, விளக்குமூக்கு காலனி, நெய்க்குப்பை விவசாயிகள் முதலியோர் வரவேற்பிதழ்களும், பழங்களும், மலர்மாலைகளும் அளித்து வாழ்த்தி வரவேற்றனர்.

சீகாழி தி. மு. க. மாவட்ட பிரதிநிதி திரு. வேலு அவர்கள் மலர் மாலை சூட்டி வரவேற்றார்.

ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் எல்லோர்க்கும் அருளாசி வழங்கினார்கள். அன்பர்கள் பலர்க்கும் பொன்னாடைகளும், பட்டாடைகளும் அணிவித்துச் சிறப்பித்தார்கள்.

புழுகுகாப்பு தரிசனம் :

ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் அன்பர்களுடன் திருக்கோயில் சென்று ஸ்ரீ செல்வமுத்துக்குமாரப்பெருமானுக்கு நடைபெறும் புழுகுகாப்பு தரிசனம் செய்து பிரசாதங்கள் வழங்கியருளி அன்பர்களுடன் கட்டளை மடத்திற்கு எழுந்தருளினார்கள்.

வேளூர் தேவஸ்தானப் பணியாளர்களுக்குப் புத்தாடைகள் வழங்கி ஆசிகூறி இரவு 10 மணிக்குத் தருமைக்கு எழுந்தருளினார்கள்.

தருமை துறைசை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானங்களின்

திருக்கடவூர்ச் சோமவார தரிசனம்

29—11—71 திங்கட்கிழமை தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானம் அவர்கள் திருக்கடவூர்ச் சோமவார தரிசனத்துக்கு எழுந்தருளுவதாக திருவுளம் பற்றினர்கள். திருக்கடவூர் பிச்சைக் கட்டளை திரு. கை. கனகசபைப் பிள்ளை அவர்கள் தருமைக்கு வந்து ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களைத் தரிசித்து திருக் கடவூர்த் தரிசனத்துக்கு எழுந்தருளவேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்கள்.

மாலை 4 மணிக்கு திருவாவடுதுறை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானம் அவர்கள் தருமைக்கு எழுந்தருளி தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களுக்குப் பொன்னுடை போர்த்தி மகிழ்ந்தார்கள். தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களும் துறைசையாதீனம் மகாசந்நிதானம் அவர்கட்குப் பொன்னுடை போர்த்தினர்கள். மாலை 6 மணிக்கு திருக்கடவூர்த் தரிசனத்திற்கு இரு குருமணிகளும் எழுந்தருளினர்கள். கடவூர் எல்லையில் பூர்ணகும்ப மரியாதைகள் செய்து வரவேற்பளிக்கப் பட்டது. திருக்கோயில் கோபுரவாயிலில் பிச்சைக்கட்டளை திரு. கனகசபைப் பிள்ளை அவர்கள் இரு குருமகாசந்நி தானங்களையும் பொன்னுடைகள் போர்த்தி மாலைகள் அணிவித்து வணங்கி வரவேற்றார்கள். காலசம்ஹாரமூர்த்தி சந்நிதியில் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானங்கள் பிள்ளை அவர்களுக்கு பொன்னுடை கள் அணிவித்து ஆசி கூறினர்கள். ஸ்ரீ காலசம்ஹாரமூர்த்தி சந்நிதியில் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானங்களுக்குப் பொன்னுடைகள் போர்த்திக் கோயில் மரியாதைகள் செய்யப்பெற்றன.

திருக்கோயிலில் ஸ்ரீ அமிர்தகடேசுவரர்க்கு 1008 சங்காபி ஷேகம் மிகச்சிறப்பாக நடைபெற்றது. ஸ்ரீலஸ்ரீ மகாசந்நி தானங்கள் வழிபாடுகள் முடித்துக்கொண்டு தருமைக்கு எழுந் தருளினர்கள்.

6—12—71 திங்கட்கிழமை சோமவார தரிசனத்துக்கு ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளினர்கள். திருப்பனந்தாள் காசிமடம் இளவரசு வித்துவான், ஸ்ரீமத். முத்துக்குமாரசாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்களும், ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களுடன் வந்திருந்து வழிபட்டார்கள். 13—12—71 திங்கட் கிழமை ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் சோமவார தரிசனத் துக்கு எழுந்தருளி வழிபட்டார்கள்.

எதிர்காலம்

ஜோதிஷார்ணவம்

திரு. K. முத்துஜோதிடர்

(விரோதிகிருதுஸ்ரீ மார்கழிமீ 1உ முதல் 30உ முடிய)

(16—12—71 முதல் 1—14—72 முடிய)

விரோதிகிருதுஸ்ரீ மார்கழிமீ 1உ வியாழக்கிழமை கிருஷ்ண சதுர்தசியும் அனுஷ நக்ஷத்திரமும் பத்ர வாகரணத்திலும் உதயாதி பகல் நாழிகை 11 விடி 25க்கு தனுர்ராசியில் லோக ரக்ஷகரான ஸ்ரீ சூரியபகவான் சாபரவி பிரவேசத்தை கும்ப லக்கினத்தில் பகல்வேளையில் பிரவேசம் செய்வதால் அதிகமான கலகத்தையும் அமைதிக் குறைவையும் கொடுக்கும். ஆனல் தக்ஷிண பாரதமும் தர்ம பூமிகளும் சாந்தமடையும். மற்ற தான்யாதி விருத்திகள் விசேஷமாகும். சில இடங்களில் பயிர்களுக்கு வியாதிபயம் ஏற்படும். கண்டம் கண்டமாய் மழை பொழியும்.

1. மேஷம் – அசுவதி – பரணி – கார்த்திகை ¼

மேஷராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனைத்தரும். விவசாய காரியங்களில் தவக்கமும், பரிஜனங்களால் அநேகவிதமான ஈதிபாதைகளும் உண்டாகும். ஆரோக்கியக் குறைவு காட்டும். எப்பொழுதும் கவலைகளையே கொடுத்துக்கொண்டு இருக்கும். வரவு செலவு சமமாக இருக்கும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

2. ரிஷபம் – கார்த்திகை ¾ – ரோஹிணி – மிருகசீர்ஷம் ½

ரிஷபராசி 9 பாதங்களும் மிச்சிரமான பலனைத்தரும். அடிக்கடி சஞ்சாரம் இருந்துகொண்டு இருக்கும். எதிர்பாராதபடி நஷ்டம் வந்துசேரும். கீர்த்திபங்கம் உண்டுபண்ணும். சகல காரியங்களும் தவக்கத்தோடு நடக்கும்.

3. மிதுனம் – மிருகசீர்ஷம் ½ – திருவாதிரை – புனர்பூசம் ¾

மிதுனராசி 9 பாதங்களும் பூர்ணமாக சுபபலனைத்தரும். தூரதேசத்திலிருந்து அழைப்புப்பத்திரம் வரும். ஸ்திரமான ஜீவனம் ஏற்படும். நஷ்டமான பொருள்கள் வந்துசேரும். படிப்பு விருத்தியாகும். சகோதரர்களால் நன்மை உண்டாகும். திங்கள், செவ்வாய் சுபமாகும்.

4. கடகம் – புனர்பூசம் ¼ – பூசம் – ஆயில்யம்.

கடகராசி 9 பாதங்களும் பூர்ணமாக சுபமான பலனைத்தரும். புதிதான ஜீவன லாபமும், நஷ்டமான தனம் வந்துசேருதலும், மேலோர் பெரியோர்களின் அன்பும் கிடைக்கும். வெகுகால மாக தீராத வியாதி தீரும். தெய்வீகத்தன்மை உண்டாகும். கீர்த்திபத்திரம் கிடைக்கும். புதன், வியாழன் சுபமாகும்.

5. சிம்மம் – மகம் – பூரம் – உத்திரம் ¼.

சிம்மராசி 9 பாதங்களும் சுமாரான பலனைத்தரும். ஜீவனம் ஓங்கும். குடும்பம் விருத்தியாகும். உத்தியோகத்தில் உயர்பதவி கிடைக்கும். தூரதேசத்திலிருந்து அழைப்புத்பத்திரம் வந்து சேரும். மேலோர் பெரியோர்களின் அன்பினால் சகலமும் சாத்தியமாகும். வெள்ளி, சனி சுபமாகும்.

6. கன்னி – உத்திரம் ¾ – ஹஸ்தம் – சித்திரை ½.

கன்னியாராசி 9 பாதங்களும் பூர்ணமாக சுபமான பலனைத் தரும். எப்பொழுதும் சஞ்சாரமும், அதிகமானபொறுப்பும், புத்தி ராதிகளால் நன்மையும் உண்டாகும். ஸ்தாவர ஜங்கம சொத்துக்கள் சேரும். கீர்த்திபத்திரம் கிடைக்கும். ஞாயிறு, திங்கள் சுபமாகும்.

7. துலாம் – சித்திரை ½ – சுவாதி – விசாகம் ¾

துலாராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். புதிதான முறையில் தொழில் உண்டாகும். தெய்விகமான காரியங்கள் அதிகமாகி எல்லாக் காரியங்களும் சாத்தியமாகும். புதிதான பிரபுவின் தெரிசனமும் உண்டாகும். ஸ்தாவர ஜங்கம சொத்துக்கள் சேரும். செவ்வாய், புதன் சுபமாகும்.

8. விருச்சிகம் – விசாகம் $\frac{1}{4}$ – அனுஷம் – கேட்டை.

விருச்சிகராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனைத்தரும். இருப்பிடம் மாறுதல் அடையும். வரவு செலவு சமமாக இருந்து கொண்டு இருக்கும். ஆரோக்யக்குறைவு காட்டும். சகல காரியங்களும் தவக்கத்தோடு நடக்கும். பிறகு நன்மை தரும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

9. தனுசு – மூலம் – பூராடம் – உத்திராடம் $\frac{1}{4}$.

தனுர்ராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனைத்தரும். அடிக்கடி தொழில் மாறிக்கொண்டு இருக்கும். குடும்பத்தொல்லை அதிகமாகும். வரவிற்கு முற்பட்ட செலவு உண்டாகும். சதா மனம் கவலையாகவே இருக்கும். தெய்வபலத்தால் சகலமும் நன்மையாகும். சனி, ஞாயிறு சுபமாகும்.

10. மகரம்–உத்திராடம் $\frac{3}{4}$ – திருவோணம் – அவிட்டம் $\frac{1}{2}$

மகரராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். உத்தி யோகத்தில் மேல்பதவி உண்டாகும். நஷ்டமான பொருள் வந்து சேரும். வஸ்திராபரணச் சேர்க்கையும், கிரயவிக்கிரயங் களும் தாமதமாகவே நடந்து நன்மைதரும். திங்கள், செவ்வாய் சுபமாகும்.

11. கும்பம் – அவிட்டம் $\frac{1}{2}$ – சதயம் – பூரட்டாதி $\frac{3}{4}$,

கும்பராசி 9 பாதங்களும் பூர்ணமாக சுப பலனைத்தரும். ஆரோக்யம் உண்டுபண்ணும். புதிதாக தெய்விக காரியங்களில் சம்பந்தப்பட்டு அசாத்தியமெல்லாம் சுலபசாத்தியமாகும். படிப்பு விருத்தியும், ஜீவன விருத்தியும் ஏற்படும். தனதான்ய விருத்தி ஏற்படும். குடும்பம் ஓங்கும். புதன், வியாழன் சுப மாகும்.

12. மீனம் – பூரட்டாதி $\frac{1}{4}$ – உத்திரட்டாதி – ரேவதி.

மீனராசி 9 பாதங்களும் பூர்ணமாக சுபத்தையே தரும். உத்தியோகம் விருத்தியாகும். ஆரோக்யம் உண்டுபண்ணும். புத்திராதிகளால் நன்மை உண்டாகும். உலக பிரசித்தியைத் தரும். தெய்வபலம் ஓங்கும். அசாத்தியமெல்லாம் சுலப சாத் தியமாகும். வெள்ளி, சனி சுபமாகும்.

குறிப்பு :— ஷ பிரவேச லக்கினம் கும்பமாகி கும்பத்துக்கு இருபுறமும் செய்வாயும் இராகுவும் அமைந்தும். செவ்வாய் சேனாபதித்வம் வம்வகித்து குருவீட்டில் குருவால் பார்க்கப்பட்டதால் தெய்விகபலம் முன்நின்று உலகில் ஏற்பட்டிருக்கும் யுத்த பயத்தை சாந்தி அடையச்செய்து பிரஜைகளிடம் அமைதியையும் உண்டுபண்ணும். உலகில் துர்பிக்ஷம் குறைந்து, விலைவாசிகளும் குறைந்து சுபிக்ஷமடையும். துஷ்டநிக்கிரக சாது ரக்ஷணம் ஏற்படும்.

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Vaithianathaswami Devasthanam, Vaithiswarankoil

இன்று சென்னைத் தியாகராயநகர்த் தருமையாதீன சமயப் பிரசார நிலையத்தின் புலவர் வகுப்புப் பழைய மாணவர் கழகத்தினரோம், ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்களைத் தரிசித்து மகிழும் பேறுபெற்றோம். கட்டளை விசாரணைத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள், அனைவருக்கும் தாயினும் சாலப்பரிந்து, மிகவும் நல்ல முறையில் ஆலய தரிசனம் செய்வித்துத் தண்ணளிகள் புரிந்ததுடன், அன்பர்கள் அனைவருக்கும் சிற்றுண்டிகளும் அளித்து மிகவும் உபசரித்தார்கள். ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களின் திருவருள், இங்கனமெல்லாம் எங்களை ஆட்கொண்ட கருணைத்திறனை நினைந்து, நாங்களெல்லாம் எல்லையில்லாத மகிழ்வும் விம்மிதமும் அடைந்தோம். நன்றி, வணக்கம்.

புலவர் மாணவர்கழக உறுப்பினர்கள் சார்பில்

(ஒம்) ந. ரா. முருகவேள்

5—12—71.

திருவருள் அழைக்கிறது

திரு. அ. கல்யாணசுந்தர தேசிகர்

திருவருள் அழைப்பு :

பல ஆண்டுகளாகக் கந்தசஷ்டி நாட்களில் செந்திற்பதியிற் சென்று தங்கி விரதமிருந்து செந்தில்நாதனைக் காலையிலும் மாலையிலும் வழிபட்டு வரும் நியமமுடையவர்கள் நம் கயிலைக் குருமணி அவர்கள். இவ்வாண்டு அவ்விதமாகத் தங்கியிருந்த காலத்தில் அவர்களுக்கு, கந்தசஷ்டிவிழா முடிந்ததும் நேரே காசியம்பதிக்கு யாத்திரை சென்று கங்காஸ்நானமும், விசுவேசர், கேதாரேஸ்வரர் வழிபாடும்செய்து கங்கை எடுத்துவர வேண்டுமென்ற வேட்கை திருவுளத்து உதித்தது. அதனை விரைவில் செயற்படுத்தும் முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன. ஆண்டுதோறும் ஐப்பசியில் வரும் கார்த்திகை நாளில் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானமவர்கள் தம் செலவிலேயே புள்ளிருக்கு வேளூரில் ஸ்ரீ செல்வமுத்துக்குமரனுக்கு அபிஷேகம்செய்துமகிழ்வதுண்டு. அதேபோல இவ்வாண்டும் 4—11—71 அன்று கார்த்திகை வழிபாடு சிறப்பாக நடத்தப்பட்டது. அன்று அவர்கள் வாரந்தோறும் மேற்கொண்டிருந்த குருவார மௌன நாளாக அமைந்தது; வைத்தீஸ்வரன்கோயில் வழிபாட்டுக்கு எழுந்தருளியிருந்த காலத்தில் தம்முடன் காசிக்கு யார்யார் வருதல் வேண்டுமென்று குறிப்பிடும்பொழுது அங்குப் பக்கத்தில் நின்றிருந்த சென்னை வித்துவான், திரு. ப. வடிவேல் பிள்ளை அவர்களையும் உடன் வருதல் வேண்டுமென்ற கட்டளை பிறந்தது. திரு, பிள்ளை அவர்கள் தனக்குச் சில வேலைகள் இருப்பதாகவும் அடுத்த முறை ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தில் காசி யாத்திரை செல்லும்பொழுது உடன் வருவதாகவும் கூறிக்கொண்டார். "திருவருள் அழைக்கிறது ; சென்று வருவோம்" என்பதாக ஒரு தாளில் எழுதி அவர்களும் உடன்வருதல் வேண்டுமென்ற குறிப்பு உணர்த்தப்பட்டது. இந்த நினைப்பு அவர்களுக்கு முன்னுணர்வாக திருவருள் உணர்த்த எழுந்ததென்பது பின்னர் தான் எங்களுக்கு அறியக்கூடுவதாக இருந்தது. சுந்தரர், தம்வாழ்க்கையில் திருவஞ்சைக்களத்தப்பனை வழிபட்டு நிற்கும் காலத்தில் முன்னுணர்வாக அவருக்கு இவ்வுலக வாழ்க்கையில் வெறுப்புணர்வு தோன்றியதும் பெருமானிடமிருந்து அவருக்கு அழைப்பு வந்ததும் அறிவோம். அதனை ஒத்த அனுபவமாகக் கொள்ளக்கிடக்கிறது இந்நிகழ்ச்சி.

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் உறுதியாகச்செயலாற்ற திருவுளங்கொண்டபடியே 6-11-71 சனிக்கிழமை தருமையைவிட்டு ஸ்ரீ காசி யாத்திரைக்குப் புறப்பட்டு சென்னையிலிருந்து 7-11-71 ஞாயிறு காலை ரயில் மூலம் சென்றதில் 10—11—71 புதனன்று காலை 7-30 மணி அளவில் ஸ்ரீ காசி சென்றடைந்தார்கள். வழக்கம்போல ஸ்ரீ காசியில் உள்ள திருப்பனந்தாள் ஸ்ரீ குமார சுவாமி மடத்தில் மிகச்சிறப்பாக வரவேற்கப்பட்டார்கள். இரயிலிலும் ஸ்ரீகாசியில் தங்கியிருந்த காலத்தும் திருமுறைச் சிந்தனையும் ஆதீன குருமுதல்வர்கள் அருளிச்செய்திருக்கும் பாடல்கள், சாத்திரங்கள் இராமாயணம் போன்ற நூல்களிலிருந்தும் அருளுபதேசங்கள் செய்தார்கள். புதன் பிற்பகலில் அவர்கள் சிந்தனையைத் தூண்டும் கருத்தாக அமைந்தது, தருமை 10 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீசிவஞானதேசிக பரமாசாரியசுவாமிகள் அருளிய தோத்திரப் பாடல்களைக் கருவாகக்கொண்டது. அது ஸ்ரீ காசியில் வந்து தங்கித் தரிசனம் செய்திருந்து உயிர்விடுதல் வேண்டும். உயிர்விடும் நேரத்தில் அன்னபூரணி அம்மை தம்முடைய மடியிலே தம்மைக் கிடத்தித் தம் முந்தானையால் விசிறி, அந்தநேரத்தில் நிகழக்கூடிய தம்களைப்பைப் போக்கவும், காசி விசுவேசன் வலதுசெவியில் தாரகமந்திரத்தை உபதேசிக்கவுமாக இந்நிலையில் உயிர்பிரிதல்வேண்டும் அது இந்தப்பிறவியிலேயே கிடைக்குமா என்று ஏங்குவதாக உள்ளபகுதி. இந்த சிந்தனை வந்ததும் விளக்கங்கள் கூறி இந்தப்பேறு நமக்குக் கிட்டுமா என்று சிறிதுபொழுது சிந்தித்துக் கண்மூடியிருந்து பிறகு வேறு சில கருத்துக்களையும் விளக்கி யருளினார்கள்.

பரிபூரணம் எய்தியமை :

இவ்விதமாகப் பலப்பல நற்சிந்தனைகளின் முடிவில் பிற்பகல் 4 மணி அளவில் உடல் நலங்குன்றியதுபோலக் காணப்பட்டார்கள். தக்க மருத்துவர்களை அழைத்துப் பலவகையிலும் சிகிச்சை அளிக்கப்பட்டது. இரவு 7-30 மணி அளவில் கயிலைப் பெருமான் இவர்களைத் திருவடிப் பேற்றுக்கு அழைக்க, இறைவன் திருவடிகளைச் சிந்தித்துக்கொண்டே சுத்தாத்வைத சைவசித்தாந்த பரமுத்தி நிலையாகிய பரிபூரணநிலை எய்தினார்கள். பரிபூரணம் அடைந்த செய்தி திருப்பனந்தாள் காசிமடத்திற்கும், தருமைக்கும், சென்னை நிலையத்தில் எழுந்தருளியிருந்த ஸ்ரீமத் சுவாமிகள் அவர்களுக்கும் தொலைபேசி வழி தெரிவிக்கப் பெற்றது. பிற ஆதீனங்களுக்கும் திருக்கோயில்களுக்கும் அங்கிருந்து செய்தி அறிவிக்கப்பெற்றது.

திருமேனி வருகை :

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்களின் திருமேனி விமானம் மூலம் 11—11—71 வியாழன் மாலை 6 மணி அளவில் சென்னை,

மீனம்பாக்கம் விமான நிலையத்திற்குக் கொண்டுவரப்பட்டது. விமானமூலம் கொண்டுவருவதற்கு காசியில் ஸ்ரீ குமாரசாமிமடம் ஏஜண்ட் திரு. கல்யாணசுந்தரம் பிள்ளை, காஞ்சி காமகோடி பீடம் ஏஜண்ட் திரு. செல்வம் அய்யர், முதலியோர் பெரிதும் உதவினர். சென்னை சமயப் பிரசார நிலையம் வித்துவான், ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகளின் பெருமுயற்சியின் காரணமாக விரைவில் அந்தப் புனித பூத உடல் உடனே தருமைக்கு எடுத்து வருவது இயல்வதாயிற்று. காசி நகர போலீஸ் மற்றும் அதிகாரிகள் பேரீடு பாட்டுடன் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்களின் திருமேனியை எடுத்து வருவதற்கு மிகவும் உதவியதோடு, அதனைக் கிடைத்தற்கரிய பாக்கியமாகவும் புண்ணிய கைங்கரியமாகவும் கருதினர். விமான நிலைய அதிகாரிகள் ஒவ்வோரிடத்திலும் ஈடுபாட்டுடன் உதவி செய்தனர். விமானம் அங்கிருந்து புறப்படும் காலத்தும் வந்து இறங்கும் காலத்தும் இடையறுது சோக கீதங்களை ஒலிபரப்பித் தங்கள் மரியாதையை அவர்கள் தெரிவித்துக் கொண்டனர். சென்னை சமயப்பிரசார நிலையம் ஸ்ரீமத் தம்பிரான் சுவாமிகள் அவர்களும் மற்றும் உயர்நீதிமன்ற நடுவர்கள், தொழிலதிபர்கள் மற்றும் பல அரசியல் தலைவர்கள், அதிகாரிகள் இந்து சமய அறநிலைய அதிகாரிகள் முதலிய பெருமக்கள் பலரும் ஆயிரக் கணக்கில் விமான நிலையத்திற்கு வந்திருந்து மலர் மாலை வைத்து மரியாதை செலுத்தினர். தமிழ் நாட்டு முதலமைச்சர் சார்பாகக் காட்டூர் திரு. கே. வி. இராமையா முதலியார் அவர்களும், அறநிலைய அமைச்சர் மாண்புமிகு திரு. கண்ணப்பன் அவர்கள் சார்பில் அவரது நேர்முக உதவியாளரும், நெடுங்காடு சுந்தரேச முதலியார் அவர்களும் மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தினர்கள்.

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியின் திருமேனி அன்றிரவு 1½ மணியளவில் தருமைக்குக் கொண்டுவரப்பட்டது. வரும்வழியில் பாண்டிச்சேரி, சிதம்பரம், சீர்காழி வைத்தீஸ்வரன் கோயில் போன்ற இடங்களில் நள்ளிரவில் கொட்டும் மழை என்றும் பாராது திரளான அன்பர்கள் கூடி நின்று மலர் மாலைகள் அணிவித்து ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்களுக்குத் தங்கள் இறுதி மரியாதையினைத் தெரிவித்துக் கொண்டார்கள். தருமையில் தரங்கம்பாடி சாலையிலுள்ள ஸ்ரீ சண்முகம் வளைவிலிருந்து திருமடத்திற்கு உரிய மரியாதைகளுடன் கொண்டுவரப்பெற்று சித்திராசனத்தில் எழுந்தருளுவித்துத் தீபாராதனை செய்வித்து அன்பர்கள் தரிசனத்திற்கு ஏற்ற வகையில் எழுந்தருளுவிக்கப் பெற்றது.

புதிய பட்டம் ஏற்பாடு :

11—11—71 அன்று மாலை 4 மணி அளவில் தவத்திரு. குன்றக்குடி அடிகளார் அவர்கள், திருப்பனந்தாள் காசிவாசி ஸ்ரீலஸ்ரீ அருள் நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள், இளவரசு ஸ்ரீமத். முத்துக்குமாரசாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் ஆகியோர் தருமைத்திருமடத்துக்குளெழுந்தருளினர்கள். ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள், இளவரசு சுவாமிகள் தவத்திரு. குன்றக்குடி அடிகளார் ஆதீனத்திருக்கூட்டத்து அடியவர்களுடன் கலந்து அடுத்த பட்டத்திற்குரியவரைத் தேர்ந்தெடுக்க முனைந்தனர். மகாசந்நிதானமவர்கள் தாம் பரிபூரணம் ஆவதற்குமுன் தம் நினைவுவற்றுத காலத்தில் தமக்கு அடுத்தபட்டத்துக்குரியவரைத் தீர்மானிக்க இயலாவிட்டால், ஆதீனத் திருக்கூட்டத்து அடியவர்கள் எல்லோரும் ஒன்றுகூடி அத்திருக்கூட்டத்தில் எல்லா வகையிலும் தகுதிபெற்ற அடியவர் ஒருவரைத் தேர்ந்தெடுப்பது மரபு. அவ்விதமே ஸ்ரீ சொக்கநாதப் பெருமான் திருமுன்பு ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருணந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் தலைமையில், ஆதீனத் திருக்கூட்டத்து அடியவர்கள் எல்லோரும் ஒன்றுகூடி வழிபாடியற்றி, திருமடத்து மேலாளர், தலைமை மேற்பார்வையாளர் முதலியோர் உடனிருக்க, சென்னை சமயப் பிரசார நிலையம் வித்துவான், ஸ்ரீமத். மௌன சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்களை 26 ஆவது குருமகாசந்நிதானமாக எழுந்தருளச் செய்வதெனவும், ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் எனத் திருநாமம் சூட்டுவதெனவும் ஒருமனதாகத் தீர்மானித்தனர்.

இதற்கிணங்க இந்த ஆதீன சம்பிரதாயப்படி 12—11—71 அன்று காலை 8-30 மணி அளவில் ஸ்ரீமத் மௌன சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்களுக்கு ஞானபிஷேகம் செய்து, தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் என்ற திருநாமமும் சூட்டுவிக்கப்பெற, சுவாமிகள் 26 ஆவது குருமகாசந்நிதானமாக ஞானபீடாதிபத்யத்தை ஏற்றருளினர்கள்.

இந்த வைபவ காலத்தில் குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களும், திருவாவடுதுறை ஆதீனம் பிரதிநிதியாக மாயூரம் ஸ்ரீ மாயூரநாதசுவாமி தேவஸ்தானம் கட்டளை விசாரணை ஸ்ரீமத். சுப்பிரமணியத் தம்பிரான் சுவாமிகள் அவர்களும், ஆதீன அடியவர்களும், பெருமக்களும், பொதுமக்களுமாக ஆயிரக்கணக்கில் அன்பர்கள் கூட்டம் கண்டு மகிழ்ந்தது.

திருமேனி அடக்கம்: காலை 10 மணி அளவில் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி திருமேனி அபிஷேக ஆராதனைகள் செய்விக்கப்பெற்று திருவீதி வலம் செய்வித்து, மேலவீதியில் உள்ள ஸ்ரீ ஆனந்த பரவச தேசிகர் குருமூர்த்த ஆலயத்தின் அருகில் குருமூர்த்தமாக எழுந்தருளுவிக்கப்பெற்றது.